Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 8

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 10

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1356, ரஜப்மீ 1937வருஷ அக்டோபர்மீ

1. அல்குர்ஆன் ... 225 2. அல்ஹதீது ... 227
3. மிஅராஜுன்னபீ (ஸல்.) ... 229
4. காதியானில் யஜீதியத்தின் தோற்றம் ... 232
5. இந்திய முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது? ... 235
6. இஸ்லாமல்லாதாருடன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? ... 238
7. ஹஜ்ரத் உமாமாபின்து அபில் ஆஸ் (ரலி.) ... 241
8. பரிசுத்த வேதங்களில் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிய அறிக்கை ... 243
9. ஆஷிக்கே இஸ்லாமின் ஆச்சரியகரமானகதை 248
10. இஸ்லாத்தைப்பற்றி ஐரோப்பியஅறிஞர்களது அபிப்பிராயம் ... 249
11. ஜீவனுள்ளசமூகத்தின்ஜீவாதாரமானசெய்கை 251
12. மாதம் நூறு ரூபாய் ... 253
13. அம்புமாரியில் இறைவணக்கம் ... 257
14, 15, 16, 17 ... 258, 259, 260, 262

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	”	4 0 0
தனிப் பிரதி ...	”	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
208352
சென்னை-600 008

OFFICE OF THE ...
12 OCT 1937
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 8	ஹிஜ்ரி 1356 ரஜப் மீ 1937ஹு அக்டோபர் மீ	இதழ் 10

அல்குர்ஆன்

அல்லாஹ்தஆலா உங்கள்மீது புரிந்திருக்கும் நன்றியை ஞாபகப்படுத்திப் பாருங்கள் : நீங்கள் ஒருவருக்கொருவர் விரோதியாய் இருந்தீர்கள். பின்பு அல்லாஹ் உங்கள் ஹிருதயங்களில் பிரீதியை உண்டாக்கி விட்டான். இதுபோழுது அவன் கிருபையால் நீங்கள் சகோதிரர்களாய் விட்டீர்கள்.

(திருகுர் ஆன்)

அல்லாஹ்தஆலா முஸ்லிம்கள் மீது புரிந்திருக்கும் நன்றியை நோட்டமிட்டுப் பார்ப்போமாக. எவர்கள் தங்கள் குடும்ப விவகாரங்களில் மூழ்கி சதா போர்புரிந்து கொண்டிருந்ததின் பயனாக காட்டு மிராண்டிகளுக்குச் சமமானவர்களென்று கருதப்பட்டு வந்தார்களோ, இன்னும் எந்த வகுப்பினருக்கு தங்கள் தேசத்தைத்தவிர இதர இடங்களில் செல்வாக்கில்லா திருந்ததோ அன்னோருக்கிடையே எற்பட்டுள்ள ஒற்றுமையானது ஓர் புதிய் மாறுதலை உண்டுபண்ணி வைத்து விட்டது. இதன் பயனாய் அன்னோர் அபசாகூழி புரியும் நோக்கம், ஜெயபேரிகை கொண்டாடும் எண்ணத்துடன் அறபியாவின் எல்லையை விட்டும் கடந்து ஆசியா, ஆப்ரிக்காவின் பற்பல பாகங்களில் . பரவமுற்பட்டனர். சுருங்கக்கூறின் சொற்பகாலத்திற்குள் ஐரோப்பாவை நோக்கவும் ஆரம்பித்தனர். எனவே, தங்கள் ஊர்-தேசத்திற்குள் ஏற்படும் விவகாரங்களை சமாளித்துக் கொள்வதற்குச் சக்தி பெற்றிருத அந்த அறபியர் யாதொரு யுத்த தளவாட சாமான்களின்றி சக்திவாய்ந்த பல வல்லரசுகளுடன் எதிர்த்து ஜெயக்கொடி நாட்டினார்களென்றால் இவ்வொற்றுமையின் சக்தியை என்னென்று கூறுவது. இவ்இஸ்லாமிய சகோதர வாஞ்சையின் காரணமாய் அன்னோர் மிக மிக பாக்கிரம சுத்தவீர்ய முடையவர்களாய் விட்டனர்; சரித்திர பூர்வகமாக விளங்கிய மகுடாதி மன்னர்களெல்லாம் சாண்புக ஆரம்பித்து விட்டனர்.

எதுவரை முஸ்லிம்களில் மார்க்க சம்பந்தமான அறிவு முன்னேற்றமடைந்து வந்ததோ அதுவரை அவர்களின் பாதம் முன்னேற்றத்தின் பக்கல் சென்றுகொண்டே யிருந்தது,

அவர்கள் கோரிய பலன்களை அடைந்து கொண்டே வந்தார்கள். ஆனால், முற்காலத்தவர்களில் காணப்பட்டுவந்த இஸ்லாமிய ஒற்றுமை வெகுதூரம் வரை அன்னோரைவிட்டு நீங்கி விட்டபின், ஒரு முஸ்லிமுக்கு இதரர்கள் மீது ஏற்படவேண்டிய வாஞ்சை நீங்கிய பின்பு முஸ்லிம்களுக்கு விரோதமாய் இதரர்கள் அன்னோரைத்தாக்க ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் இதரர்களின் கண்களுக்கு இலேசாகக் காணப்பட முற்பட்டனர். முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இச்சம்பவம் புதிதானதல்ல; அவர்கள் சகோதிர வாஞ்சையை மறந்ததினால் ஏற்படக்கூடிய பயனாகவேதான் இருந்தது. அல்லாஹ்தஆலா முஸ்லிம்களை நோக்கி "அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் வழிப்படுங்கள். உங்களுக்குள் சண்டை சச்சரவு செய்து கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்து கொள்வீர்களாயின் உங்கள் மானம் மரியாதை போய்விடும்" என்பதாக மேலே கூறப்பட்டுள்ள விஷயமாய் முன் அறிக்கை செய்திருக்கிறான். அல்லாஹ்தஆலாவின் இவ்வறிக்கையிலும், முஸ்லிம்கள் அல்லாஹ், ரஸூலுக்கு வழிபட்டு நடந்தபின் தங்களுக்குள் ஒற்றுமையைக் கடைபிடிப்பது தான் மிக மிக பிரதான விஷயமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, முஸ்லிம்கள் பராக்கிரமசாலிகளாய் திகழ்ந்து விளங்கியதற்குள்ள காரணம் அவர்களிலேற்பட்டுள்ள ஒற்றுமை, சகோதிர வாஞ்சை தான் என்பதும், இதன் பயனாய் ஒரு முஸ்லிம் இதரருக்காக தியாகஞ் செய்ய முற்பட்டுக் கொண்டிருந்தார்களென்பதும் நன்கு புலனாகின்றது. முற்காலத்தவர்கள் ஈமான்-உறுதியுடையவர்களாயிருந்ததால் சதாவும் முன்னேற்றத்தின் பக்கலே சென்று கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் நாம் உண்மை முஸ்லிம்களாய்த் திகழ்ந்தோம். அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிப்படுவதுடன் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடைய போதனையையும் குர்ஆன்ஷரீப் கட்டளையிட்டிருப்பதையும் சிரமேற்றாங்கி நடப்பவனே உண்மை முஸ்லிமாவான் என்பது திண்ணம். இதனைப் பின்பற்றி நடந்ததினால்தான் அக்காலத்தவர் உண்மை முஸ்லிம்களாய்த்திகழ்ந்தனர். அவர்கள்மீது அல்லாஹ்வின் கிருபை என்னும் 'றஹ்மத்' இறங்கிக்கொண்டிருந்தது. முஸ்லிம்களின் சரித்திரங்களைப் புரட்டிப் பார்ப்போமாயின் இவ்வுண்மை இனிது புலப்படாது போகமாட்டாது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும், இதர சஹாபாக்களும் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்து மதீனமா நகர் வந்தபொழுது முஹாஜிர், அன்ஸார்களுக்கிடையே ஏற்பட்டுள்ள சகோதிர வாஞ்சை, ஒற்றுமை வாயளவில் இல்லாது செயலில், அனுஷ்டானத்தில் சிறந்து விளங்குவதாக இருந்தது; ஒருவர் இதரரின் சொத்து சுதந்திரத்தில் சரி பாதிபாகம் அடைபவராகவுமாய்விட்டார். தூர் அதிர்ஷ்டவசமாக இதுகாலை நாம் இஸ்லாமிய போதனையை விட்டு வெகுதூரம் பின்சென்று விட்டதன் பயனாக, நம்முடன்பிறந்த சகோதரர்களுக்கு, அல்லாஹ்தஆலாவினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பங்கைக் கொடுப்பதற்குக் கூட முன்வராது தானே விழுங்கி ஏப்பமிடப் பார்க்கிறோம். இச்சுயநல பேராசை என்னும் பிசாசம் நம்மைப் பீடித்திருப்பதால்தான் நாம் இவ்வாறான தாழ்ந்த நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறோம்.

இதுகாலை நம்மை யாரும் மிகைத்து விடுவார்களாயின் அதற்கு நம்முடைய இந்தச் செயல்தான் காரணமாகும் என்பதை தக்கவாறு உணர்வோமாக. நம்மிடையே விதர்ப்பம், ஒற்றுமைக் குறைவு ஏற்படாதிருக்குமாயின் எந்த சக்தியும் நம்மை பாதாளத்தில் தாழ்த்திவிட முடியாது.

இதுகாலையும் நம் முஸ்லிம் சமூகத்தினரிடையே காணப்படும் ஒற்றுமைக் குறைவு தான் அன்னோரை இலௌகிக வைதீக விஷயங்களில் மிக மிக தாழ்ந்த நிலைமைக்கே கொண்டு சென்று கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் சகோதரர்களிடையே சண்டை சச்சரவுகள் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. இதுவன்றி, ராஜிய விஷயத்திலும் நம் முஸ்லிம்கள் தினே தினே படிப்படியாய் கீழே தள்ளப்பட்டுக்கொண்டே வருகின்றனர். இத்தூர் அதிர்ஷ்டத்தைப் போக்குவதற்கு ஒற்றுமைதான் மிக மிக அவசியமாகும். ஆகவே, நம் முஸ்லிம் நேயர்கள் சமூகச் சச்சரவு, விகற்பம் ஆகியவைகளை அகற்றி ஒற்றுமையுடன் வாழும் தினமே நம் சமூகத்தின் சுபதினமாகும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அதன்படி வாழ வேண்டியது மிக மிக ஆவசியமாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அல்ஹதீது

ஒருவன் தனக்குப் பிரியமானதை தன் சோதிரமுஸ்லிமுக்கும் பிரியமான தாகக் கருதும் வரை அவன் பரிபூர்ண மூமினைகக் கருதப்படமாட்டான். எவனுடைய நா, கை யைவிட்டு முஸ்லிம்கள் விடுதலை அடைந்திருக்கின்றார்களோ அவன்தான் உண்மை முஸ்லிமாகும்.
(அல்ஹதீது.)

சத்தியத்தூதர், உத்தமக் கோமான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இப் பூவுலகின் கண் ஜனனம் புரிவதற்குமுன் உலகின் நாலு பாகங்களிலும் யுத்தம் சதி இவைகளின் பெரும் வெள்ளம் பெருகிக்கொண்டேயிருந்தது. சத்தியம் அசத்தியம் இவைகளுக்கிடையே எவ்வித வித்தியாசமும் காணப்படாதிருந்தது. அது பொழுது சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் உலகினுக்கு சமாதானத்தின் அறிவைப் புகட்டி, மக்கள் யாவரும் ஒற்றுமை, சகோதரவாஞ்சையுடன் வாழ்வதற்கான பாடத்தைக் கற்பித்துக்கொடுத்தார்கள். இப்போதனையை சங்கைவான்களான சஹாபாக்கள் ஏற்று சிந்தையில் கொண்டு சிறப்புற்று விளங்கினர்கள்.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் நடுத்தரமானதையே அதிகம் விரும்பிக்கொண்டிருந்தார்கள். மிதமிஞ்சிச் செல்வதையும், ரொம்ப கீழ்நோக்காகப் போவதையும் அதிகம் வெறுப்பவர்களாயிருந்தார்கள். இதனல் ஒரு மனிதர் அதிகமாக வணக்கம் புரிவதையும் விலக்கிக்கொண்டிருந்தார்கள். அதாவது,

மானிடர்காள்! உங்கள் சக்திக்கு அதிகமாக எதையும் செய்யாதீர்கள். அல்லாஹ் தஆலா நற்காரியங்களுக்குக் கூலிகொடுப்பதில் சடைவதில்லை. ஆனல் நீங்கள் சடைந்துவிடுவீர்களாயின் அவனும் சடைந்துவிடுகிருன். அமல்களில் எவ்வளவு கம்மியானதாக இருந்தாலும் நேமமாக இருப்பதையே அல்லாஹ்தஆலா விரும்புகிருன். என அறிவித்துள்ளார்கள்.

ஹஜ்ரத் அல்லாமா இமாம் அஹ்மத் சாலிஹ் ஜஸாயிரி (றஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், நிச்சயமாக அல்லாஹ் தஆலாவை வணங்குவதைவிட மேலான காரியம் யாதொன்றுங் கிடையாதென்றும், இவ்விஷயத்தில் மானிடன் எவ்வளவு தூரம் பிரயாசை எடுத்தபோதிலும் அது மிகக் குறைவானதேயென்றும், ஆனல் மானிடன் அதிகமாய் வணக்கம்புரிவதுகொண்டு ஒருக்கால் அவனது மனதில் சடவு ஏற்பட்டு ஒரே அடியாய் வணக்கத்தை விட்டுவிடுவதற்கு ஹேது உண்டாய்விடக்கூடுமென்பதைக் கருதியே சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் வணக்கத்தில் அதிகமாக ஈடுபடவேண்டாமெனக் கூறியிருக்கிருர்களென்றும், மக்களில் சிலருக்கு ஆரம்பத்தில் வணக்கத்தில் அதிகப் பிரீதி ஏற்பட்டு இரவு பகலாய் அதில் மூழ்கியிருந்து கடைசியாக பயமேற்பட்டு தங்கள் மீது கடமையாகவுள்ள வணக்கங்களையும் விட்டு உட்கார்ந்திருப்பதை நாம் பார்த்திருக்கிருேமென்றும், இதற்காகத்தான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், அமல்களில் கம்மியாகவிருந்தாலும் சதாவும் நடைபெறக்கூடியவைகளே அல்லாஹ் தஆலாவுக்கு மிகமிகப் பிரியமானதாய் இருக்கிறதென்று கூறியுள்ளார்களென்றும் அறிவித்திருக்கிருர்கள்.

மார்க்க சம்பந்தமாகவும், சற்குணசம்பந்தமாகவும் அமானிதத்துக்குப் பங்கம் விளைவிப்பது, ஒருவனுடைய ஐசுவரியத்தை அபகரித்துக் கொள்வது, ஒரு முஸ்லிமுடைய மானத்தைப் போக்குவது இவைகளைவிட தாழ்ந்த—கேவலமான காரியம் யாதொன்றுங் கிடையாது. இது சம்பந்தமாய் சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், யாரும் உங்களிடம் நம்பிக்கை கொண்டு அமானிதம் வைத்தால் அதனை தக்கமுறையில் நிறைவேற்றி விடுங்கள். உங்களிடம் சதி செய்தவரிடம் சதியாலோசனை புரியாதீர்கள். என்று கூறியுள்ளார்கள்.

ஹஜ்ரத் காலீபுலைல் பின் இயாள் (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், இந்த ஹதீது தங்கள் சற்குணத்தைச் சுத்

தம் செய்வதற்குள்ள தக்க ஆயுதமாக அமைந்திருந்தது எனக் கூறிவிட்டு, தாங்கள் வாலிப திசையில் திருடர்களுக்கெல்லாம் தலைவராக இருந்ததுடன் பக்தாத் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஓர் காட்டில் வாசஞ் செய்துவந்ததாயும், அதுபொழுது ஒருநாள் தாங்கள் கூடாரத்தில் உட்கார்ந்திருக்குங்கால் ஷாம் தேய வியாபாரி ஒருவர் அங்கு வந்து, "பெரியாரே! இது பயங்கரமான காடாக இருக்கிறது; என்னிடம் இது பொழுது 40,000 தீர்ஹங்கள் இருப்பதால் இக்காட்டில் என் உயிர் பொருள் இவைகளைக் காப்பாற்றிக்கொண்டு நான் செல்ல முடியாதவனாயிருப்பதால் தங்களை பெரிய மனிதராக மதித்து இந்த நாற்பதாயிரம் திம்ஹம்களையும் தங்களிடம் அமானிதமாக வைக்கிறேன்; குறிப்பிட்ட நேரத்தில் என்னுடைய அமானிதத்தை என்னிடம் திருப்பிக்கொடுத்து விடுவீர்களென்றும் ஆதரவுவைக்கிறேன்" எனக் கூறி அவைகளை தங்களிடம் கொடுத்து விட்டுச் சென்றதாகவும், ஒருவருடத்திற்குப் பின்னர் அவர் திரும்பிவந்தபோது அவருடைய முகத்தைப் பார்த்தவுடன் அவர் தங்களிடம் கொடுத்திருந்த அமானிதம் ஞாபகத்திற்கு வந்து உடனே, நாம் தேடிப் போகாமல் வலிய அந்த நாற்பதாயிரம் திர்ஹம் கைக்கு வந்தது; நானே திருடர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கும் நிலைமை அந்த மனிதனுக்குத் தெரியாது. ஆகவே, இதுபொழுது அம்மனிதனைக் கொலை புரிந்துவிடவேண்டுமென்னும் எண்ணம் ஹஸ்ரத் மனதிற் தோன்றியபோது ஏ புலைலே! நீர் அந்த ஷாம் வியாபாரியை கொலைபுரிந்து அவனுடைய சொத்துக்களை அபகரித்துக்கொள்ளக்கூடும். ஆனால் அந்த மனிதன் உம்மை பெரிய மனிதரெனக் கருதி, தன்னுடைய ஐசுவரியங்களை உம்மிடம் அமானிதம் வைத்திருக்கிறான்; நீர் அவனுடைய நல்லெண்ணத்தை மண்ணுடன் கலந்து விடுவதற்கு முற்படுகிறீர் எனத் தோன்றுகிறது; நீர் இவ்வாறு செய்யலாகாது; நீர் பெரும்பாவஞ் செய்யக்கூடிய மனிதனாகவிருந்தும், அவன் அல்லாஹ்வுக்காக உன்மீது நல்லெண்ணம் வைத்திருக்கிறான்; அந்த தயாபரனான அல்லாஹ்தஆலா உன் பாவங்களை பொறுத்துவிடக்கூடும்; அந்த ஷாம் வியாபாரியின் நல்லெண்ணத்துக்கு ஹானி ஏற்படாது செய்வாயாகில் அதுபொழுது உன்னுடைய நாயன் உன்னை மன்னித்தருள்புரிவான் என்னும் அசரீரி சத்தம் ஒன்று தங்கள்காதில் விழுந்ததாயும், இந்தசத்தத்தை செவியுற்றவுடன் அவர்கள் திரேகம் நடுக்கத்தில் வந்து, யாராகிலும் உங்களிடம் நம்பிக்கைகொண்டு அமானிதம் வைத்தால் அந்த அமானிதத்தை நிறைவேற்றி வைத்துவிடுங்கள் என்று நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ள அருமொழிகள் அவர்களை ஆழிய சமுத்திரத்தில் ஆழ்த்திவிட்டதாகவும், உடனே, ஷாம் வியாபாரியிடம் அந்த அமானிதத்தை நிறைவேற்றிவிட்டு தாங்கள் புரிந்து வந்த பாவச் செயல்களுக்காக அல்லாஹ்த ஆலாவிடம் மன்னிப்புத் தேடினார்களென்றும் கூறியுள்ளார்கள்.

மக்களுக்காக தாய் தந்தையர்கள் மீதுள்ள கடமைகளில் பிரதானமும் முதன்மையானதும் மக்களுக்கு கல்வி கற்பிப்பதிலும் அன்னோரை நல்ல பழக்கமுடையவர்களாய்ச் செய்வதிலும் பிரதான முயற்சி எடுத்துக்கொள்வதாகும். இதுதான் மிகமிகப் போற்றத்தக்க சேவையாகும். ஆனால் சில அறியாமக்கள் தங்களுக்குள்ள செல்வாக்கையும் ஐசுவரியங்களையும் பெரிதாக மதித்து இந்த ஐசுவரியம் தங்கள் சந்ததியினருக்குப் போதியதாக இருக்க, எதற்காக கல்வி கற்பிப்பதிலீடுபடவேண்டுமெனக்கருதுகின்றனர். இது வீண் மௌடிகக் கனவேயாகும். இதன் முடிவு மக்களுக்கு பெரும் தீங்கையே விளைவிப்பதாகும். "தாய் தந்தையர்கள் தங்கள் மக்களுக்கு கல்வி கற்பித்து அவர்களைச் சத்தொழுக்கமுடையவர்களாய்ச் செய்வதைவிட நற்காரியம் வேறொன்றுமில்லை" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். மற்றொரு ஹதீதில் மக்களுக்கு கல்வி போதித்து நல்லொழுக்கங்களை கற்பித்துக்கொடுப்பது தானதர்மங்கள் செய்வதைவிடவும் மேலானதாக இருக்குமென்றும் கூறப்பட்டிருப்பதால் மக்களைப்பெற்ற தாய் தந்தைகள் தங்கள் சந்ததியினர்களின் பிற்கால வாழ்க்கையின் பக்கல் நோட்டமிடுவார்களாக.



மிஅராஜுன்னபீ (ஸல்)

இற்றைக்குச் சற்றேறக்குறைய 1360 வருஷங்களுக்கு முன்னர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ரஜப் மாதம் 27உ இரவில் மிஅராஜ் என்னும் விண்ணுலக யாத்திரை செய்தார்கள். இந்த யாத்திரையினால் முஸ்லிம்கள் அடைந்த அனுக்கிரகங்களையும், அவைகளால் ஏற்படும் இம்மை மறுமைப் பயன்களையும் விபரமாகக் கூறுவது இச்சிறு வியாசத்தில் முடியாத காரியமாகும். என்றாலும் இதன் மகத்துவம் எம்மாத்திரம் என்பதைப் பொதுப்படத் தெரிந்து கொள்வதற்கு, முஸ்லிம் உலகம் முழுவதும் இவ்விரவைக் குறித்து வருஷந்தோறுங் கொண்டாடுவதும், வலிமார்கள் முதலிய பெரியார்கள் இவ்விரவைச் சிறப்பாகவும், இந்த மாதத்தைப் பொதுவாகவும் கொண்டாடுவதும் விசேஷமாக தொழுகை, நோன்பு முதலிய வணக்கங்களிலீடுபடுவதும் போதிய சான்றாகும். மேலும், இவ்விரவின் மகத்துவத்தையும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது விண்ணுலக யாத்திரையினால் முஸ்லிம் உலகிற்கேற்பட்டுள்ள அனுக்கிரகங்களையும் குறித்து "தன்னுடைய அடியாரை இரவில் அழைத்துச் சென்றவன் தூயவன்', என்பதாகத் திருமறைத் தெளிவாய்க் கூறி இருக்கும்போது இதனைப்பற்றி நாம் அதிகம் எழுதத் தேவை இல்லை.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், அவர்களுக்கு முன்னுள்ள சில நபிமார்களும் பூதவுடலுடன் வானுலகஞ் சென்றிருக்கிறார்கள். ஆயினும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிஅராஜுக்குச் சென்றதைக் குறித்து மார்க்க பக்தர்களும், மார்க்க பக்தியில்லாதவர்களும், பிறமதத்தாரும் அளித்துள்ள முக்கியாம்சத்தைப்போல் இதர நபிமார்கள் வானுலகஞ் சென்றதைக் குறித்து அத்துணை முக்கியாம்சம் இவ்வுலகிலேற்படவில்லை. இதற்குக் காரணம் பலவுள: மார்க்க பக்தர்கள் இதனைக்குறித்துச் சந்தோஷங் கொள்வதற்குக் காரணமென்னவெனில், நாயகம் (ஸல்.) அவர்கள் மிஅராஜுக்குச் சென்றதன் மூலமாக 1. கஅபாவிற்கும், பைத்துல் முகத்தஸிற்கும் நபியாக இருக்கிறார்கள். 2. பைத்துல் முகத்தஸிற்கு வாரிசுகாரர்கள் என்று கருதப்பட்டுவந்த யூதர்களது ஆதிக்கம் இதன் மூலமாக ஒழிக்கப்பட்டு, பனூ இஸ்மாயீல்களிடம் ஒப்புவிக்கப்படுகிறது. .3 குறைஷிகளுக்கு நல்ல வார்த்தைகள் உபதேசங்கள் மூலமாகப் பிரசாரம் செய்வது நிறுத்தப்பட்டு, நாயகம் (ஸல்.) அவர்களிடம் அவர்கள் பலமுறையும் வேண்டிக்கொண்ட "தெய்வ வேதனை" வருவதற்குரிய காலம் நெருங்கிவிட்டது என்பதற்குரிய அறிக்கை. 4. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத்துச் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பன போன்ற அநேகம் காரியங்கள் இதிலடங்கி இருக்கின்றனவாதலின் மார்க்க பக்தர்கள் தங்களது நோக்கம் சித்தியாகுவதைக் குறித்துச் சந்தோஷமடைகின்றனர். இவைகளெல்லாம் மார்க்க பக்தி யற்றவர்களுக்கும் பிற மதத்தாருக்கும் அதிருப்திகரமானவைகளாதலால் இதனை அடியுடன் மறுக்கவும்,

இதன்மூலமாக சன்மார்க்கத்திற்கு அபகீர்த்தியை யுண்டுபண்ணி விடவேண்டுமென்றும் விரும்புகின்றனர். இதற்காகப் பல விதமான ஆக்ஷேபனைகளைச் செய்கின்றனர். இதனைக் கனவு என்றும் கடாவுகின்றனர். சிலர் ஸ்தூலத்துடன் மிஅராஜ் நடைபெறவில்லை என்று நவிலுகின்றனர். வேறு நபிமார்களுக்கு இது நிகழவில்லை என்று இயம்புகின்றனர். இஸ்லாம் மதத்தை எதிர்த்து அதனை இல்லாதொழிக்கவேண்டும் என்று கருதும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் இவ்வாட்சேபனைகளை நாணயமாகவும், நாஸுக்காகவும் கூறுவதை முஸ்லிம்களிலுள்ள சிலரும் மெய்யென்று நம்பி அவர்களது இவ்விதண்டாவாதங்களைப் பின்பற்றத் தொடங்குகின்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கனவு கண்டிருந்தால் அல்லது ஸ்தூலத்துடன் சென்றதாகக் கூருமலிருந்தால் மக்காவிலுள்ள முஷ்ரிக்குகள் இதனைக் குறித்து ஆக்ஷேபனைகளைச் செய்தே இருக்கமாட்டார்கள். குறைஷியரின் சில வியாபாரத் தாவளத்தினர் ஷாம்தேசஞ் சென்றிருந்தனர். இத் தாவளக்காரர்களைக் குறித்து மக்கத்து முஷ்ரிக்குகள் "எங்களது தாவளக்காரர்களை இந்த இரவில் நீங்கள் வழியில் சந்தித்திருக்கவேண்டும்; அவர்கள் எங்கே இருந்தனர்? என்ன செய்துகொண்டிருந்தனர்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் விபரமாக விடையும் பகர்ந்தார்கள். அவ்வியாபாரத் தாவளத்தார்கள் திருமக்காவிற்கு வந்தபோது அவர்களிடம் முஷ்ரிக்குகள் இதனைக் குறித்து விசாரித்தபோது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய தகவல்களே அவர்களிடமிருந்து கிடைத்தன. நாயகம் (ஸல்.) அவர்கள் கனவுகண்டதாகக் கூறி இருப்பின் இவ்விதமான கேள்விகளை முஷ்ரிக்குகள் கேட்கவேண்டிய அவசியம் எழுவதற்கு இடம்கிடையாதென்பதை நாம் கூற வேண்டிய அவசியமில்லை.

தவிர நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கஃபாவிலுள்ள ஹஜ்றுல்அஸ்வதுக்குப் பக்கத்திலிருக்கும்போது ஹஜ்றத் ஜிப்ராயீல் (அலை.) அவர்கள் வந்து நாயகம் (ஸல்.) அவர்களை மிஅராஜுக்கு அழைத்துச் சென்றதாக ஹதீதுஷரீபில் வந்திருக்கிறது. ஹஜ்றத் உம்முஹானி (றலி.) அவர்கள் வீட்டில் படுத்திருக்கும்போது மிஅராஜுக்குச் சென்றதாக வேறு சில ரிவாயத்தில் வந்திருக்கிறது. இவ்வாறு வித்தியாசமாக இருக்கிற ரிவாயத்துகளைச் சிலர் கூறி இதனை ஆக்ஷேபனை செய்கின்றனர். இவர்கள் கூறுகிற ஆக்ஷேபனை சரியானதன்று. ஏனெனில் ஹஜ்றத் உம்முஹானி (றலி.) அவர்களது வாசஸ்தலம் ஹறம் ஷரீபிற்குள்ளிருந்ததாகச் சில பேரறிஞர்கள் கூறி இருக்கிறார்கள். இவ்வறிஞர்களது அபிப்பிராயப்படி மேற்கண்ட இருவகையான ஹதீதுகளுக்கிடையில் வித்தியாசமில்லை என்பது விளங்குகிறது. அறிஞர்களது அபிப்பிராயத்தை அங்கீகரிக்காவிட்டாலும்கூட இவ்விருவகை ஹதீதுகளுக்கிடையில் வித்தியாசமில்லை. ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிஅராஜ் என்னும் வானுலக யாத்திரைக்கு ஒரு முறை மட்டிலும் செல்லவில்லை. ஒன்றுக்கு அதிகமாகவே சென்றிருக்கிறார்கள். இவைகளில் பூத உடலுடன் சென்றது ஒரு முறை. பாக்கியுள்ள யாத்திரைகள் ஆத்மார்த்த யாத்திரைகளாகும். ஆகவே, ஹஜ்றத் உம்முஹானி (றலி.) அவர்கள் வாசஸ்தலத்திலிருந்து சென்றது ஆத்மார்த்த யாத்திரையாக இருக்கலாம். இதுபோலவே ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) ஹஜ்றத் முஆவியா (றலி) ஆகியவர்களது ரிவாயத்துகளை ஆதாரமாகக்கொண்டு சிலர் நாயகம் (ஸல்.) அவர்களது வானுலக யாத்திரை ஸ்தூலத்துடன் நிகழ்ந்ததில்லை என்று கூறு

கின்றனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒருமுறைக்கு அதிகமாகவே மிஃராஜுக்குச் சென்றிருப்பதால் இவ்விருவரது ரிவாயத்துகளும் ஸ்தூலத்துடன் சென்றதைக் குறிக்காமல் ஆத்மார்த்த யாத்திரையைக் குறிப்பதாகஇருக்கலாம். இவ்விபரப்படி இந்த ரிவாயத்துகளும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பூதஉடலுடன் வானுலக யாத்திரை சென்றதை மறுப்பதாக இல்லை. தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பூதஉடலுடன் வானுலக யாத்திரை சென்றதைக் குறித்து வந்துள்ள ஹதீதுகள் 'முத்தவாத்திரு'டைய எல்லைவரை வந்துவிட்டதால், இதனை அஹ்ல இஸ்லாம்களில் ஜும்ஹூர்கள் ஏக மனதாக அங்கீகரிக்கின்றனர். ஆகவே முஸ்லிம்கள் இதனை நிராகரிப்பதற்கில்லை.

தவிர, நபிமார்கள் வானுலகஞ் செல்லும் விபரம் திருகுர் ஆன் மட்டிலுமல்ல, இதர வேதங்களிலும் கூடச்சொல்லப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் பூதஉடலுடன் சென்ற விபரம் மார்க்கு, அத்தியாயம் 16, வசனம் 19-லும், ஹஜ்றத் இல்யாஸ்(அலை.) அவர்கள் பூதஉடலுடன் சென்றவிபரம் பைபிள் பழைய ஏற்பாடு இராஜாக்கள் 11-ல் இரண்டாவது அத்தியாயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் இத்ரீஸ் (அலை.) அவர்கள் பூதஉடலுடன் வானுலகஞ் சென்ற விபரம் கிஸ்லிஸ் வில்லியம் ஸ்மித் என்பவர் எழுதிய புத்தகத்தில் காணப்படுகிறது. ஆகவே, நபிமார்கள் பூதஉடலுடன் வானுலகஞ்செல்வதைக் கிறிஸ்துவர்களோ யூதர்களோ மறுப்பதற்கில்லை.

பூத உடலுடன் வானுலகஞ் செல்வது முடியாத காரியம் என்பதாகக் கூறுபவர்கள் வேதங்களை நம்பாமல் தங்கள் அறிவுகளைப் பின் பற்றுபவர்களே யாவார்கள். இவர்கள் தங்கள் கூற்றுகளுக்கு விஞ்ஞான சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொள்கின்றனர். இந்த சாஸ்திரத்தை நம்பி வேதங்களை நிராகரிப்பது மதியீனமாகும். ஏனெனில், இந்த சாஸ்திரங்களை எழுதிவைத்தவர்கள் எல்லோரும் மனிதர்களே யாவர். அவர்கள் தங்களது அறிவிற்கு எட்டியமட்டில் ஆராய்ச்சி செய்து தங்களுக்குத் தெரிந்ததை எழுதி வைத்தனர். ஆனால், இந்த சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள சில விதிகள் பிற்காலத்தில் தோன்றிய விஞ்ஞானிகளால் தவறானவைகளென்று ருஜுப்பிக்கப்பட்டு விட்டன. முற்காலத்தில் ஆகாய விமானங்கள், கம்பியில்லா தந்தி முதலியவைகள் புத்திக்கு எட்டாத விஷயங்களாகக் கருதப்பட்டன. இக்காலத்தில் அவைகள் எல்லோராலும் பிரத்தியக்ஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவைக ளாகிவிட்டன. ஆகவே, விஞ்ஞான சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு வேதங்களிலுள்ளதை நிராகரிக்க முடியாது. தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பூத உடலுடன் வானுலக யாத்திரை சென்றபோது அவர்களுக்கு "புராக்" என்னும் வாகனம் இருந்ததாக ஹதீதுகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் இல்யாஸ் (அலை.) அவர்கள் உடலுடன் வானுலகஞ் சென்றபோது அவர்களுக்கு அக்கினிரதமும், அக்கினிக் குதிரைகளும் வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, பூத உடலுக்கு வானுலகஞ்செல்ல இயற்கையாகவே சக்தியில்லை என்பதை விவாதத்திற்காக அங்கீகரித்தாலும், வாகனங்களின் உதவியினலேயே அவர்கள் வானுலகஞ் சென்றதால் இதனை புத்திக் கெட்டாத காரியம் என்று கூறுவதற்கில்லை. எனவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பூத உடலுடன் மிஃராஜுக்குச் சென்ற விபரம் யுக்தி சுருதி ஆகிய இரண்டின் மூலமாகவும் ருஜுவாகின்றது.

ஆனால், இக்காலத்தில் தோன்றிய காதியானிகள் போன்றவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பூதஉடலுடன்

வானுலகஞ் சென்றதை நம்புவதுமில்லை. அதனை மறுத்துப் பிரசாரமும் புரிகின்றனர். ஆனல், அவர்கள் அதனை மறுப்பதற்காகக் கூறும் காரணங்கள் யூத கிறிஸ்துவர்கள் முதலிய இஸ்லாமிய விரோதிகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலமுதல் இன்றுவரை கூறிவரும் பலவிதமான ஆக்ஷேபனைகளையே நாஜுூக்காக எடுத்துரைத்து வருவதாக இருக்கிறது. சுருங்கக்கூறுமிடத்தில் இஸ்லாத்தின் விரோதிகளுக்கு இவர்கள் இவ் விஷயத்தில் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. இவர்களுக்கு விஞ்ஞான சாஸ்திரத்தில் பூரண பாண்டித்துவமுமில்லை, மார்க்க விஷயத்திலும் போதிய அறிவில்லை. ஆகவே, முஸ்லிம் பொது ஜனங்கள் இவர்களது கூற்றுக்களை நம்பி மோசம் போகவேண்டாம் என்பதாக எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

காதியானில் யஜீதியத்தின் தோற்றம்.

முஸ்லிம்களது ஈமானில் ஏற்பட்டுள்ள பலஹீனமும் மிக நூதனமாக இருக்கிறது. பத்துப் பேர் கூடி ஒருவரை நல்லவரென்று கூறிவிட்டால் பாமரர்கள் மட்டுமில்லாமல் படித்தவர்களிலுங்கூடச் சிலர் ஆட்டுக் கூட்டத்தைப்போல் அந்த மனிதருக்குப் பின்னல் செல்லவும், அவர் கூறுவதை வேதவாக்குப் போல் கருதவும் தலைப்பட்டுவிடுகின்றனர். காதியானிகள் இஸ்லாம் மதத்தைப் பரவச் செய்வதில் தங்கள் உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் தத்தம் செய்து விட்டனர், மிகவும் வெற்றிகரமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இஸ்லாம் மதப்பிரசாரம் செய்கின்றனர் என்று பிரபலப்படுத்தப்பட்டது. இதன் பலனாக பெரும் பெரும் அறிவாளிகளான மேதாவிகளும் கூட இப்பிரபலத்தைக் கேள்விப்பட்டு மருண்டு விட்டனர். அவர்களிலுள்ள நூற்றுக்கணக்கான உள் வியாதிகளும், வழி கேடுகளும், தீங்குகளும் ஒரு க்ஷணப் பொழுதுக்குள் கவனியாமல் மன்னித்து விடப்பட்டன. ஆனல், இப்பொழுது இந் நிலைமை மாறி புதிய நிலைமை ஏற்பட்டு வருகிறது. காதியானிகளது வழி கேடுகளும், தீமைகளும் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாகப் பொது ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சமாகிக் கொண்டிருக்கிறன. இந்த வகுப்பாரின் உள்வியாதிகள் எவ்வளவு கெடுதலானவை என்பதற்கு அடியிற் கண்ட இரண்டு உதாரணங்களே போதுமானவைகளாகும்.

திருகுர்ஆனுக்கு தவறான வியாக்யானம்.

அல்லாஹ்விற்கு வழிப்படுங்கள். இன்னும் இந்த றஸூலுக்கும், உங்களில் நின்றும் (ஏவும்) அதிகாரமுள்ளவர்களுக்கும் வழிபடுங்கள். எனவே, ஒரு காரியத்தில் நீங்கள் பிணங்கிக் கொள்வீர்களாயின் நீங்கள் அல்லாஹ்வையும் கடைசி நாளையும் (உண்மையாகவே) உறுதி கொண்டிருப்பீர்களாயின் அல்லாஹ் விடத்திலும் இந்த றஸூலிடத்திலும் அதனை நீங்கள் மீட்டுங்கள்" என்பதாக திருகுர் ஆனில் ஒரு ஆயத்திருக்கிறது. அல்லாஹுத்த ஆலாவிற்கும் அவனது றஸூல் (ஸல்.) அவர்களுக்கும், முஸ்லிம்களிலுள்ள அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்; அதாவது திருகுர்ஆன் ஹதீதுகளுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு அவைகளில் சொல்லப் பட்டுள்ள கட்டளைகளுக்கு எவ்வித நிபந்தனையுமின்றிக் கீழ்ப்படியவேண்டும்; முஸ்லிம்களிலுள்ள அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்; ஆனல், அவர்கள் கூறும் காரியங்களில் ஏதேனும் பிணக்கு ஏற்பட்டால் அக்காரியம் மத சம்மதமுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள குர்ஆன், ஹதீதுகளில் ஆதாரம் தேடவேண்டும்; அவைகளில் ஆதாரம் கிடைக்கும் பக்ஷத்தில் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்; இல்லையேல் நிராகரித்து விடவேண்டும் என்பது இந்த ஆயத்தின் கருத்து. தவிரவும், "உலுல் அம்ர், அதாவது அதிகாரிகள் என்ற பதம் விசாலமான கருத்துள்ளது. இந்த

ஆயத்தை ஆதாரமாகக் கொண்டுதான் கலீ பாக்களுக்கும், இமாம்களுக்கும் முஸ்லிம் பொது ஜனங்கள் கீழ்ப்படிகின்றனர். இந்த ஆயத்தின் கட்டளைக்கேற்பவே இமாம்கள் குர்ஆன் ஹதீதுகளிலிருந்து தக்கமுறையில் துருவி ஆராய்ந்து மார்க்கச் சட்டங் களை எழுதியுள்ளனர். கலீபாக்களும் மற்றவர் களும் நிபந்தனை இல்லாமல் முஸ்லிம்கள்மீது ஆதிக்கம்பெற உரிமை பெறவில்லை என்பதும், கலீபாக்களுக்கும் மற்றவர்களுக்கும் நிபந் தனை இல்லாமல் கீழ்ப்படியும்படி முஸ் லிம் பொதுஜனங்கள் கட்டளையிடப்படவில்லை என்பதும் பற்பல சம்பவ நிகழ்ச்சிகளிலிருந்து நன்கு விளங்குகின்றன. இக்கருத்தை தப்ஸீர் களிலும் காணலாம். ஆனால், காதியானி கலீபா இந்த ஆயத்திற்கு வேறுவிதமான வியாக்யா னம் செய்திருக்கிறார் என்பதைப்பற்றிய விவரம் "அல்பஜ்லு" என்ற பத்திரிகையின் 18-7-37ல பிரதியிலிருந்து தெரியவருகிறது. அதன் விபரம் வருமாறு :—

"உங்களுக்கு ஒரு அதிகாரியின்மீது முறை யீடிருந்தால் அதனை அல்லாஹுத்தஆலாவி னிடமும், றஸூல் (ஸல்.) அவர்களிடமும் ஒப் புவித்துவிடுங்கள். அவர்கள்தான் அந்த அதி காரிக்குக் கீழ்ப்படியும்படி கட்டளையிட்டிருக்கி றார்கள். தகராறைத் தீர்த்துக்கொள்ளுவதற் காக முயலுவது உங்கள் வேலை இல்லை. ஏனெ னில், இவ்வாறு முயலுவதால் அமைதி ஏற்பட முடியாது. அமீருக்கு மாறுசெய்தல், அவ ருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தல் ஆகியவைகளுக்குப் பதிலாக அல்லாஹ்வினிட மும் அவன்றஸூலிடமும் ஒப்புவித்துவிடுவது தான் உங்கள் கடமையாகும். ஆகவே, அமீர் அதாவது தலைவர் சிறியவராயினும் அல்லது கலீபாவாயினும் சரியே, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது இறைவனின் சட்டமாகும். அவருடைய தீர்ப்பு உங்களுக்கு ஆக்ஷேபகர மாக இருந்தாலும், அல்லது நீங்கள் அநீதிசெய் யப்பட்டதாக கருதுவீர்களாயினும், உங்க ளது அமீர் நாணமில்லாமல் உங்களுக்கு அநீதி செய்யாதிருப்பாராயின் உங்களுக்கு அல்லா ஹுத்தஆலா உதவிபுரிவான்; உங்களது அமீ றும் க்ஷமிக்கப்படத்தகுந்தவராகவே கருதப் படுவார். உங்களது அமீர் உங்களுக்கு அநீதி செய்திருப்பின் அப்பொழுதும் விஷயத்தை அல்லாஹ்வினிடமும் அவனது றஸூலினிட மும் ஒப்புவித்து விடுங்கள். நியாயத் தீர்ப்பு நாள் ஒன்று வரும்போது அவ்வநீதிக்கு அவன் பரிகாரம் செய்வான் என்று மனச்சாந்தி அடைந்துகொண்டிருங்கள்."

காதியானி கலீபாவினுடைய இந்த வியாக்யா னத்தைக் குறித்து "பைகாமேஸுல்ஹ" என்ற பத்திரிகை ஆக்ஷேபனை செய்து "கலீபா அக்கிரமம் செய்தாலும், மதுபானமருந்தின லும், வியபிசாரம் செய்தாலும், கண்ணியவான் களது குடும்பஸ்திரீகள்மீது கையை வைத்தா லும், திருடச் செய்தாலும், நிர்வாண ஸ்திரீக ளது டான்ஸுகளைப் பார்த்தாலும் 'கலீபாவும் அவரது ஆண்டவனும் றஸூலும் அறிவார்கள்; நமக்கு மார்க்கபிரசாரத்திலும் சீர்திருத்தத்தி லும் சம்மந்தமில்லை; நியாயத்தீர்ப்புநாளில் இவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம்' என்று கூறிக்கொண்டு கலீபா அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்போலும்" என்று கண்டித்திருக்கிறது.

ஸஹாபிகளது முறை

கலீபாக்களுக்கு நிபந்தனை இல்லாத முறை யில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், ஷரீ அத்திற்குத் தகாத காரியங்களிலும் கலீபா விற்கு பொதுஜனங்கள் கீழ்ப்படியவேண்டும் என்றிருந்தால் ஹஜ்றத் ஸித்திக்கே அக்பர் அபூபக்கரிப்னு அபீகுஹாபா (றலி.) அவர்கள் கலீபா பதவியை ஏற்றுக்கொண்ட முதலாவது தினத்திலேயே "நான் நல்ல காரியஞ் செய் தால் எனக்கு உதவி புரியுங்கள். நான் கோண லாகி விட்டால் என்னை நேராக்குங்கள்" என்று ஏன் பொது ஜனங்களுக்கு அறிக்கை செய்தார் கள்? அதற்குப் பிறகு கலீபா பதவியை ஏற்றுக்கொண்ட ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் ஷை அறிக்கையை மறுபடியும் ஏன் விடுத்தார்கள்? ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்கள் தமது புதல்வரான யஜீதைத் தமக் குப்பிறகு பட்டத்திற்கு வரவேண்டிய இள வரசர் என நியமனஞ் செய்தபோது பெரும் பெரும் ஸஹாபிகள் இந்த நியமனத்தை ஏன் ஆக்ஷேபித்தனர்? ஹஜ்ரத் உதுமான் (றலி.) அவர்களை ஷஹீதாக்கிய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமலிருந்தபோது ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (றலி.) அவர்களும் ஆயிரக் கணக்கான ஸஹாபிகளும், ஹஜ்றத் அலி (றலி.) அவர்களை எதிர்த்து வாளேந்திப் போர்க்களம் வந்ததேன்? என்பதைப் பொது ஜனங்கள் கவனிக்க வேண்டும். நிர்வாகம் சரியாக நடை

பெற வேண்டும், ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டும் என்பது அவசியம் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், சன்மார்க்கத்தை நிலை நிறுத்துவது இதிலும் அதிக முக்கியமானதாகும். முஸ்லிம்கள் தங்களது கலீபாக்கள், அமீர்கள், இமாம்கள், அதிகாரிகள் முதலியவர்கள் விஷயத்தில் அவர்கள் எக்காரியத்தைச் செய்தாலும் அல்லது செய்துகொண்டிருந்தாலும் அதனைக் குறித்துக் கண்டனஞ் செய்யவோ ஆக்ஷேபனை செய்யவோ எந்த முஸ்லிமுக்கும் எவ்வித உரிமையுமில்லை என்ற முறையில் நடந்துகொள்ள வேண்டிய அவசியமிருப்பின் கிலாபத்திற்கும் பிர்ஔனியத்திற்குமிடையில் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா? என்பதை காதியானி கலீபா சிந்தித்துப் பார்ப்பாராக.

காதியானில் யஜீது தோன்றிஇருப்பதாக இல்ஹாம்.

"நான் அக்கிரமஞ்செய்தாலும் என்னை நீங்கள் ஆக்ஷேபிக்க முடியாது" என்று காதியானி கலீபா கூறிய உபதேசத்திற்குக் காரணம் யாது என்பதைக் குறித்து லாகூர் காதியானிகளைச் சேர்ந்த டாக்டர் ஸெய்யித் முகம்மது ஹுஸைன் சாஹிப் என்பவர் விவரித்துக்கூறி இருக்கிறார். அதன் விபரம் வருமாறு:—

"காதியானில் யஜீதுகள் தோன்றுவர் என்பதாக மிர்ஜாசாகிபுக்கு இல்ஹாம் வந்திருந்தது. மிர்ஜாசாகிபுக்கு வந்த இந்த இல்ஹாம் காதியானி கலீபா மியான் மஹ்மூது அஹ்மது விஷயத்தில் பூர்த்தியாகிவிட்டது."

முதலாவது யஜீது

முதலாவது யஜீது ஹஜ்ரத் முஆவியா (றலி.) அவர்களது புதல்வர். இவர் தந்தைக்குப் பிறகு சர்வாதிகாரமுள்ள கலீபாவாக இருந்துகொண்டிருந்தார். அவர் நல்லோர்களை நெருக்கடி செய்தார். அவர் பாஸிக்காகவும், பாவஞ்செய்பவராகவும், வியபிசாரத்தொழில் புரிபவராகவும், மது பானமருந்துபவராகவும், அக்கிரமிப்பவராகவுமிருந்தார். அவர் தம்மை "கலீபத்துல்லாஹ்" என்பதாகத் தாவாச்செய்தார். தம்மை ஆதரிக்காதவர்களுக்கு கொடும் அநீதிசெய்பவராக இருந்தார். ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (றலி.) அவர்கள் யஜீதை கலீபா என்பதாக அங்கீகரித்து பைஅத்துச் செய்யவில்லை ஆதலின், யஜீது அவர்களைப் பூரணமாகப் பகிஷ்கரித்தார். அவர்களுக்கு ஸலாம் சொல்லக்கூடாதென்றும், அவர்களுடன் பேசலாகாதென்றும், அவர்களுக்கு உணவுப்பொருள்கள் கொடுக்கலாகாதென்றும் தடுத்துவிட்டார். இறுதியாக நிறைந்த ஜலமுள்ள நதியிலிருந்து ஒரு சிறங்கையளவு ஜலம் கூடக்கிடைக்காமல் தடுத்துவிட்டார்.

இரண்டாவது யஜீது.

காதியானி கலீபா மிர்ஜாமஹ்முது அஹ்மதிடத்திலும் இந்தத் தன்மைகள் இருக்கின்றன. உதாரணமாக காதியானி கலீபா தன் தந்தைக்குப் பிறகு சர்வாதிகாரமுள்ள கலீபாவாகத் தன்னை ஏற்படுத்திக்கொண்டார். அஹ்மதியா ஜமாஅத்தைச் சேர்ந்த அனைவராலும் தாம் பின்பற்றப்பட்டு வருவதாக மஸ்ஜிதின் மின்பர்களில் நின்றுகொண்டு பொய்த்தாவாச் செய்கிறார். அவரிடம் பைஅத்துச்செய்ய விரும்பாதவர்கள் காதியானைவிட்டு வெளியேற்றப்படுகின்றனர். அவரிடம் பைஅத்துச்செய்யாதவர்கள் பாஸிக்குகள் என்றும், பாவிகள் என்றும், கொல்லப்படத்தகுந்தவர்கள் என்றும் தீர்ப்புகள் வெளியிடப்படுகின்றன. காதியானி கலீபாவின் குறைகளைப்பற்றி எவரும் ஒரு மூச்சுக்கூட விடமுடியாத நிலைமை காதியானியில் உண்டு பண்ணப்பட்டிருக்கிறது. "முபாஹலா" பத்திரிகைக்காரர்கள் கலீபாவின் நடத்தை சம்மந்தமாகச் சில விபரங்களை வெளியிட்டபோது அவர்கள் பகிஷ்கரிக்கப்பட்டனர். அவர்களது உயிர்களும் பொருள்களும் அபாயத்திற்குள் அகப்பட்டன. அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. அவர்கள் நிர்ப்பந்தமாக காதியானைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. இப்பொழுது மியான் பக்றுத்தீன் முல்தானீ கலீபாவினிடம் செய்திருந்த பைஅத்தை முறித்துவிட்டதால் அவருக்கும் இதே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முல்தானி சாகிபின் குற்ற மற்ற குழந்தைக்குப்பால் மறுக்கப்பட்டது. அவரது வேலைக்காரி ஊருக்குள் வரவிடாமல் தடுக்கப்பட்டனள். அவரது பந்துக்களில் எவரும் அவரது குடும்பத்திற்கு அனுதாபம் காட்டக் கூடாதென்று பாரா ஏற்படுத்தப்பட்டது. அவர்களுக்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்வதும் தடுக்கப்பட்டது. விஷமிகள் அவரது மனைவிமக்களுக்கு எதிரில் நிர்வாணமாகக்

கூத்தாடினர். அவரது வீடுகளில் குடிக்கூலிக்கிருந்தவர்கள் அவ்வீடுகளைக் காலி செய்து விட்டு வெளியேறும்படி நிர்பந்திக்கப்பட்டனர். இதனால் அவருடைய குடும்பத்தினர் அனைவருக்கும் நெருக்கடி ஏற்பட்டது. கர்பலாவில் ஷஹீதான பெரியார்களுக்கு யஜீதால் அளிக்கப்பட்டுள்ள சகல காரியங்களும் இன்று இந்த இருபதாவது நூற்றாண்டின் நாகரீக காலத்தில் காதியானில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவை காதியானிகளில் ஒரு சாரராகிய அஹ்மதி டாக்டர் ஸெய்யித் முஹம்மது ஹுஸைன் சாகிப் எழுதியவைகள். மிர்ஜாகுலாம் அஹ்மதுவைப் பின்பற்றியவர்காள் "உலகம் முழுவதற்கும் முக்தியளிக்கக் கூடியவர் காதியானில் பிறந்துவிட்டார்" என்பதாக ஒரு காலத்தில் கூறிவந்தனர். இன்றையதினம் அதே ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் "காதியானில் யஜீது தோன்றிவிட்டார்" என்பதாகக் கூறுகின்றனர். இதுவும் காலத்தின் மாறுபாடேயாகும். காதியானிகளது அக்கிரமங்களையும் வழிகெட்ட கொள்கைகளையும் குறித்து முன்னர் யாம் கூறியபோது பொறாமையினால் கூறுகிறோமென்பதாகச் சிலர் கூறினர். இன்று காதியானிகளது அக்கிரமங்களைக் குறித்து அவர்களிலுள்ளவர்களே மேற்கண்டவாறு கூறி இருப்பதை அன்பர்கள் படித்துணர்ந்து தங்கள் சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்வார்களாக. காதியானிகளைச் சேர்ந்த இவ்வகுப்பினர் தங்கள் அக்கிரமங்களை வெளியிடும் காலம் வந்ததுபோல தங்களது வழிகெட்ட தவறான கொள்கைகளைத் தாங்களாகவே வெளியிடும் காலம்வர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக ஆமீன்.

இந்திய முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம் யாது?

முஸ்லிம்களாகிய நாம் இந்தியாவிற்கு வந்தபோது எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தோம். ஆயினும், நாம் சத்தியவான்களாகவும், நீதிவான்களாகவும், ஒருவருக்கொருவர் உண்மையான அனுதாபிகளாகவும், அபிமானிகளாகவுமிருந்தோம். இவ்விதமான நற்றன்மைகள் நம்மிடமிருந்ததால் இறைவன் நமக்கு உதவி புரிந்தான். வெற்றியும் ஜயமும் நம்மை வரவேற்றன. விசாலமான இந்த தேசத்தில் நாம் அதிகாரிகளாகவும் அரசர்களாகவும் ஆயினோம். பிஷாவரிலிருந்து கன்னியாகுமரி வரை நமது நாணயம் செலவாணியாயிற்று. திரு குர்ஆனின் கட்டளைகள் இத்தேசத்தின் சட்டங்களாக இருந்தன. ஆனால், இன்று முஸ்லிம்களாகிய நாம் அடிமைகளாக இருக்கிறோம். ஹிந்துக்களும் ஆங்கிலேயரும் நம்மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றனர். தரித்திரம் நம்மை வரவேற்றுக் கொண்டிருக்கிறது. நமது இருதயம் அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ள இதரர்களைக்கண்டு பயந்து நடுங்குகின்றது. இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டங்கள் அந்நியரின் தாக்குகைகளுக்குக் குறிகளாக ஆகிவிட்டன. றஸூலே கரீம் (ஸல்.) அவர்களது தாஸர்கள் இப்பொழுது தலையை மறைத்துக்கொள்ள இடங்கிடைப்பதில்லை. சில சமயங்களில் நாம் ஆங்கிலேயர்களிடம் கெஞ்சிக் கேட்கும் முறையில் அவர்களைப் பார்க்கிறோம். சில சமயங்களில் ஹிந்துக்களது கிருபையையும் தயவையும் எதிர் நோக்குகிறோம். இவ்விதமான மாறுதல் ஏன் ஏற்பட்டது? இம்மாறுதல்களுக்குக் காரணங்கள் யாவை? என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சரித்திரப் பூர்வமான உண்மை

பிரபல சரித்திராசிரியரான பண்டிட் ராதா கிருஷ்ணன் தமது "குல்ஷனே ஹிந்த்" என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதி இருக்கிறார்:—

"முஸ்லிம்கள் இத்தேசத்திற்கு வந்தபோது இங்குள்ள நிலைமை மிக மோசமாக

இருந்தது. ராஜாக்களும் மகா ராஜாக்களும் சிற்றின்பத்திலும் சுகபோகத்திலுமிருந்தனர். அரசாங்கத்தின் நிர்வாகம் பேராசைக்காரர்கள், சுயநலமிகள் ஆகிய ஜனங்களிடம் இருந்தது. அவர்கள் பிரஜைகளது சுக துக்கத்தைப்பற்றி மிகக் குறைவாகக் கவனஞ் செலுத்திக் கொண்டிருந்தனர். தங்கள் மனவிருப்பத்தையே பின்பற்றிக் கொண்டிருந்தனர். தேசத்தின் நிர்வாக நிலைமை மிகச் சீர்கெட்டிருந்தது. கொள்ளைக்காரர்கள் வழிப்பறி செய்வோர் முதலியவர்களுக்குப் பலமிருந்தது. ரஸ்தாக்கள் நிர்ப்பயமாக இருக்கவில்லை. தலைவர்கள், பிரபுக்கள், தனவந்தர்கள், உயர் ஜாதியினர் ஆகியவருக்கு ஆதிக்கமிருந்தது. ஏழைகளும் தீண்டப்படாதவர்களும் கஷ்ட சங்கடங்களிலிருந்தனர். அவர்கள் மிருகங்களிலும் கடையர்களாகக் கருதப்பட்டனர். உயர் ஜாதியினருக்கும் பிரபுக்களுக்கும் சேவிப்பது ஒன்றுதான் அவர்களது ஜீவியத்தின் ஒரே லக்ஷிய மாக இருந்தது. அவர்கள் மனித அந்தஸ்தைப்பார்க்கினும் மிகவுயர்ந்தவர்கள் என்று தாழ்ந்தவர்களால் கருதப்பட்டு வந்தனர். அவர்களது சமிக்ஞையை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் இன்னுயிரையும் அவர்கள் தியாகம் செய்ய வேண்டியவர்களாக இருந்தனர். ஒருவருக்கொருவர் அன்பு, சகிப்புத்தன்மை, ஒற்றுமை ஆகியவைகளது அஸ்திவாரங்கள் பலஹீனமடைந்திருந்தன. சுய நலமும் மனம் போனபடி செய்வதும் ஆதிக்கம் கொண்டிருந்தன. சொந்தநன்மைக்காக சமூகத்தின் பொது நன்மைகள் கைவிடப்பட்டு வந்தன.

இவ்வித நிலைமையில் முஸ்லிம்கள் இந்தியாவிற்குள் பிரவேசித்தனர். அக்காலத்தில் அவர்களிடம் மனிதனுக்கு இருக்கவேண்டிய சகல நற்றன்மைகளும் அமைந்திருந்தன. வீரருக்கும், அரசாளுபவருக்கும், வெற்றிக் கொள்பவருக்கும் இருக்கவேண்டிய அம்சங்கள் அவர்களிடமிருந்தன. அவர்கள் மிகவும் உண்மையுள்ள உழைப்பாளிகளாகவும், கஷ்டத்தைச் சகித்துக்கொள்பவர்களாகவும், ஏழைகளை ஆதரிப்பவர்களாகவும், ஒருவருக்கொருவர் உண்மையான அனுதாபிகளாகவுமிருந்தனர். அவர்கள் பொது நன்மைக்காகத் தன்னலத்தை முற்றிலும் அலக்ஷியம் செய்பவர்களாக இருந்தனர். இத்தியாதித் தன்மைகளின் காரணமாக அவர்கள் பிரமிக்கத் தக்கவாறு முன்னேற்றமடைந்தனர். சில நாட்களுக்குள்ளாகவே அவர்களது அஸ்திவாரம் பலப்பட்டு விட்டது. அவர்களது ஆதிக்கத்தை யாவரும் அங்கீகரித்தனர்.

முஸ்லிம் அமீர்கள் எந்தச் சமூகத்தாருக்கும் அநீதி செய்வதில்லை. ஒவ்வொருவருடனும் உண்மையாகவும் அபிமானத்துடனும் பழகினர். அவர்கள் தீண்டாதார்கள் முன்னேற்றமடைவதற்கான வழிகளை உண்டுபண்ணினர். அவர்களுக்கென கல்விச்சாலைகளை ஏற்படுத்தினர். அவர்களை இழிநிலையிலிருந்து வெளிப்படுத்தி கண்ணியத்தை யளித்தனர். முஸ்லிம்களது தர்பாரில் ஏழை, பணக்காரர், தாழ்ந்தவர், உயர்ந்தவர் எல்லோருக்கும் மரியாதை கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் எவரையும் அற்பமாக மதிப்பதில்லை. இந்தியாவின் பல பாகங்களிலும் ராணுவ ஸ்தலங்களை அமைத்தனர். அமைதியையும் சமாதானத்தையும் நிலவச்செய்தனர். கொலை, ரத்தஞ் சிந்துதல், கொள்ளை, கலகம், வழிப்பறி முதலியவைகளை ஒழித்தனர். தொழில் முதலியவைகளை அபிவிருத்தி செய்தனர். ரஸ்தாக்கள் போட்டனர். தோப்புகளை யுண்டாக்கினர். இந்த தேசத்தைத் தங்களது தாய் நாடாகக் கருதினர். இவ்விதமான நன்மைகள் அவர்களிடமிருந்துகொண்டிருந்த வரையில் அவர்கள் அதிகாரத்திலிருந்தனர். ஆனால், அவர்களிடம் ஒழுக்கம் வழுக்கடைந்து, சுகபோகங்களிலும், சிற்றின்பங்களிலும் ஈடுபட்டு பொது நலத்திற்குப் பதிலாக சொந்த நன்மைகளைக் கருத வாரம்பித்ததிலிருந்து அவர்களது அதிகாரத்திற்கும் முடிவு ஏற்படத் தொடங்கிற்று. ஆகவே, அவர்கள் இழிவடைந்தனர்.

மற்றொரு சரித்திராசிரியரின் போற்றுரை

கி. பி. 1808-ம் வருஷத்திலிருந்த இந்தியாவின் நிலைமையை விளக்குபவரான பண்டிட் கிர்தார் லால் என்ற சரித்திராசிரியர் தம்முடைய "இந்திய சரித்திரம்" என்ற புத்தகத்தில் பின்வருமாறு எழுதிஇருக்கிறார் :—

"இந்தியாவில் முஸ்லிம்களின் அபார முன்னேற்றத்திற்குப் பல காரணங்களுள. அவர்கள் தங்களது முன்னேற்றத்தின் காலத்தில் மிகவும் உழைப்பவர்களாகவும், கஷ்டத்தைச் சகிப்பவர்களாகவும், ஒருவருக்கொருவர் அளவற்ற அன்புள்ளவர்களாகவு மிருந்தனர். அவர்கள் பிறருக்கு உபகாரம் செய்வதற்குத் துடித்துக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் ஒரு

கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டால் எல்லோ ரும் அந்தக் கஷ்டத்தை உணருவார்கள். இதனை அல்லாமல் அவர்களில் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு இருக்கவில்லை. உயர்குடும் பத்திலுள்ள ஒருவர் தன்னைச் சேர்ந்த ஒரு ஏழையை அற்பமாக மதிக்கமாட்டார். தங்க ளது வணக்கஸ்தலங்களில் எவ்விதப் பாகுபாடு மின்றி ஒருவரது தோள் இன்னொருவரது தோளுடன் உரையும்படியாக அமர்ந்திருப் பார்கள். பெரும்பாலான மதக் கூட்டங்களில் ஏழை, பிரபு, அரசன், ஆண்டி ஆகிய யாவரும் ஒரே வரிசையில் காணப்படுவர். இவை அவர் களிலுள்ள சிறந்த தன்மைகளாகும். இவைக ளைப் பார்க்கும் பிறர் வசீகரிக்கப்படுவர் என் பது திண்ணம். இவர்களுடன் மிகவும் நெருங்கி விடவேண்டுமென்றே ஒவ்வொருவரும் முயற் சிப்பர்.

அவர்கள் தங்களது கட்டுப்பாடு, சமூகம் ஆகி யவைகளுக்கு விரோதமாக எச்சமயத்திலும் எவ்விதமான வேளையிலும் எவ்வேலையுஞ் செய்யமாட்டார்கள். இவை அவர்களில் விசேஷ மாக இருந்த தன்மையாகும். இதன் காரண மாக அவர்களது முன்னேற்றம் என்ற சூரி யனின் கிரணங்கள் இந்தியாவை இலங்கச் செய்துகொண்டிருந்தன. பிஷாவரிலிருந்து கன் னியாகுமரி வரை அவர்களது செல்வாக்கு ஓங்கி இருந்தது. இந்தியாவிலிருந்த பெரும் பெரும் பிரபுக்கள், தலைவர்கள், அவர்களது ராஜ்யம், அரசுரிமை, பொக்கிஷம் முதலிய யாவும் முஸ் லிம்களுக்கு அற்பணமாக இருந்தன. ஆனால் அவர்களுக்கு ஒழுக்கத் தவறுகளேற்பட்டு, அவர்களது நடைமுறைகளில் வித்தியாசம் தோன்றி, சொந்த நன்மைகளுக்காக உயிரை விட ஆரம்பித்ததிலிருந்து அவர்களது ஆதிக்கம் என்ற காற்று நிலைதவறிவிட்டது. அவர்களது முன்னேற்றம் என்ற சங்கிலித்தொடர் முற்றுப் பெற்றுவிட்டது.

முஸ்லிம் சரித்திராசிரியர் கூறும் விபரம்.

இந்தியாவில் நமது அழிவைப்பற்றிய விருத் தாந்தம் ஒழிவு மறைவான விஷயமல்ல. ஆகா யம் என்ற நேத்திரமானது மிக நுட்பமாக இவ்விஷயங்களைப் பார்த்து வந்திருக்கிறது. நம்மில் தியாக உணர்ச்சியும், உண்மையும், அந்த ரங்க சுத்தியும், நீதி நியாயமும், இஸ்லாமிய ஒற்றுமையுணர்ச்சியும் அழிந்து பேராசை யுள்ளவர்களாகவும், சிற்றின்பப் பிரியர்களாக வும், சுயநலமிகளாகவும் நாம் மாறியகாலம் முதல் முன்னேற்றம், செல்வம் என்பவைகள் நம்மை விட்டுத் திரும்பிக்கொண்டன. இழி வும் கஷ்டமும்தான் நம்மை எதிர்கொண் டழைத்தன.

நாம் எச்சரிக்கையடையக்கூடிய எத்தனை சந்தர்ப்பங்களில் தன்னலத்தையும் சுயலாபத் தையும் காண்பித்திருக்கிறோம்? இது வருந்த தக்க விருத்தாந்தம். இதன் விபரத்தைக் கூறுகையில் இருதயம் துக்க சாகரத்தில் மூழ்கு கின்றது. கண்களில் நீர்தாரை தாரையாக வடிகின்றது.

ஹஜ்ரத் ஒளரங்கஜீப் றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது ஜீவியம் என்ற விளக்கு அணைந்த பிறகு நம்முடைய தன்மைகளில் விதம்விதமான பலஹீனங்களேற்பட்டுவிட் டன. நாம் அளவிற்கு மீறி சுகபோகிகளாக வும், பேராசைக்காரர்களாகவும், சுயநலமிகளா கவும் மாறிவிட்டோம். நமது வீழ்ச்சிக்குறிய சின்னங்கள் தோன்றிவிட்டபோதிலும் நமது அஜாக்கிரதை எப்பொழுதும் மாறாமலே இருந்து வந்தது. பயங்கரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. நம்முடைய சிற்றின்பப் பிரியத்தை யும் சுயநலத்தையும் நாம் விட்டுவிடவேண்டும் என்று அவைகள் நமக்கு அவய சப்தமிட்டுக் கூறின. ஆனால், நாம் மறதி, அசிரத்தை என்ற மதுரமான நித்திரையில் ஆழ்ந்திருந் தோம். இறுதியாக இயற்கைச் சட்டம் நமது விஷயத்தில் நாம் எதற்குத் தகுதியாக இருந் தோமோ அதே காரியத்தைத் தீர்ப்பளித்தது. நமது செல்வாக்கும் ஆதிக்கமும் ஒழிந்தன. அரசுரிமை பிடுங்கிக்கொள்ளப்பட்டது. நமது சகோதர சமூகத்தினர் நம்மைக் கேவலமாகப் பார்க்கவாரம்பித்தனர். நம்முடைய தயவை யும் கருணையையும் எதிர்பார்த்துக்கொண்டி ருந்த சமூகங்கள் அதிகாரத்திற்கு வந்து விட்டன.

அஹ்மது ஷாஹ் அப்தாலீ மராட்டியர்களின் சக்தியை ஒழித்த பின்னர் ஒற்றுமையாக இருக்கும்படி அயோத்தி அரசருக்கும், டில்லி அரசருக்கும் உபதேசம் செய்தார். ஆனால், அவர்கள் பிறருக்குக் கருவியாக மாறிவிட்டனர். திப்பு சுல்தான் தமது கடைசித் தருணத்தில் முஸ்லிம் அமீர்கள் ஒன்றுகூடி ஆங்கிலேயர்களை எதிர்க்கவேண்டும் என்று கூறினார். ஆனால், எவரும் இவ்வழைப்பை அங்கீகரிக்கவில்லை.

இதன் பலனாக இஸ்லாத்தின் அரியணை அழிந்தது.

இப்பொழுதேனும் தற்போதுள்ள நிலைமையைச் சற்று கவனித்துப் பாருங்கள். இன்றுங்கூட குப்றுக்கும் இஸ்லாமிற்கும் யுத்தம் நிகழ்ந்துகொண்டு தானிருக்கிறது. ஆனால், நம்மில் பலர் இன்று குப்ரின் மாடியின் மீதே இருந்துகொண்டு இஸ்லாத்திற்கு இழிவையுண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

—"ஈமான்"

இஸ்லாமல்லாதாருடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

(உத்தம பாளையம் K. அப்துல்காதிர் சாஹிப் வரைவது)

சன்மார்க்க சீலர்காள்!

இன்று, இஸ்லாத்தின் ஜன்ம விரோதிகள், பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தை அவமதிப்பாகவும், அசுத்தமாகவும், அலக்ஷியமாகவும் எண்ணிக்கொண்டிருப்பதுமல்லாமல், இஸ்லாம் மதம் அநியாயத்தாலும் அநீதியாலும் பரத்தப்பட்டதென்றும், சண்டை, சச்சரவு, அடிதடி, கொள்ளை, கொலை முதலியவைகளையே இஸ்லாம் போதிக்கிறதென்றும் கைகூசாது வரைந்தும், பிரசங்கித்தும் வருகின்றனர். இவர்களிவ்வாறு அளப்பது கலப்பற்ற பொய்யென பலராலும் பன்முறையும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவர்களின் கண்களில் போடப்பட்டிருக்கும் திரைகளையும், முகமூடிகளையும் நீக்கி, சத்தியம் உண்மை யென்ற கண்களால் அதை நோக்கியிருப்பின், இஸ்லாத்தின் சத்திய போதனைகள் பட்டப்பகல் போல் விளங்கியிருக்குமென்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இஸ்லாத்தின் பிரச்சாரம் நீதி, கருணை அன்பு, தயாளம் முதலியவைகளால் அஸ்திபாரம் போடப்பட்டு, வளர்பிறை சந்திரன் போன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தனது வாலிப திசையையடைந்து விட்டது. இஸ்லாமோ சமத்துவம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, பரோபகாரம் முதலியவைகளைப் போதிக்கிறது. முஸ்லிம்கள், தங்களின் விரோதிகளுடனும் அன்பாய் நடந்துகொள்ளும்படி போதிக்கிறது. இஸ்லாம் மதம், எதிரிகளுடன் யுத்த காலத்திலும், மற்ற காலத்திலும் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று போதிக்கிறதோ அவைகளை சுருக்கமாக இவண் வரைகின்றேன்.

"மேலும், நுங்களை எதிர்த்து போர் புரிபவர்களுடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போர்புரியுங்கள். மேலும், (வரம்பைக்) கடந்து விடவேண்டாம்; நிச்சயமாக அல்லாஹ் (வரம்பைக்) கடப்பவர்களை பிரியம் வைப்பதில்லை."

(குர்ஆன்)

இவ்வாயத்தின் மூலம், முஸ்லிம்களை எதிர்த்தால்தான் அவர்களுடன் போர்புரிய வேண்டுமென்றும், அதிலும், நிதானமான முறையில் யுத்தம் நடத்த வேண்டுமென்றும், தெளிவாக இறைவன் கட்டளையிட்டுள்ளதைக் காணலாம்.

"இன்னும், அவர்கள் சமாதானத்திற்கு சாய்ந்தால் நீரும் அதற்குச் சாயும்; இன்னும், (அவர்களுடன் சமாதானஞ் செய்துகொள்ளும் விஷயத்தில்) அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வையும்; நிச்சயமாக அவன்தான் (உங்கள் சமாதானப் பேச்சை) மிகக் கேட்பவன், மிக அறிபவன்."

(குர்ஆன்.)

இன்னும், இதேபோல் எதிரிகளுடன் யுத்த சமயத்திலும் நீதியாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்ளவேண்டுமென்றும், அவர்கள் சமாதானத்தை விரும்பினால், சமாதானஞ் செய்து கொள்ளத் தயங்கக் கூடாதென்றும் திருகுர்ஆனின் பல்வேறிடங்களிலும் வலியுறுத்திக் கூறப்பட்டுளது. இதிலிருந்தே இஸ்லாத்தின் நேர்மையான போதனைகளையும், அதன் மகிமைகளையும் தெரிந்து கொள்ளலாம். ஆனால், எதிரிகளின் கண்களில் சத்தியத்தைப் பார்க்க உண்மையான வெளிச்சம் இல்லாததினாலோ, அல்லது, தெரிந்தும் வேண்டுமென்று

பொறுமையாலோ பல அண்டப் புழுகுகளை அடிக்கடி கக்கி வருகின்றனர். எப்பொழுது தான் இவர்கள் உண்மையை உணரப் போகின்றனரோ? அல்லாஹ்வுக்கே வெளிச்சம்.

நபிகள் நாயகம் உலக விருக்ஷகர் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் இதரர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? எவ்வாறு போதித்துள்ளார்கள்? என்ற விஷயத்தைப் பற்றி சிறிது ஆராய்வோம்:—

எதிரிகளின் மனைவி மக்களுடன் எங்ஙனம் ஒழுகவேண்டும்?

நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் சேனைகளுக்குத் தலைவராக யாரை ஏற்படுத்தினாலும் முதன் முதலாக அவருக்கு அல்லாஹ்வின் சக்திகளை ஞாபகப்படுத்தி, அல்லாஹ்வின் ஆணைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று போதிப்பார்கள். இரண்டாவதாக, முஸ்லிம் வீரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும்; இறைவனை மறுக்கும் எதிரிகளுடன் போர் புரிதல் வேண்டும்; யுத்த இறுதியில் அகப்படும் பொருள்களில் மோசஞ் செய்யலாகாது; யாருக்கேனும் வாக்குறுதி கொடுத்தால் அதைத் தகர்த்தெறியக்கூடாது; எந்த எதிரிகளையும் சித்திரவதை செய்யக்கூடாது; சிறுவர்களை வெட்டக்கூடாது என்று உபதேசித்து அனுப்புவது வழக்கம்' என்று ஹஜ்ரத் ஸுலை மானிப்னு புரைதா (ரலி.) அவர்கள் கூறியுள்ளார்கள். "சிறுவர்களையும், மாதர்களையும் கொல்வதை நாயகமவர்கள் தடை செய்திருப்பதாக" ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் நவின்றிருக்கிறார்கள்.

ஓர் யுத்தத்தில் நானும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் இருந்தேன். அப்பொழுது, சிறிது தூரத்திற்கப்பால் ஒரு பெரிய கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரை சூழ்ந்து கொண்டிருப்பதை நாயகமவர்கள் பார்த்தார்கள். உடனே ஒரு யுத்த வீரரை அழைத்து 'நீர் அங்கு சென்று விஷயங்களை உணர்ந்து விரைவில் திரும்பிவாரும்' என்று கூறி அனுப்பினார்கள். அவ்வீரர் அங்கு சென்று மீண்டும் திரும்பி வந்து "நாயகமே! பெண்களைக் கொலை செய்வதற்காக ஹஜ்றத் காலித்திபின் வலீத் (ரலி.) தலைமையில் நமது வீரர்கள் கூடி நிற்கின்றனர்" என்க, 'நீர் அதிவிரைவாக அவண் சென்று, தலைவரான காலித் இடம் 'பெண்களையும் சிறுவர்களையும் வெட்டக் கூடாது என்று நான் சொல்லியதாகக் கூறும்' என்று அனுப்பி வைத்தார்கள்," என்று ஹஜ்ரத் ரபாஹிப்னு ரபீஃ (ரலி.) அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேல்வரைந்த விஷயங்களிலிருந்து எதிரிகளுடன் எவ்வளவு இரக்கத்துடன் நபிகள் நாயகமவர்கள் நடந்துகொண்டார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

பகைவர்களின் தூதுவர்களை மன்னித்தல்.

ஒரு சமயம் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு, பின்னர் இஸ்லாத்திற்கு மாற்றமாக தன்னை அல்லாஹ்வின் தூதனென வாதாடிய 'முஸைலமத்துல் கத்தாப்' என்பவன், தனது தூதுவர்களாக இப்னு இதாலா, இப்னு நவாஹா, என்ற இருவர்களையும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சமூகத்திற்கு அனுப்பினன். நாயகமவர்கள், அவ்விருவரையும் விளித்து, 'நீங்கள் முஹம்மதை (அதாவது என்னை) அல்லாஹ்வின் இறுதித் தூதர் என்று சாக்ஷி கூறுகிறீர்களா?' என்று கேட்க, அவ்விருவரும் 'நாங்கள் 'முஸைலமா' என்பவரையே அல்லாஹ்வின் தூதர் என்று கூறுகிறோம்' என்றனர். அதுபோழ்து, நாயகமவர்கள் (ஸல்) 'எதிரிகளின் தூதுவர்களைக் கொல்வது ஆகுமாக்கப்பட்டிருந்தால் இவர்களைக் கொல்லும்படி உத்தரவிட்டிருப்பேன்; ஆனால், நான் அவ்வாறு செய்ய விரும்பவில்லை' என்றுகூறி, அவ்விருவரையும் அனுப்பிவிட்டார்கள். இவ்வாறே எதிரிகளின் தூதுவர்களைக் கொல்வதை இஸ்லாத்தில் விலக்கப்பட்டிருக்கிறது' என்று ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி.) அவர்கள் கூறுகிறார்கள்.

இஸ்லாமாகாதிருக்கும் பெற்றோர்களுடன் எவ்வாறு நடந்துகோள்வது?

ஹஜ்ரத் அஸ்மாஉ (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். அதாவது, "இஸ்லாத்தைத் தழுவாத எனது தாய் மதீனா முனவ்வராவுக்கு வந்திருந்தபோழ்து, அவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்வதென்று தெரியாமல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் சென்று விஷயத்தை விளக்கக்கேட்க, அவர்களுடன் (தாயுடன்) 'நன்மையே செய், நல்ல முறையில் நடந்துகொள்' என்று கட்டளையிட்டார்கள்." என்பதே.

காபிர்களுக்கு அபயம் கொடுத்தல்

ஹஜ்ரத் உம்முஹானி (ரலி.) அவர்கள் கூறுவதாவது: மக்கமா நகர் ஜெயிக்கப்பட்ட சமயம், நான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருசன்னிதானத்திற்குச் சென்றேன். அதுபோழ்து, நாயகமவர்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள். நாயகத்தின் பிரிய மகளாரான ஹஜ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள், நாயகம் குளிப்பதை பிறர் பார்க்காவண்ணம் திரை கொண்டு மறைத்துக்கொண்டிருந்தனர். நான் சென்று நாயகமவர்களுக்கு ஸலாம் கூறினேன். இந்த சப்தத்தைக் கேட்ட நாயகமவர்கள் "இப்பெண்மணி யார்?" என்று வினவ, நான், 'நாயகமே! அபூதாலிபின் மகள் உம்முஹானி யாகும்.' என்றேன். இதைக்கேட்டு நாயகமவர்கள், (ஸல்.) தங்களின் வரவு நல்வரவாகுக, என்று மொழிந்தார்கள். நாயகமவர்கள் குளித்து முடிந்தவுடன் எட்டு ரக்அத்து நபில் தொழுதுவிட்டு வெளியில் வந்தபோழ்து, நான், நாயகமே! நான் பாதுகாப்புக் கொடுத்திருக்கும் இப்னுஹபீபாவை, என் சகோதரர் அலி (ரலி.) கொன்று விடுவார்கள்போல் தெரிகிறது' என்றேன். அதற்கு நாயகமவர்கள் 'ஏ உம்முஹானியே! நீ யாருக்கு அபயம், பாதுகாப்பு அளித்தாயோ அவர் என் பாதுகாப்பில் இருக்கிறார்' என்று பதில் கூறினார்கள்.

எதிரிகளின்மீது கருணையும் அவர்களை மன்னித்தலும்

உஹத் யுத்தத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றிய ஸஹாபிகளுக்கும் காபிர்கள் இழைத்த கொடுமைகள் அளவிடவெண்ணாது. நாயகத்தின் (ஸல்.) மேன்மையான பல் ஷஹீதாகிவிட்டது; திருமுகம் காயப்படுத்தப்பட்டது. திருமேனி இரத்தத்தால் துவைக்கப்பட்டது. இவைகளைக் கண்ணுற்ற திருத்தோழர்களான ஸஹாபாக்கள், நாயகமவர்களிடம் வந்து, மனமுருகி கண்ணீர் விட்டவர்களாக 'நாயகமே! நுங்களுக்கு இத்துணை கஷ்டம் கொடுத்த எதிரிகளை சபிக்கக் கூடாதா? வென்று கேட்டதற்கு நாயகமவர்கள், ஸஹாபாக்களே! நான் இவ்வுலகிற்கு வந்தது மக்களை சபித்து அழிப்பதற்கல்ல; ஆனால், மக்களின் மீது கிருபையாளனாகவும் மக்களுக்கு நேர்வழி புகட்டக்கூடியவனாகவுமே அனுப்பப்பட்டுள்ளேன்' என்று கூறிவிட்டு, இருகரங்களையும் மேலே உயர்த்தி 'மஹா கருணையாளனான ரஹ்மானே! எனது கூட்டத்தினருக்கு நேர்வழி காட்டுவாயாக. அவர்கள், தாங்கள் இன்னதுதான் செய்கிறோம் என்று விளங்காதவர்களாயிருக்கின்றனர்' என்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

கருணையே உருவாயமைந்த நாயகத்தின் (ஸல்.) அன்பு இது மட்டுமா? அல்ல, மக்கமா நகரை ஜெயித்து வெற்றிபெற்று ஊரினுள் புகுந்தபோழ்து, இஸ்லாமிய வீரர்கள், இஸ்லாத்திற்கும் இஸ்லாமியர்கட்கும் இடையூறு விளைவித்த எதிர்களைத் தருவிப்பிடித்துக் கொண்டுவந்து நாயகத்தின் (ஸல்.) முன்னால் நிறுத்தினார்கள். அப்பொழுது நாயகமவர்கள், அவ்வெதிரிகளை என்னவேண்டுமானாலும் செய்யலாம். அதாவது: துண்டந் துண்டமாக வெட்டலாம்; கழுமரத்திலேற்றி வைத்து சித்திரவதை செய்யலாம்; நெருப்பிலிட்டு பஸ்பமாக்கி விடலாம்; அடிமைகளாக்கிக் கொள்ளலாம்; ஊரைவிட்டு துரத்தி விடலாம்; இவ்வாறு நாயகமவர்கள் நாடிய விதம் செய்ய இடமிருந்தும் என்னசெய்தார்கள்? அம்மூர்க்கர்களைநோக்கி "அன்பர்களே! இன்று நுங்கள்மீது எத்தகைய தண்டனையுங் கிடையாது; நீங்கள் விடுவிக்கப்பட்டவர்களாவீர்கள்; எனவே, எதேச்சையாய்ச் செல்லுங்கள்" என்று வெகு அன்பாகவும் பக்ஷமாகவும் தெரிவித்தார்கள். ஆஹா என்ன கருணை! என்ன தயாளம்!! உலக சரித்திரத்தில் இதற்கு நிகர் காட்ட முடியுமோ?

இன்னும் இதுபோன்ற அநேக விஷயங்களை வரையலாமெனினும் அறிவாளர்களுக்கு இதுவே போதுமென்றெண்ணி இதைப் பூர்த்திசெய்வதுடன், இத்துணை தூரம் கருணையாக இஸ்லாத்தைப் போதித்த நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும், இஸ்லாத்தின் போதனைகளையும் தூற்றுவதை விட்டொழித்து நிதான முறையில் இவைகளைப் பரிசீலனை செய்து சத்தியத்தைப் பின்பற்றும்படி இஸ்லாத்தைத் தாக்கும் இதர மதஸ்தர்களை வேண்டிக்கொள்கின்றேன். இறைவன் இவர்களுக்கு நேரான வழியைக் காட்டுவானாக. ஆமீன். வஸ்ஸலாம்.

ஹஜ்ரத் உமாமாபின்து அபில் ஆஸ் (ரலி.)

(கொழும்பு, மௌலவி. A. M. முஹம்மது ஷம் ஸுத்தீன் பாஷா ஸாஹிப் வரைவது)

தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள மாதரசியின் திருநாமம் உமாமா (ரலி.) என்பதாகும். இவர்களின் பிதாவின் நாமம் அபுல் ஆஸ் (ரலி.) என்பதாகும். இவ்வம்மையாரின் மாதாவோ, உலகரக்ஷகரான் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களின் மகளாரான ஹஜ்ரத் ஜைனப் (ரலி.) அவர்களாகும்.

பிறப்பும் கல்வி கற்றலும்

இவர்கள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருமக்கமாநகரைத் துறந்து மதினமாநகர் செல்லுவதற்கு நான்கு வருஷங்களுக்குமுன் (அதாவது கி. பி. 11-3-618) மக்காவில் ஜனன மானூர்கள். இவர்கள் ஜனனமாவதற்கு முன்னதாகவே இவர்களின் தாயாரான ஹஜ்ரத் ஜைனப் (ரலி.) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார்களாதலின் ஜனனமாகி கண்களை எப்பொழுது திறந்தார்களோ அப்பொழுதே இஸ்லாத்தின் பிரகாசத்தைக் கண்டார்கள். செவியில் பாங்கு சத்தமான 'அல்லாஹு அக்பர்' என்ற திவ்யாமிர்த வாக்கியங்களையும், நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்களின் வாக்கியங்களையும் செவியுற்றூர்கள். ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் எழுதப் படிக்கக்கூடிய வயது வந்தபொழுது, இவர்களின் தாயாரான ஹஜ்ரத் ஜைனப் (ரலி.) அவர்கள், கல்வியைக் கற்பிப்பதற்காக வேண்டி உம்மு ஸுலைம் (ரலி.) என்பவர்களிடம் ஒப்புவித்து, இஸ்லாமிய ஒழுக்கம், போதனை முதலியவைகளைக் கற்பிக்கச் செய்தார்கள். ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் சில வருஷங்களுள் இவைகளில் நன்கு தேர்ச்சி பெற்றுவிட்டார்கள்.

ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் வெளித்தோற்றத்தில் அழகு சௌந்திரியங்கள் ஒருங்கே அமையப்பெற்றவர்களாக இருந்தது போலவே உள்ரங்கத்திலும் புகழத்தக்க அழகிய நற்குணங்கள் இயற்கையிலேயே அமைந்திருந்தனர். கல்வியின்மீது ஆர்வம், ஆழ்ந்த யோஜனை, மனவைராக்கியம், இரக்க சித்தம், அன்பு, எளிய வாழ்க்கையின்மீது பிரீதி முதலியவைகளில் குரைஷி குலத்தில் இவர்களுக்குச் சமமான பெண்கள் யாருமில்லையெனக் கூறினும் மிகையாகா. நல்ல அழகிய குணங்களை யுடையவராகவும், மதுரமான மொழியுடையவராகவும், நாவன்மை படைத்தவர்களாகவும் இருந்தார்கள். ஏழைகளுடனும், துக்கத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுடனும் அன்பாக வார்த்தையாடுவார்கள். அனுதைப்பெண்களுடன் அன்பாகவும் பக்ஷமாகவும் நடந்துகொள்வார்கள். இவர்கள் வெளிரங்கமான சிங்காரிப்பு, அலங்காரங்கள், பிரயோஜனமற்ற வீண்வேலைகள் முதலியவைகளை வெறுப்பவராகவும், அவைகள் தம்மை அணுகாமல் பார்த்துக்கொள்பவராகவும் இருந்தனர். இவர்களுக்கு இயற்கையிலேயே எவர்மீதும் பொறுமையோ, அல்லது கெடுதி செய்ய வேண்டுமென்ற எண்ணமோ கனவிலும் இருந்ததில்லை.

நற்குணங்கள்

ஹஜ்ரத் உம்முஸுலைம் (ரலி.) அவர்கள், ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்களின் குணவொழுக்கங்களைப்பற்றி பின் வருமாறு கூறுகிறூர்கள். அதாவது : "சிறுபிராயத்திலிருந்தே உமாமா அவர்களின் இயற்கையில் அநேக நல்ல நடவடிக்கைகள் அமைந்திருந்தது. இவர்களுடைய வயதையுடைய பெண்கள் வீண் விளையாட்டுகளிலும், வீண் வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். ஆனுல், இவர்களுடைய ஹிருதயம் வீண் விளையாட்டுகளை விரும்பாமல் தங்கள் மாதாவின் சன்னிதானத்திலே உட்கார்ந்து இருக்கும்படி செய்துகொண்டிருந்தது. இன்னும், இஸ்லாத்தின் தத்துவங்களையும், போதனைகளையும் நன்காராய்ந்து கொண்டிருப்பார்கள்'' என்பதே.

நாயகத்தின்மீது பிரீதி

ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் உலகரக்ஷகரான முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் மீது அளவற்ற பிரீதிவைத்திருந்தார்கள். இதைப்போலவே நாயகமவர்களும் (ஸல்.) இவர்கள்மீது பிரீதி வைத்திருந்தார்கள். எவ்விதமெனில், இவர்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் சமூகம் வந்தால், நாயகமவர்கள் (ஸல்.) இவர்களின் நெற்றியில் முத்தமிட்டு தங்களது திருமடியின் மீது உட்காரவைத்துக் கொள்வார்கள்.

"நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், ஹஜ்ரத் பாத்திமத்துஜ்ஜுஹறா (ரலி.) அவர்கள் மீது வைத்திருக்கும் பிரீதிக்கு அடுத்ததரமாக இவர்கள் மீது அதிகப்பிரீதி வைத்திருந்தார்கள்" என்று, ஹஜ்ரத் உம்முஸுலைம் (ரலி.) அவர்கள் கூறியிருக்கிறார்கள். "இருத்தல், எழுந்திருத்தல், நடை ஒழுக்கங்கள், குணங்கள், நற்கிரியைகள் மீது அன்புவைத்து அவைகளைச் செய்தல் முதலிய சகல விஷயங்களில், உமாமா அவர்கள் நபிகள் நாயகத்தைப் பின் பற்றி ஒழுகிவந்ததுபோல் பெண்களில் வேறுயாரையும் நான்காணவில்லை" என்று ஹஜ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி.) அவர்கள் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள்.

விவாகமும் எழிய வாழ்க்கையும்

பெண்களுக்கரசியும், நபிகள் நாயகத்தின் (ஸல்) பிரியமகளாருமான ஹஜ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் வபாத்துக்குப்பின், அதாவது ஹிஜ்ரி 11, வருடம் ஷவ்வால் மாதம்பிறை 3-ல் ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்கு இவர்களை மணமுடித்து வைக்கப்பட்டது. இவ்விவாஹ சபைக்கு, ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்களின் பிதாவான ஹஜ்ரத் அபுல் ஆஸ் (ரலி.) அவர்கள் வேண்டிக்கொண்ட பிரகாரம், ஹஜ்ரத் ஸுபைரிப்னு அவாம் (ரலி.) அவர்கள் விஜயம் செய்து விவாகத்தை வெற்றிகரமாக நடத்திவைத்தார்கள்.

ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் சாந்தமுடையவர்களாகவும், வணக்கமுடையவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் தயாள மனதுடையவர்களாகவும் இருந்து வந்தார்கள். இவர்கள் ஜீவியத்தின் அதிகமான காலத்தை ஆண்டவனின் தியானத்தில் சிலவு செய்தார்கள். இன்னும், ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதிலும், அவர்களின் கஷ்டம், துக்கம் முதலியவைகளில் இவர்களும் பங்கொடுத்துக் கொள்வதிலும், ஏழைகளையும், அகதிகளையும் மிக விருப்பமாகவும், ஆவலாகவும், மனப்பூர்வமாகவும், ஆதரித்து உதவி செய்வதிலும் பங்கெடுத்து வந்தார்கள்.

தயாளகுணம்

ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்களுக்கு கல்வி புகட்டிய ஹஜ்ரத் உம்முஸுலைம் (ரலி.) அவர்கள், இவர்களின் குண வொழுக்கங்களைப்பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். அதாவது:—"உமாமா அவர்கள், எல்லையற்ற கொடை வள்ளலாகவும், தன்னைவிட பிறரை மேலானவராகக் கருதுபவராகவும், தங்களில்லத்தில் ஏதாவது நல்ல பதார்த்தங்கள் செய்தால் அதை ஏழைப் பெண்களுக்கு அனுப்பி அவர்களையும் அருந்தச் செய்பவர்களாகவும் இருந்து வந்தனர். ஓர் தினம் ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள் இல்லத்தில் ஒரு வேளை ஆகாரம் மட்டுமே தயாராகியிருந்தது. அன்று அம்மாது நோன்பு நோற்றிருந்தார்களாதலின், அதை நோன்புத் திறப்பதற்கு வைத்திருந்தார்கள். அது போழ்து ஒரு ஏழைப் பெண் இவர்களிடம் வந்து தனது ஏழ்மைத்தனத்தையும் ஆகாரமில்லாமல் அவதிப்படும் இன்னல்களையும் கூறினள். இதைச் செவியுற்ற ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள், தாம் நோன்பு திறக்கவைத்திருந்த அவ்வாகாரத்தை அப்படியே எடுத்து அவ்வேழைப் பெண்ணிடம் கொடுத்தனுப்பிவிட்டு, தாங்கள் தண்ணீரைக்கொண்டு நோன்பைத் திறந்தார்கள். என்னே இவர்களின் தயாளத் தன்மை!

இன்னும் இது போன்ற அநேக சம்பவங்கள் இவர்கள் சரிதையில் காணக்கிடக்கின்றது. இறுதியாக இத்துணை மேன்மை வாய்ந்த ஹஜ்ரத் உமாமா (ரலி.) அவர்கள், ஹிஜ்ரீ 61, ரஜப்மாதம் பிறை 26,ல் இவ்வுலகை நீத்து இறையடி சேர்ந்தார்கள். (இன்னாலில்லாஹிவ இன்னாஇலைஹி ராஜிஊன்)

"பேஷ்வா"

பரிசுத்த வேதங்களில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிய முன் அறிக்கைகள்

“ நிச்சயமாக நாம் உம்மை அகிலத்தாருக்குக் கருணையாக அனுப்பி இருக்கிறோம் ” என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறித்து இறைவன் கூறி இருப்பதால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நபித்துவம் அகிலத்தாருக்குக் கருணையாக அமைந்துள்ளது என்பதாக நாம் கருதுகிறோம். மேலும், “ நாயகம் (ஸல்.) அவர்கள் உலகத்திலுள்ள அனைவர்க்கும் வழிகாட்டியாக வந்திருக்கிறார்கள் ” என்பதாக நாம் ஈமான் கொண்டிருக்கிறோம். தவிரவும் உலகிலுள்ள பரிசுத்த வேதங்களில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நபித்துவத்தைக் குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதாகவும், அவ் வக்காலத்திலுள்ள நபிமார்கள் தங்களைப் பின்பற்றியவர்களுக்கு இதனைக்குறித்து அறிக்கை செய்திருக்கிறார்கள் என்றும் நாம் உறுதி கொண்டுள்ளோம். எனவே, நாயகம் (ஸல்.) அவர்களைக் குறித்து முற்காலத்திய வேதகிரந்தங்களில் காணப்படும் சில விபரங்களை ஈண்டு எடுத்தெழுதுகிறோம்.

தௌராத்திலுள்ள முதலாவது அறிக்கை

“ இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன். நான் அவரை ஆசீர்வதித்து அவரை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன். அவர் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவார். அவரைப் பெரிய ஜாதியாக்குவேன்.”

என்பதாக பைபிள் பழய ஏற்பாடு ஆதியாகமம் 17-வது அதிகாரத்திற் கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனங்களிற் கூறப்பட்டுள்ள விஷயங்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நபித்துவத்தைக் கொண்டுதான் பூர்த்தியடைகின்றது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உலகம் முழுவதற்கும் கருணையாக உலகம் முடியும்வரை இருப்பதன் மூலமாக ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களை இறைவன் ஆசீர்வதித்த காரியம் நிறைவேறுகிறது. ஆகவே, இவ்வசனங்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையே குறிப்பிடுகின்றன.

இரண்டாவது அறிக்கை

“ உன் தேவனாகிய ‘ கர்த்தர் ’ என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதாரரிலிருந்து எழும்பப் பண்ணுவார் ”

என்பதாக ஷை பழைய ஏற்பாடு உபாகமம் 18-வது அதிகாரம் 15-வது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஷை உபாகமம் ஷை அதிகாரம் 18-19-வது வசனங்களில் இன்னும் அதிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு :—

“ உன்னைப்போல ஒரு தீர்க்க தரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழுப்பப்பண்ணி, என் வார்த்தைகளை, அவர் வாயில் அருளுவேன் ; நான் அவர்களுக்குக் கற்பிப்பதை யெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.”

மேலே கூறப்பட்ட இம்மூன்று வசனங்களிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வருகையைப்பற்றித் தெளிவாக முன்னறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு :—

1. பனூ இஸ்ராயீல்களாகிய யூதர்களுக்கு பனூ இஸ்மாயீல்களான அரபியர் சகோதரர்கள்.

2. பனூ இஸ்ராயீல்களாகிய யூதர்களில் ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்களைப்போல் எந்த நபியும் பிறக்கவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களைப்போலிருப்ப தாக எந்த நபியும் தம்மைக் குறித்து தாவாச் செய்யவுமில்லை. அப்படி தாவாச் செய்யவும் முடியாது. அவர்களெல்லோரும் ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்களது கலீபாக்களாகவே இருந்தனர். இதனால்தான் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் காலம்வரை யூதர்கள் இம்

முன்னறிக்கை நிறைவேறவேண்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டே வந்தனர். ஆகவே, ஹஜ்றத் யஹ்யா (அலை.) அவர்கள் நபித்துவத்தை தாவாச் செய்தபோது ஜனங்கள் ஹஜ்றத் யஹ்யா (அலை) அவர்களிடம் "நீர் கிறிஸ்துவரா?" என்று வினவினர். அதற்கவர்கள் "இல்லை" என்ருர்கள். பிறகு அவரிடம் "நீர் தீர்க்க தரிசியானவரா?" என்று வினவினர். அதற்கு அவர்கள் "இல்லை" என்ருர்கள். இவ்விபரம் பைபிள் புதிய ஏற்பாடு, யோவான் முதலாவது அதிகாரம் 19-வது வசனத்திலிருந்தும் 23-வது வசனம் முடியக் கூறப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி, நீர் யார் என்று கேட்ட பொழுது, அவர் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டார். அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு நான் அவன் அல்ல என்றர். நீர் தீர்க்க தரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றர். அவர்கள் பின்னும் அவரை நோக்கி, நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக் குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர், கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றர்."

எனவே, ஹஜ்றத் யஹ்யா (அலை.) அவர்களிடம் யூதர்கள் இவ்வாறு வினவியதிலிருந்து அக்காலத்தில் அவர்கள் மூன்று நபிமார்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் என்று தெரிய வருகிறது. இம்மூவரில் ஹஜ்றத் யஹ்யா (அலை.) அவர்கள் எலியாவைப் போலிருப்பதாக ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் கூறினுர்கள் என்ற விபரம் மத்தேயு 17-ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. தவிரவும் தாம் தான் "கிறிஸ்து" என்பதாக ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் தாவாச் செய்திருக்கிருர்கள். ஆகவே, இனி வரவேண்டியது "தீர்க்க தரிசியானவர்" மட்டிலும்தான். ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களுக்குப் பிறகு பனூ இஸ்ராயீல்களில் ஒருவரும் நபியாகவில்லை. இந்தப் பதவியை இறைவன் நமது நாயகம் (ஸல்.) அவர்களுக்கே அளித்திருக்கிருன். இதனைப் பற்றி திரு மறையாம் குர்ஆன் ஷரீபில்,

"பிர்ஔனின்பால் ஒரு ரஸூலை நாம் அனுப்பியது போல உங்கள்மீது சாக்ஷியம் சொல்பவராக உங்களிடம் ஒரு ரஸூலை நிச்சயமாக நாம் அனுப்பி இருக்கிறேம்."

என்று இறைவன் கூறி இருக்கிருன்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களும் அநேகம் காரியங்களில் ஒன்று போலவே இருக்கிருர்கள்.

A. இவ்விருவரும் நாற்பது வயது முடிந்து நாற்பத்து ஒன்ரும் வயதின் ஆரம்பத்தில் நபித்துவத்தை அடைந்தார்கள்.

B. இவ்விருவரும் காபிர்களது பகையின் காரணமாக ஹிஜ்றத்துச் செய்தார்கள்.

C. இவ்விருவரும் தனித்தனி ஷரீஅத்துடைய நபிமார்களாவார்கள்.

D. காபிர்களை எதிர்த்து யுத்தம் செய்யும்படி இவ்விருவருக்கும் தெய்வக் கட்டளைவந்தது.

E. ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள், சிதறிப்போய் அழிந்திருந்த தமது சமூகத்தினரை எகிப்தை விட்டு வெளியேற்றி ஓரிடத்தில் ஒன்று கூட்டினுர்கள். நமது நாயகம் (ஸல்.) அவர்களும் வெவ்வேருகப் பிரிந்து பிளவுப்பட்டிருந்த தங்களது அறபி சமூகத்தினரை கட்டுப்பாடான ஒரு சமூகத்தினராக ஐக்கியப்படுத்தினுர்கள்.

F. ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களுக்குப் பத்துக் கற்பனைகள் அருளப்பட்டன. அவைகள் அல்லாஹு தஆலாவின் வாக்குகளாகும். இதுபோல நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு திருகுர்ஆன் அருளப்பட்டது. அது இறைவனின் வாக்காகும். ஆகவே "எனது வார்த்தைகளை அவரது நாவில் அருளுவேன்" என்று ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களுக்கு இறைவன் கூறியதானது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையே குறிக்கிறது. ஏனெனில், திருகுர்ஆனைத் தவிர வேறு எந்த வேதத்திலும் அல்லாஹு தஆலாவினது வார்த்தைகள் பாதுகாக்கப்படவுமில்லை, பதமும் பொருளும் ஒருங்கே கூடியவாறு வேறு எவருக்கும் வஹி அறிவிக்கப்படவுமில்லை. திருகுர்ஆன் தான் பதமும் பொருளும் வஹியாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதிலுள்ள ஒவ்வொரு பதமும் இறைவனது வார்த்தையாகவுமிருக்கிறது. தவிரவும், ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பத்து கற்பனைகளைத் தவிர தௌராத் வேதத்திலுள்ள இதர வாக்கியங்

கள் அல்லாஹுத ஆலாவினாலருளப்பட்ட வாக்கியங்களாக இல்லை என்று யூதரும் கிறிஸ்தவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அன்றியும் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களைத் தவிர்த்து இதர நபிமார்களுக்கு அருளப்பட்ட வேதங்களில் முக்கியமாக இவாஞ்சலியத்தின் சுவிசேஷங்கள் (இஞ்ஜில்) இறைவனாலருளப்பட்டவைகளானாலும் அவைகளின் வாக்கியங்கள் அல்லாஹு தஆலாவினது வாக்கியங்களல்ல. ஆனால், திருகுர்ஆனில் இறைவன் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறித்து "(தமது) இச்சையாக அவர் பேசமாட்டார். அது அறிவிக்கப்பட்ட வஹியையல்லாமல் வேறில்லை. அவருக்கு பலத்த சக்தியுள்ளவர் கற்பித்தார்." என்பதாகக் கூறி இருக்கிறான்.

மூன்றாம் அறிக்கை

தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பருவத்திலிருந்தும் வந்தார். அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது. அவர் துதியினால் பூமி நிறைந்தது. அவருடைய பிரகாசம் சூரியனைப் போலிருந்தது. அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின. அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது. அவருக்கு முன்பாகக் கொள்ளைநோய் சென்றது. அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது. அவர் நின்று பூமியை அளந்தார். அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார். பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது. என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது. அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது. கூஷானின் கூடாரங்கள் வருத்தத்தில் அகப்பட்டிருக்கக் கண்டேன். மீதி யான் தேசத்தின் திரைகள் நடுங்கின."

என பைபில் பழையஏற்பாட்டில் ஆபகூக் அதிகாரம் 3-ல் வசனம் 3-லிருந்து 7 முடிய கூறப்பட்டிருக்கிறது. இங்கு கூறப்பட்ட பாரான் பர்வதம் என்பது திரு மக்காவின் மலைகளுக்குப் பெயர் என்பது உலகறிந்த உண்மை. அங்கிருந்து பரிசுத்தர் தோன்றும் விபரம் இதில் கூறப்பட்டிருப்பதால் இதிலுள்ள விபரங்கள் முழுவதும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறிக்கிறது என்பது பிரத்தியக்ஷம்.

நான்காவது அறிக்கை

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவை ஜெயித்துக்கைப்பற்றியபோது தங்களது படையெடுப்பைப்பற்றிய தகவல் மக்காவாசிகளுக்குத் தெரியக்கூடாது என்பது நாயகம் (ஸல்.) அவர்களது விருப்பம். நாயகம் (ஸல்.) அவர்களது விருப்பப்படி காரியம் நிகழ்ந்தது. நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவினண்டையிற் சென்று கூடாரமடித்து, தங்கள் வருகையை மக்காவாசிகள் உணரட்டும் என்பதற்காக நெருப்புக் கொளுத்தியபோதுதான் மக்காவாசிகளுக்கு விஷயம் தெரிந்தது. இதனைக் குறித்து பைபிள் பழைய ஏற்பாடு, மல்கியா, 3-வது அதிகாரத்தில்,

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார். இதோவருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும், அவர் வரும்நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலை நிற்பவன் யார்?" என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, பைபிள் பழைய ஏற்பாட்டில் ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் மூலமாக முன்னறிக்கை செய்யப்பட்ட தீர்க்கதரிசியானவரின் வருகையை யாவரும் வழிபார்த்துக்கொண்டிருந்தார்கள் என்பது இவ்வசனங்களிலிருந்து தெரியவருகிறது. இவை பைபிள் பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்திலுள்ளவை. ஆகவே, இவ்வசனங்களிற் கூறப்பட்டவை ஒன்று ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைக் குறிக்க வேண்டும், அல்லது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் குறிக்கவேண்டும். ஆனால், இவைகள் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களைக் குறிக்கவில்லை என்பதற்குப் பல காரணங்களுள.

A. மத்தேயு என்பவர் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைக் குறித்து பைபில் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருப்பதாகக் கருதப்படும் எல்லா முன்னறிவிப்புகளையும் ஒன்று சேர்த்து எழுதிவைத்திருக்கிறார். அவைகளில் இந்த முன்னறிவிப்புக் கூறப்படவில்லை.

B. முற்காலத்திலுள்ள நூலாசிரியர்களில் கிறிஸ்துவ மேதாவி ஒருவர் இந்த முன்னறிவிப்பை ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்ட முன்னறிவிப்பல்லவென்று கூறி இருக்கிறார்.

C. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களை கிறிஸ்துவர்கள் தேவனின் குமாரர் என்று கூறுகின்றார்கள். றஸூல் அதாவது தூதர் என்று கூறுவதில்லை.

D. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் ஆலயத்தை ஜெயிக்கவில்லை. இத்தியாதி காரியங்கள் நமது நாயகம் (ஸல்.) அவர்களிடம் இருக்கின்றனவா என்று நாம் சிந்தித்துப் பார்க்கும் போது அவைகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் பூரணமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

ஹஜ்றத் யஹ்யா (அலை.) அவர்கள் தம்மை தீர்க்க தரிசியானவர் என்பதாக அங்கிகரிக்கவில்லை. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களும் தம்மைக் குறித்து அவ்வாறு சொல்லிக் கொள்ள மறுத்துவிட்டார்கள். திடீரென வரவேண்டும் என்பதே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நோக்கமாக இருந்தது. தவிரவும் திருமக்காவின்மீது படையெடுத்துச் சென்றபோது நாயகம் (ஸல்.) அவர்கள் படைகளுடன்தான் சென்றார்கள். தங்கள் கிப்லாவாகிய கஃபாவைத் தங்கள் ஆலயம் என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிக்கொள்வது மிகவும் பொறுத்தமான விஷயமேயாகும்.

ஐந்தாவது முன்னறிவிப்பு

யஸ்கியா (அலை) அவர்கள் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் நமது நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களையும் குறித்து முன்னறிக்கை செய்திருக்கிற விபரம் பைபிள் பழைய ஏற்பாடு ஏசாயா 21-வது அதிகாரம் 7-வது வசனத்தில்,

“அவன் ஒரு இரதத்தையும் ஜோடு ஜோடான குதிரை வீரர்களையும், ஜோடு ஜோடாகக் கழுதைகளின் மேலும், ஒட்டகங்களின்மேலும் ஏறி வருகிறவர்களைக் கண்டு”

என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள கழுதையின்மேல் ஏறிவருபவர் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களாவார்கள். ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் கழுதையின்மீது சவாராகி எருசலேம் நகரையடைந்து புறு விற்பனை செய்பவர்களையும் மற்றவர்களையும் அங்கிருந்து வெளியேற்றி உண்மையான வணக்கம் புரிபவர்களை நியமித்தார்கள். நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒட்டகையின்மீது சவாராகி மக்கமாநகருக்குள் பிரவேசித்து கஃபாவிலிருந்து விக்கிரகங்களை அகற்றி விக்கிரக ஆராதனையைவிட்டு அதனைச் சுத்தப்படுத்தி ஏகநாயனை வணங்கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

ஆறுவது முன்னறிவிப்பு

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருமக்காவாசிகளை எதிர்த்து ‘பத்று’ என்ற ஸ்தலத்தில் செய்த சண்டையையும், ஹிஜ்றத்தையும் குறித்து இம்முன்னறிவிப்பில் அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இவ்வறிக்கை ஷை ஏசாயா—21-வது அதிகாரத்தில் 13-வது வசனத்திலிருந்து 17-வது வசனம் முடியக் கூறப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு:—

“அரபியாவின் பாரம். திதானியராகிய பயணக்கூட்டங்களே நீங்கள் அரபியாவின் காடுகளில் இராத்தங்குவீர்கள். தேமாதேசத்தின் குடிகளே! நீங்கள் தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய், தப்பிஓடுகிறவர்களுக்கு அப்பங்கொடுக்க எதிர்கொண்டுபோங்கள். அவர்கள் பட்டயங்களுக்கும், உருவினகட்கத்துக்கும், நாணேற்றின வில்லுக்கும், யுத்தக் கொடுமைக்கும் தப்பி ஓடுகிறார்கள். ஆண்டவர் என்னை நோக்கி: ஒரு கூலிக்காரனுடைய வருஷங்களுக்கொத்த ஒரே வருஷத்திலே கேதாருடைய மகிமை யெல்லாம் அற்றுப்போம். கேதார் புத்திரராகிய பராக்கிரம வில்வீரரின் தொகையில் மீதியானவர்கள் கொஞ்சப்போராயிருப்பார்கள்.”

இவ்வசனங்களில் ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்களுடன் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத்துக்குச் செய்ததைக் குறித்து மிகத் தெளிவாக சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களது ஹிஜ்ரத்திலிருந்து புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. இந்தப்பேறு வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. ஹிஜ்ரத்திற்கு பின் ஒரு வருஷம் பூர்த்தியாகச் சென்றபிறகு இரண்டாவது வருஷத்தில்தான் ‘பத்று’ச்சண்டை நிகழ்ந்தது. இச்சண்டையின் மூலமாக கேதாருடைய பராக்கிரமம் நீங்கிவிட்டது. ஏனெனில், குறைஷியரில் அபூஜஹ்ல் உள்பட எழுபது வீரர்கள் இச்சண்டையில் கொல்லப்பட்டனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை ஷஹீதாக்கிவிடவேண்டும் என்று ‘தாருன்னத்வா’வில் கூடிப் பேசிய தலைவர்களில் கிட்டத்தட்ட எல்லோரும் வெட்டப்பட்டனர். அவர்களிலுள்ள பிரபலஸ்தர்களில் எழுபதுபேர் கைதியானார்கள். இதுபோலவே ‘ஹுனைன்’ யுத்தத்தைக்குறித்தும் ஒரு முன்னறிக்கை இருந்துவருகிறது. விரிவஞ்சி அதனை எழுதாமல் விடுத்தனம்.

ஏழாவது அறிக்கை

‘ஹஜ்ஜத்துல்விதா’ ஐப்பற்றிய முன்னறிவிப்பு. ஹிஜ்ரி 10-வது வருஷத்தில் நபிகள் நாயகம்

(ஸல்.) அவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்ல முடிவு செய்து தங்களது பயணத்தைக் குறித்து அறபி நாட்டில் அறிக்கை செய்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக மதீனா முனவ்வராவிற்கு வந்து சேர்ந்தார்கள். ஆகவே, மிகப் பெருங்கூட்டத்துடன் நாயகம் (ஸல்.) அவர்கள் மதினாமுனவ்வராவைவிட்டுப் புறப்பட்டு 'துல் ஹுலைபா' என்ற இடத்தில் 'இஹ்ராம்' கட்டிக் கொண்டு மக்கமா நகரை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். பரிசுத்தமான இக்கூட்டத்தில் சேர்ந்துகொள்ள வழி நெடுக ஜனங்கள் ஏராளமாக வந்து சேர்ந்துகொண்டே இருந்தனர். இவர்கள் ஒரு மேட்டின் மீதேறினாலும் பள்ளத்தில் இறங்கினாலும் மூன்றுமுறை 'தல்பியா' ஓதிக்கொண்டிருந்தனர். இதனைக் குறித்து ஏசாயா, அதிகாரம் 42 வசனம் 11-ல்,

"வனாந்தரமும், அதின் ஊர்களும், கேதாரியர் குடி இருக்கிற கிராமங்களும் உரத்த சத்தமிடக்கடவது. கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள் கெம்பீரித்து, பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து ஆர்ப்பரிப்பார்களாக" என்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பட்டப் பகலில் பைத்துல்லாவை தவாப் செய்து அதனை மகிமைப்படுத்தினார்கள். இதனைக் குறித்து ஷெ ஏசாயா அதிகாரம் 60—ல்,

"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இதோ இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும், உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள். சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார்; அவர்களெல்லோரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்திலிருந்து வந்து, உன் குமாரத்திகள் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள். அப்பொழுது நீ அதைக் கண்டு ஓடிவருவாய்; உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்; கடற்கரையில் திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும்; ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்திற்குவரும். ஒட்டகங்களின் ஏராளமும், மீதியான், ஏப்பாத் தேசங்களின் வேகமான ஒட்டகங்களும் உன்னை மூடும்; சேபாவிலுள்ளவர்கள் யாவரும் பொன்னையும் தூபவர்க்கத்தையும் கொண்டுவந்து கர்த்தரின் துதிகளைப் பிரசித்தப்படுத்துவார்கள். கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடத்தில் சேர்க்கப்படும். நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச் சேவித்து அங்கீகரிக்கப்பட்டதாய் என் பலி பீடத்தின் மேல் ஏறும். என் மகிமையின் ஆலயத்தை மகிமைப் படுத்துவேன்"

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மகிமையுடனும் கீர்த்தியுடனும் கலப்பற்ற ஏக தெய்வக் கொள்கையைப் பிரசித்தப்படுத்தி அதனைப் பலப்படுத்திக்கொண்டே மக்கமா நகரிற் பிரவேசித்தது, கஃபாவை தவாபு செய்தது முதலிய காரியங்கள் கஃபாவிற்கு அதிகமான சிறப்பையும் மகிமையையும் அளித்தன என்பதிற் சந்தேகமில்லை. முதலாவதாகச் சிதறுண்டு இருந்த மக்கள் ஒன்று சேர்ந்தனர். இரண்டாவது சத்தியமார்க்கம் பரவிற்று.

மீதியான் என்பது ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களது புதல்வரின் பெயர். இவர் பீபிகத்தூராவின் வயிற்றில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்குப் பிறந்தார். ஏப்பாத் என்பவர் மீதியானின் புதல்வர். சேபா என்பவரும் இப்ராஹீம் (அலை.) அவர்களது பௌத்திரர். இவர்கள் யாவரும் அறபி தேசத்திலேயே குடியேறினர். நபிகள் நாயகம்(ஸல்.) அவர்கள் செய்த 'ஹஜ்ஜதுல் விதாஉ'வில் மேலே சொல்லப்பட்ட மூவரின் சந்ததியினரும் சேர்ந்திருந்தனர். கேதார் என்பது ஹஜ்றத் இஸ்மாயீல் (அலை.) அவர்களது இரண்டாவது புதல்வர். குறைஷியரின் பிதா. ஆகவே, இம்முன்னறிக்கை ஒரு அக்ஷரங்கூடப் பிசகாமல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நிறைவேற்றிய 'ஹஜ்ஜதுல் விதாவு' வைக் குறிக்கிறது.

இவ்வாறு நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது வருகையைப்பற்றி முந்திய வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது.

சந்தா நேயர்கட்கு!

அன்பர்கள் தங்கள் சந்தாக்களை முன் பணமாகக் கொடுத்து மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது பிரதானமாக இருக்க, அநேகர் இதுவரை, நடைபெறும் ஆண்டுக்குள்ள சந்தாவை செலுத்தாதே இருக்கிறார்கள். ஆகவே, நண்பர்கள் உடனே தங்கள் சந்தா பாக்கிகளை தாமிதமின்றி உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஆஷிக்கே இஸ்லாமின் ஆச்சரியகரமான கதை

இதே உலகில், இதே பூமியில், இதே ஆகாயத்தின் கீழில் ஆயிரக்கணக்கான ஆச்சரியகரமான சம்பவங்கள் நிகழுகின்றன. அவைகளைக் குறித்து அறிவும் கூட பிரமிப்படைகின்றது. என்ன நிகழுகிறது? என்ன நிகழ்ந்தது? என்பதைப்பற்றி மனிதன் ஒன்றையும் உணர்ந்துகொள்ள முடிவதில்லை. பிரபலலஸ்தர்களில் ஒருவரான ஹஜ்ரத் ஷெய்கு அல்துல் வாஹிதிப்னுஜைத் (றலி.) அவர்கள் நேரில்கண்ட ஒரு சம்பவத்தைக் கூறி இருக்கிறார்கள். அதன் விபரம் மத கிரந்தங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் கேட்பவருக்கு ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் உண்டாக்குவதாக இருக்கிறது. அதன் விபரம் வருமாறு:—

"இஸ்லாம் மதத்திற்காக ஜிஹாது செய்ய வேண்டும் என்பதாக ஒரு முறை நாங்கள் தீர்மானித்தோம். ஆனால், எங்களிடம் முதல் இல்லாததுதான் எங்களுக்குள்ள மிகுந்த சிரமம். பணத்தைச் சேர்ப்பதற்காக நாங்கள் பிரசங்கங்களைச் செய்யவாரம்பித்தோம். எனது சகாக்களிலொருவர் ஒரு கூட்டத்தில் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தார். அவர் தமது பிரசங்கத்தின் மத்தியில் "நிச்சயமாக அல்லாஹ் மூமின்களிடமிருந்து அவர்களது பொருள்களையும் அவர்களது உயிர்களையும் அவர்களுக்குச் சுவர்க்கத்திற்குப் பதிலாக விலைக்கு வாங்கிக்கொண்டான்" என்ற ஆயத்தை ஓதி அதற்கு வியாக்யானஞ் செய்துகொண்டிருந்தார். சுமார் பதினைந்து வயதுள்ள ஒரு வாலிபர் அக்கூட்டத்திலிருந்து எழுந்து என்னை நோக்கி "உயிரையும் பொருளையும் கொடுத்தால் உண்மையாகவே சுவர்க்கம் கிடைக்குமா?" என்று வினவினர். அதற்கு நான் "ஆம், சந்தேகமில்லாமல் கிடைக்கும்" என்று கூறினேன். அவர் ஒரு பெரிய பிரபுவின் குமாரராகவுமிருந்தார். எனது மறுமொழியைக் கேட்டவுடன் அவர் "எனது உயிரையும் பொருளையும் சுவர்க்கத்திற்குக் கிரயமாக விற்றுவிட்டேன்" என்று என்னிடம் கூறினர்.

இவ்வாலிபரது துணிச்சலைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்து அவரை நோக்கி "வாலிப! நீர் கூறிய வார்த்தைகளால் விளையும் பயனை நல்லவிதமாகச் சிந்தித்துப் பார்த்துக்கொள்வீராக! ஜிஹாது செய்வதில் சகிக்க முடியாத கஷ்டங்களேற்படுகின்றன. வாளாயுதத்தால் தாக்கப்படுவது மிகவும்கொடுமையாகஇருக்கும். நீர் இன்னமும் குழந்தையாகவே இருக்கிறீர். கஷ்டங்களைச் சகிக்க உம்மால் முடியாது என்பது என் அபிப்பிராயம்" என்று யான் கூறினேன். அதற்கு அவ்வாலிபர் "ஷெய்கு அவர்களே! நான் அல்லாஹுதஆலாவினிடத்தில் வியாபாரம் செய்துவிட்டு, அப்பால் அதனை விட்டுப் பின்வாங்குவது எவ்வாறு முடியும்? நான் நன்றாக யோசித்து உணர்ந்த பின்னர்தான் அல்லாஹுதஆலாவை சாக்ஷியாக வைத்துக்கூறுகிறேன்: நான் எனது பொருள்களையும் உயிரையும் அல்லாஹுதஆலாவிற்கு அற்பணஞ் செய்துவிட்டேன். இப்பொழுது எனக்குப் பொருள் தேவை இல்லை. உயிரும் தேவை இல்லை. நான் க்ஷேமத்தையே விரும்புகிறேன்" என்று கூறினர்.

அவ்வாலிபர் தமது குதிரைகளனைத்தையும், பொருள்களையும், சாமான்களையும் எங்களிடம் ஒப்புவித்துவிட்டார். சில தினங்களுக்குப் பிறகு நாங்கள் ஜிஹாது செய்யப் பிரயாணமானோம். அந்த வாலிபர் இரவு முழுவதையும் வணக்கம் புரிவதில் கழிப்பதும், பகலில் நோன்பு வைப்பதும், எங்களுக்கும் எங்கள் குதிரைகளுக்கும் ஊழியஞ்செய்வதும் வழக்கம். ஒருவன் தனது காதலியை எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருப்பதுபோல, ஜிஹாதில் தமது உயிரை விடுவதற்கு அந்த வாலிபர் துடித்துக்கொண்டிருந்தார்.

ஆகவே, நாங்கள் தினந்தோறும் பிரயாணம் செய்து உரோம ராஜ்யத்தின் ஒரு நகருக்குப் பக்கத்தில் வந்து தங்கினோம். இப்படி இருக்கும்போது ஒருநாட்காலையில் அவ்வாலிபர் "ஏ! ஐனமர்ஃய்யாவே" என்று சப்தமிட்டுக் கூறிக் கொண்டிருப்பதைக் கண்டோம். அவர் பைத்தியக்காரரைப்போல் கூச்சலிட்டுக் கூறிக்கொண்

டிருந்ததால் 'அவர் பைத்தியக்காரராகிவிட்டார்'' என்றே நாங்கள் கருதினோம். இறுதியாக அவரை நாங்கள் அழைத்து "ஐனுமர்லிய்யா'' என்பது என்னவென்று விசாரித்ததற்கு அவ்வாலிபர் தம்முடைய ஆச்சரியகரமான சொற்பனத்தைக் கூறத்தொடங்கினர். அச்சொற்பனத்தின் விபரம் வருமாறு:—

"நான் பாதி நித்திரையிலும் பாதி விழுப்பிலும் இருக்கும்போது ஒருவர் என்னிடம் வந்து 'வாலிபரே, உமது தியாகத்தை அல்லாஹுதஆலா அங்கீகரித்துக்கொண்டான். நீர் சுவர்க்கத்தில் இருப்பதற்காக உமக்கென மிகச்சிறந்த ஸ்தலத்தை அளித்துள்ளான்' என்று கூறி அம்மனிதர் என்னை அழைத்துக்கொண்டு சென்றார். நான் அவருக்குப் பின்னால் சென்றேன். நாங்கள் செல்லச்செல்ல மிகவும் அழகிய இடங்கள் வந்துகொண்டே இருந்தன. அவைகளைக் கடந்து சென்ற பிறகு மாளிகைகளுக்குப் பக்கத்தில் மிகவும் அழகிய சிறுமிகள் குழுமியிருந்தனர். இவைகளையும் கடந்து மிக உன்னதமான மாளிகைக்குப் பக்கத்தில் வந்தவுடன் பூர்ணசந்திரனையும் மழுங்க வைக்கக்கூடிய ஒரு நங்கை தலைவாசலின்மீது நின்று என்னை வழிபார்த்துக் கொண்டிருந்தனள். என்னை அழைத்துவந்த மனிதர் அக்கட்டழகியை நோக்கி "ஐனுமர்லிய்யாவே! இதோ உமது மணாளர் வந்துவிட்டார்'' என்று கூறினர். நான் அந்த ரூபவதியைக்கண்டு மையல்கொண்டுவிட்டேன். ஆகவே, அவளண்டையில் யான் நெருங்கினேன். அவள் என்னைத் தடுத்து நிறுத்தி "இந்தத் தொலி, தசை ஆகியவைகளின் அசங்கிதத்தைவிட்டு இன்று மாலைக்குள் தங்களுக்கு விடுதலை கிடைத்துவிடும். அதற்கப்புறம் தாங்கள் என்மீது கையை வைக்கலாம்'' என்று கூறினள். அதற்குள் எனது நேத்திரங்கள் திறந்துவிட்டன. நான் துயிலிலிருந்து எழுந்தேன்''

அவ்வாலிபர் இச்சொற்பனத்தைக் கூறிய பிறகு சொற்ப நேரம் முற்றிலும் மௌனமாக இருந்தார். அப்புறம் முன்போலவே புலம்பவாரம்பித்துவிட்டார். அன்று அந்திவேளையில் பகைவர்களிலுள்ள சில சிப்பாய்கள் வாளேந்திக்கொண்டு எங்களை நோக்கி வந்துகொண்டிருப்பதை நாங்கள் கண்டோம். நாங்களும் வாட்களை எடுத்து யுத்தத்திற்குத் தயாரானோம். ஆனால், எங்களில் எல்லாரைப் பார்க்கினும் மிக வீர தீரமாக அந்தப் பதினைந்து வயது பாலகன்தான் யுத்தம் செய்தார். அவர் பகைவர்களது பல்லைப் பிடுங்கிவிட்டார் என்றாலும், இறுதியில் ஷஹீதாகிவிட்டார். அவரது உடலம் உதிரத்தால் நனைந்திருந்தது. அவரது முகம் புன்சிரிப்புடனிருப்பதை யான் கண்டேன். அநேகமாக அவர் தமது காதலியிடம் சென்றிருக்கவேண்டும்.

இஸ்லாத்தைப்பற்றி ஐரோப்பிய அறிஞர்களது அபிப்பிராயம்

நாம் முஸ்லிம்களாக இருக்கிறோம். நம்முடைய சத்தியசன்மார்க்க இஸ்லாம் மதத்தில் குறைகாணும் நோக்கத்துடன் அதனை நாம் துருவி ஆராய்வதில்லை. இஸ்லாம் மதத்தில் என்னென்ன சிறப்புகளிருக்கின்றன என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்பதுமில்லை. நாம் முஸ்லிம் பெற்றோர்களுக்குப் பிறந்து, முஸ்லிம்களது வீட்டில் வளர்ந்தோம். முஸ்லிமாக இருக்கிறோமென்பதைத் தவிர்த்து வேறெதையும் நாம் கவனிப்பதில்லை. ஆனால், அந்நிய சமூகத்தினர், பிறஜாதியினர், அந்நிய நாடுகளிலுள்ள அறிஞர்கள் இஸ்லாம் மதத்தைப்பற்றி நூற்றாண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சி செய்பவர்களிற்பலர் இஸ்லாம் மதத்திலுள்ள குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்கமுள்ளவர்களாக இருப்பர். வேறு சிலர் இஸ்லாம் மதத்திலுள்ள உண்மைகளை அறியவேண்டும் என்ற ஆவலுள்ளவர்களாகவுமிருப்பர். எவ்வாறாயினும் எந்த நோக்கம்

அவர்களுக்கிருந்தாலும் அவர்கள் நமது சத்திய சன்மார்க்கத்தை ஆராய்ச்சி செய்தவர்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே, அவர்கள் ஆராய்ச்சி செய்து கூறியுள்ள அபிப்பிராயங்களையேனும் நம்மவர் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும், இஸ்லாம் மதத்திற்கு உலகில் எத்துணை மதிப்பும் கௌரவமும் ஆதரவும் இருந்துவருகிறதென்பதை இவ்வபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதன்மூலம் ஒருவாறு யூகித்தறிந்துகொள்ள முடியும். ஆகவே, ஐரோப்பிய அறிஞர்களிற் சிலரது அபிப்பிராயங்கள் இங்கெடுத்தெழுதப்படுகின்றன. அவைகளை நம்மவர் நன்கு கவனித்துப் படித்துணர்ந்து கொள்வார்களாக. (ப-ர்.)

ஜேர்மன் ஆசிரியர் ஹோக்

"நான் இஸ்லாம் மதத்தின் போதனைகளை நன்கு கவனித்துப் படித்துப் பார்த்தபோது ஆச்சரியமடைந்தேன். ஒரு மனிதன் இவ்வளவு சிறந்த வாழ்க்கைத்திட்டத்தை எவ்வாறு தயார் செய்ய முடியும் என்பது என் புத்தியில் எட்டவே இல்லை. ஆதலின் இஸ்லாம் மதம் மனித அறிவுக்கு எட்டாத விதமாக அமைக்கப்பட்ட ஒரு மதம் என்று நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். வாழ்க்கையில் நிகழக்கூடிய எந்தப் பிரச்னையை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் அதனை நிர்வகிப்பதற்குரிய வழி முறையை இஸ்லாம் மதத்தில் காணலாம். தற்கால நாகரீகத்தால் அவிழ்க்க முடியாத சிக்கலான வாழ்க்கைப் பிரச்னைகளை எல்லாம் இஸ்லாம் மதம் இற்றைக்குப் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் மிகவும் சீரிய முறையில் தெளிவு படுத்தி இருக்கிறது. இஸ்லாமிய போதனைகளிற் சிலவற்றையேனும் ஒருவர் கடைப்பிடித்தொழுகுவாராயின் அவர் தற்காலத்திலுள்ள மிகப் பெரிய மனிதராகிவிட முடியும் என்பது எனது அபிப்பிராயம். இஸ்லாம் உலகிலுள்ள எல்லா மதங்களையும் போல் அதுவும் ஒரு மதம் என்பதாகவே பொதுப்படக் கருதப்பட்டு வந்தபோதினும் அது மிகச் சிறந்த உலகத் திட்டத்தின் முன்மாதிரியாகும். இதில் அரசன் முதல் ஆண்டிவரையுள்ள ஒவ்வொருவருக்கும் வேண்டிய வழிகாட்டிகள் இருந்துகொண்டிருக்கின்றன.

நான் இஸ்லாமிய போதனைகளிலிருந்து போதியளவு நன்மையடைந்திருக்கிறேன். இஸ்லாம் மதத்தைப்பற்றிப் படித்துணர்ந்த பின்னர் என்னில் விசேஷமான காரிய சக்தி உண்டாகிவிட்டது. யாரோ ஒருவர் என்னுள் புதிய ஜீவியத்தை ஊட்டிவிட்டதுபோல் எனக்குத் தோன்றுகிறது. ஒழுக்கங்களைச் சீர்திருத்திக்கொள்வதிலும் நான் இஸ்லாமிய போதனைகளிலிருந்து அதிகமான பிரயோஜனங்களை அடைந்திருக்கிறேன். சிருஷ்டிப் பொருள்களுக்கு ஊழியஞ் செய்வதையும் ஒழுக்கங்களைச் சீர்திருத்திக் கொள்வதையும் குறித்து முஹம்மது (ஸல்.) அவர்கள் கூறியுள்ள போதனைகளை நான் நன்கு படித்திருக்கிறேன். முஸ்லிம் அல்லாதாருங்கூட இஸ்லாம் மதம் காண்பித்துள்ள வழிகளின்படி நடப்பாராயின் அநேகம் முன்னேற்றத்தை அடைந்துவிட முடியும் என்பது எனது அபிப்பிராயம். இஸ்லாம் மதத்தின் போதனைகளைப் பிரசாரம் செய்வதுதான் சமூகத்தைச் சீர்திருத்துவதற்கு தற்காலமுள்ள மிகச் சிறந்த முறை என்பது எனது அபிப்பிராயம்".

ஜி. எம். ராட்வேல்

திரு குர்ஆனை ஆங்கில பாஷையில் மொழி பெயர்த்தவர்களில் ஒருவரான இவ்வாசிரியர் கூறியுள்ள அபிப்பிராயம் வருமாறு:—

"திருகுர்ஆன் மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள ஒரு கிரந்தம். இந்த கிரந்தம் இஸ்லாம் மதத்தின் உண்மைத்தன்மையை விளக்குவதற்குப் பகிரங்கமான ஆதாரமாகும். இதில் கூறப்பட்டுள்ள போதனைகள் மனித ஒழுக்கத்தை மிகவும் அதிகமான உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வந்துவிடுபவைகள். திருகுர்ஆனில் மிகவும் அதிகமாக வற்புறுத்தப்பட்ட விஷயம் "அல்லாஹுத ஆலாவிற்கு எதையும் இணைவைக்காதீர்கள்" என்பதுதான். வெளிக்கு இந்தக் கட்டளை மிகச் சாமான்யமானதாகத் தோன்றும். ஆனால், அதில் மிகப் பெரிய தத்துவம் மறைந்திருக்கிறது. இஸ்லாமிய மக்களை ஒரு மத்திய இடத்திலும் ஒரு உணர்ச்சியின் கீழும் ஒன்று சேர்ப்பதும், அவ்வாறு ஒன்றுசேர்த்த பின்னர் அவர்களை உலகில் முன்னேறச் செய்வதும் இந்தப் போதனையின் நோக்கங்களாகும். திருகுர்ஆனின் போதனைகளது பயனாகத்தான் முஸ்லிம்கள் ஒரு நூற்றாண்டிற்கும் குறைந்த காலத்தில் ஒரு பெரிய அரசாங்கத்திற்கு உரியவர்களாகிவிட்டனர். அதற்கு முன்னுள்ள அரசர்கள் பல நூற்றாண்டுகள் முயன்

ரூலும் அவ்வளவு பெரிய அரசாங்கத்தை அடைய முடியாது. இஸ்லாம் மதம் நம்பிக்கையின் சக்தியையும் அதன்படி நடக்கும் சக்தியையும்உண்டாக்குகிறது. இஸ்லாம் மதம் உண்மையான மதமாகும்.''

மிஸ்டர் ஹம்பரீஸ்

அமெரிக்காவிலுள்ள ஒரு சஞ்சிகையில் மிஸ்டர் ஹம்பரீஸ் என்பவர் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"நான் இம்மாதிரியான நேர்மையானதும் உண்மையானதுமான மதத்தை இன்று வரை பார்க்கவில்லை. அதன் பரிபூரணமான போதனை "அல்லாஹுதஆலா ஒருவன்; முஹம்மது (ஸல்.) அவர்கள் அவனது றஸூல்" என்பது தான். இதுதான் இஸ்லாம் மதத்தின்போதனைகளின் சாராம்சம். இஸ்லாம் மதத்தை நான் ஆழ்ந்து படித்துணர்ந்ததற்குப் பிறகு "இஸ்லாம் மதம் உலகிலுள்ள எல்லா மதங்களிலும் சிறந்த மதமாக இருப்பதுமட்டுமல்லாமல் மனித இயற்கைக்கு மிகவும் ஏற்ற மதமுமாகும்" என்ற முடிவுக்கு வந்துள்ளேன். இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ள வணக்கங்கள், கொடுக்கல் வாங்கல், ஆசாரம் முதலிய ஒவ்வொன்றும் உலகில் எவ்வளவு குறைவான விளக்க சக்தியுள்ளவராக இருந்தாலும் மிகச் சுலபமாக அறிந்துகொள்ளத் தக்கவாறு அவ்வளவு எளிமையாக அமைந்திருக்கிறது. தீன் துன்யா அதாவது லௌகீகம் வைதீகம் ஆகிய இரண்டிற்கும் பிரயோஜனமுள்ள மதம் ஒன்று இருக்கிறது என்று சொல்லமுடியுமாயின் அது இஸ்லாம் மதம்தான்.''

அந்நியர்கள் இஸ்லாம் மதத்தைப்பற்றி எவ்விதம் அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர் என்பதை மேலே கூறப்பட்ட ஐரோப்பிய மேதாவிகளது அபிப்பிராயத்திலிருந்து யூகித்துக்கொள்ள முடியும். இஸ்லாம் மதம் தான் உலகின் நன்மைகளை நல்க ஏற்றவழி என்பதாக அந்நியர்கள் கருதுகின்றனர். ஆனால், நம்மவர் இஸ்லாம் மதத்தையும் இஸ்லாமிய போதனைகளையும் மறந்து விட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்நியர் இஸ்லாமிய போதனைகளால் பிரயோஜனமடைந்துகொண்டிருக்கின்றனர். நமது பார்வையில் இஸ்லாம் மதத்திற்கு எவ்வித மதிப்பும் விலையும் இல்லை. முஸ்லிம்கள் இந்த அருட்கொடையை மதிக்கவும், இஸ்லாம் மதத்தின் பிரகாசத்தில் தாங்கள் இழந்து போன கண்ணியத்தை மறுபடியும் அடையவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக. ஆமீன்.

தமிழ்நா... 600 038

ஜீவனுள்ள சமூகத்தின் ஜீவாதாரமான செய்கை

ரஷ்ய ஜப்பான் யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஒரு ஐரோப்பியர் ஜப்பான் தேசத்தில் வசித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் தமது வயோதிக ஜப்பானிய நண்பரைக்கண்டு பேசுவதற்காகச் சென்றிருந்தார். இருவரும் சம்பாஷணை செய்துகொண்டிருப்பதன் மத்தியில் யுத்தத்தைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தது. ஜப்பானிய வயோதிகர் எவ்வித மான குழப்பமோ கவலையோ இன்றி "என்னுடைய மூத்தமகன் கொல்லப்பட்டான்; இனி அவனது இரண்டு இளைய சகோதரர்களது முறை இருக்கிறது" என்று துணிந்து கூறினார். இவ்வயோதிகருக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று அவ்வைரோப்பியர் நினைத்து "கடவுள் கிருபையால் அவ்விருவரும் க்ஷேமமாக வந்து தங்களைச் சந்திப்பார்கள்" என்று கூறினர். உடனே, அந்த ஜப்பானியர் அவரைக்கூர்ந்து பார்த்து "தாங்கள் கூறியது என்ன? என் மக்கள் யுத்தகளத்திற்குச் சென்றது பகைவர்களை எதிர்த்துப் போர் செய்து தங்கள் உயிர்களைத் தியாகம் செய்வதற்காகவே. அவர்கள் மனைவி மக்கள் வீடு ஆகியவைகளுக்குத் திரும்ப வரவேண்டும் என்ற கவலைகள் அவர்களுக்குக் கொஞ்சங்கூட இருக்கக்கூடாது" என்று கூறினர்.

இந்த யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் ஜப்பானிய கடற்படைத் தளபதி "போர்ட் ஆர்தரில் ஒரு யுத்தக்கப்பலை மூழ்

கடித்து அதனை அடைத்துவிடவேண்டும்'' என்று விரும்பினர். ஒரு யுத்தக் கப்பலைத் துறைமுகத்திற்குள் இட்டுச்சென்று டைனமண்டினல் அதனை வெடி வைத்துவிட வேண்டும்; இவ்வேலையைச் செய்வதற்காக 77 வாலிபர்கள் தேவை என்பதாக அறிவித்தார். எவ்வளவு பெரிய கஷ்டமான வேலை. உலகினுள்ள எந்த வேலையும் இந்த மாதிரிக் கஷ்டமான வேலையில்லை. தெரிந்து கொண்டே வேண்டுமென்று தன்னை மரணத்தின்பால் ஒப்புவிப்பதாகும். என்றாலும், ஜப்பானிய சேனுபதியின் இவ்வேண்டுகோளை ஜப்பானிய வாலிபர்கள் நிராகரிக்கவில்லை. சேனுதிபதிக்குத் தேவையாயிருந்ததெல்லாம் எழுபத்தேழு வாலிபர்கள்தான். ஆனுல், மூவாயிரம் வாலிபர்கள் டைனமன்டுடனும் வெடிக் குண்டுகளுடனும் விளையாடுவதற்கு முன்வந்தனர். வீரத்தையும் தியாகத்தையும் பற்றிய இந்த விருத்தாந்தம் உலகச் சரித்திரத்தில் ஒருபோதும் அழியாதவாறு அமைந்தது. சேனுபதி மூவாயிரம் வாலிபர்களில் தமக்கு வேண்டிய எழுபத்தேழு பேர்களை மட்டிலும் பொறுக்கி எடுத்துக்கொண்டு அவர்கள் முன் உருக்கமான ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் வருமாறு :—

"உயிர் வீரர்களே! நான் உங்களை எங்கே அனுப்பப்போகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? போர்ட்ஆர்தரில் உங்களது யுத்தக் கப்பலை டைனமன்டினல் உடைத்து மூழ்கடித்து அதனை நீங்கள் அடைத்துவிட வேண்டும் என்பதற்காகப் போர்ட் ஆர்தருக்கு அனுப்பப் போகிறேன். மரணத்துடன் விளையாடுவதற்காகவே உங்களை அனுப்புகிறேன். உயிர் பிழைக்கலாம் என்பதற்கு எவ்வித ஆதரவுமில்லை என்பதை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ளுங்கள்.

என்னுடைய குழந்தைகளைத் தான் நான் மரணத்தின்பால் அனுப்பிக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் உணர்கின்றேன். எனக்கு மக்களிருந்தால் அவர்களையும் இந்தக் காரியத்திற்காக அனுப்புவதில்ஒரு க்ஷணநேரங்கூட நான் தாமதிக்கமாட்டேன். எனக்கு ஒரே புதல்வனிருந்தாலும்கூட அவனை நான் இந்தத் தியாகத்திற்கு அனுப்பப் பின் வாங்கமாட்டேன். ஆகவே, உங்களுடைய ஒரு கைபோனல் மற்றொரு கையினல் இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்பதை நன்கு மனதிலிருத்திக்கொள்ளுங்கள். இரண்டு கைகளையும் இழந்தவர்கள் தங்களது கால்களால் இக்காரியத்தைச் செய்துமுடிக்கவேண்டும். கால்களும் உதவாமலாகிவிட்டால் தலையால் அதனைச் செய்யவேண்டும் என்பது மனத்திலிருக்கட்டும். உங்கள் ஆபீஸர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர்களது கட்டளைகளை நிறைவேற்றவேண்டும். உங்களது ஜீவியத்தைக் குறித்து ஒரு க்ஷணநேரம்கூட சிந்திக்கலாகாது. நான் உங்களை மரணத்தின்வாயில் அனுப்புகிறேன். நீங்கள் பூரணமாகச் சமாதானத்துடனிருக்க வேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் தன்னை தியாகத்திற்குட்படுத்தச் சித்தமாக இருக்கவேண்டும். ஆகவே, பூரண அமைதியுடன் உங்களை ஆகாயத்தினிடம் ஒப்புவித்துவிட்டு உங்களுக்கிட்ட பொறுப்பை நிறைவேற்றச் செல்லுங்கள்.''

தியாகத்தின் இவ்வுணர்ச்சி ஒவ்வொரு ஜப்பானியனின் இருதயத்திலும் ததும்பிக்கொண்டிருக்கிறது. சோதரீர்! தற்போது நடைபெறுகிற சீன ஜப்பான் யுத்தத்தைப்பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். இவ்விருவரில் ஜப்பானியரின் உணர்ச்சிக்கு மேற்கண்ட சம்பவம் அறிகுறியாகும். ஆனுல், சீனரோ தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதன்பயனுக உள்மங்கோலியாவும் இன்னெரு மாகாணமும் மிகச்சுலபமாக ஜப்பானியரின் ஆதிக்கத்திற்குட்பட்டுவிட்டன. சீனர் இனியேனும் தங்களது நிலைமையைச் சீர்திருத்திக்கொள்வார்களாயின் ஓரளவு தங்கள் பகைவரை எதிர்த்து நிற்கமுடியும். இல்லையேல் அவர்களது கதி அதோகதிதான். இச்சம்பவத்திலிருந்து நம்மவர் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் அனந்தமுண்டு. முற்காலத்து முஸ்லிம்களது தியாக உணர்ச்சியையும் தியாகத்தையும் பாடமாகக் கற்றுக்கொண்ட ஜப்பானியர் மிக விரைவில் முன்னேற்றமடைந்து உலகில் மிக விசாலமான பூமியை ஆட்சிபுரியும் ரஷ்யரை மிக விரைவில் அன்று தோற்கடித்தனர். இன்று 45 கோடி மக்களை ஜனத்தொகையாகக் கொண்ட பெரிய தேசத்தை திணர அடித்துக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே, வெற்றியும் தோல்வியும் ஜனக்கூட்டத்தைப்பொறுத்தில்லை; தியாகத்தையும் உணர்ச்சியையும் பொறுத்தி

ருக்கிறது. ஆதலின், முஸ்லிம்களாகிய நாம் நமது சுயநலத்தை மறந்து சமூக நலத்தை முதன்மையாகக்கொண்டு ஒற்றுமையுடன் ஒரு காரியத்தில் பிரவேசித்தால் வெற்றியை நாம் நிச்சயமாகக் காணமுடியும். எல்லாம் வல்ல இறைவன் நம்மவருக்கு தியாக புத்தியையும் ஒற்றுமை யுணர்ச்சியையும் அளித்து அவர்களை நேரான வழியில் நடத்துவானாக. ஆமீன்.

மாதம் நூறு ரூபாய்

தக்ஷணம் ஹைதராபாத்துக்குச் செல்லும் பொருட்டு நான் லக்ஷ்மணபுரியிலிருந்து ரயிலில் பிரயாணமானேன். நான் ஏறி வந்த ரயில் வண்டித் தொடர் கான்பூருக்கு வந்து சேர்ந்தபோது மூன்று முஸ்லிம்கள் நான் இருந்த இன்டர் கிளாஸ் வண்டியில் வந்து எனக்கு எதிரிலிருந்த பென்சில் சாமான்களை வைத்து அமர்ந்தனர். அவர்களில் ஒருவர் ஆங்கில உடை தரித்திருந்தார். மற்றிருவர் ஷேர்வானியும் துருக்கி தொப்பியும் அணிந்திருந்தனர். நான் அதுபொழுது படுத்துக்கொண்டு ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். கான்பூரைவிட்டு வண்டி புறப்பட்டது. அம்மூவரும் மிக சௌஜன்யமாகப் பேசிக்கொண்டனர். அதனைப் பார்க்கும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய நண்பர்கள் என்று தோன்றிற்று.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவர்களில் ஆங்கில உடை தரித்திருந்தவர் என் பக்கல் திரும்பி "தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று என்னிடம் ஆங்கிலத்தில் விசாரித்தார். நான் ஹைதராபாத் என்று சொன்னபோது அவர் சந்தோஷமடைந்து "நாங்களும் அங்குதான் செல்கிறோம்" என்று கூறினர். பிறகு, அவர் என்னிடம் தாராளமாக பேசவாரம்பித்து இந்துஸ்தானியிலேயே சம்பாஷணை செய்தார். எனக்கு சிகரட் கொடுத்தார். அவர் எனக்கு சிகரட் கொடுத்ததற்காக நன்றி செலுத்திவிட்டு "நான் சிகரட் பிடிப்பதில்லை" என்று கூறி அதனை வாங்கவில்லை. உடனே அவர்களிலுள்ள மற்றொரு நண்பர் தம்முடைய ஷேர்வானியின் ஜேபியிலிருந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்துத் திறந்து என் முன் வைத்தார். நான் அதனையும் நன்றியுடன் வாப்பஸ் செய்தபோது அம்மூவரும் ஆச்சரியமடைந்து "தாங்கள் எப்படிப்பட்ட மனிதராக இருக்கிறீர்கள்? சிகரட் பிடிப்பதுமில்லை, தாம்பூலமருந்துவதுமில்லை," என்று கூறினர். கொஞ்சநேரத்திற்குப் பிறகு எங்களது ரயில் வண்டித் தொடர் "ஜான்ஸி" ஸ்டேஷன் வந்துநின்றது. உடனே நான் தேனீர் வரவழைத்து நானும் பருகினேன்; அவர்களுக்கும் பருகக் கொடுத்து 'சாப்பாட்டைத் தவிர்த்து தேனீர் அல்லது காப்பி பானங்களை மட்டிலும் தான் நான் அருந்தும் வழக்கமுள்ளவன் என்பதை அவர்களிடம் கூறினேன்.

இம்மூன்று வாலிபர்களும் கான்பூரிலுள்ள ஒரு கண்ணிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஒருவர் பி. ஏ. பட்டதாரி. மற்றிருவர் மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்தவர்கள். இவர்கள் காலேஜைவிட்டுவந்த பிறகு உத்தியோகத்திற்காகப் பகீரதப் பிரயத்தனஞ் செய்தனர். ரயில்வே இலாக்கா, இன்னும் பல இடங்களிலெல்லாம் எங்கெங்கு சந்தர்ப்பமிருப்பதாக அறிந்தார்களோ அங்கெல்லாம் விண்ணப்பங்கள் செய்தனர். அநேகம் சிபாரிஷ்களையும் தேடினர். ஆனால், பயன் ஒன்றும் கிடைக்கவில்லை. இறுதியாக மூன்று வருஷ காலம் வேலையில்லாமல் இருந்து திணறிப் போனார்கள். இவர்களிலொருவரான அஷ்ரப் ஹுஸைன் என்பவரது மாமு ஹைதராபாத்தில் ஜட்ஜு வேலை பார்க்கிறார். ஆகவே, அவரும் அவருடைய இரண்டு நண்பர்களும் உத்தியோக ஆசையில் இஸ்லாமிய அரசாங்கம் என்று நினைத்து ஹைதராபாத்துக்குச் சென்றுகொண்டிருந்தனர். ஜட்ஜு அவர்கள் தயைபுரிந்து எங்கேனும் உத்தியோகங்களைப்

பார்த்துக் கொடுத்துவிடுவார் என்பது அவர்களது எண்ணம்.

அவர்களது இவ்வபிப்பிராயங்களைக் கேட்டு எனக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. இந்தியாவிலுள்ள ஸ்கூல்கள், காலேஜ்களது அறைகுறையான படிப்புகளைப்பற்றி விசனமுமுண்டாயிற்று. நான் இந்தியாவிற்கு வெளியில் அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள வாலிபர்களையும், அவர்களது படிப்பையும் பார்த்திருக்கிறேன். துர்அதிர்ஷ்டமுள்ள நமது தேசத்தின் கல்விப் போதனைக்கும் சுயேச்சையுள்ள அந்த தேசங்களின் கல்விப் போதனைக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை.

அங்குள்ள காலேஜ்களில் படித்த வாலிபர்கள் பரீக்ஷை பாஸ் செய்த பிறகு தங்களது ஸ்தூல பலத்தையோ அறிவின் சக்தியையோ இழந்துவிடாமல் ஒரு நல்ல போர் வீரனாக, வியாபாரியாக, சிறந்த கைத்தொழிலாளியாக, விவேகமுள்ள விவசாயியாக வெளிப்படுகின்றனர். அவர்கள் காலேஜை விட்டபின்னர் உத்தியோகத்திற்காக வீடு வீடாக அலையவேண்டிய அவசியமேற்படுவதில்லை. அவர்கள் எதிரில் விசாலமான மைதானிருக்கிறது. எப்பக்கம் அவர்கள் விரும்பினாலும் வேகமாக அவர்கள் செல்லமுடியும். அவர்களுக்கு எப்பக்கத்திலும் வெற்றி கிடைப்பது நிச்சயமாக இருக்கிறது. அவர்கள் தாங்களாகவே தங்கள் சுய சக்தியினால் நிற்கத் தகுந்தவர்களாயிருக்கிறார்கள். உத்தியோகத்திற்காக அவர்கள் ஒருவருடைய சிபாரிஷை எதிர்பார்த்திருப்பதில்லை. வீணாகக் காத்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமும் அவர்களுக்கிருப்பதில்லை.

நமது தேசத்திலுள்ள ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் நீண்ட வீணான போதனை முறைத் திட்டத்தை ஏற்படுத்தி இருப்பதால் யாது பிரயோஜனம் என்பது விளங்கவில்லை. ஸ்கூல்களில் கைத்தொழில்களைக் கட்டாயப் பாடமாக்கி வைக்காமலிருப்பது ஏன்? ஒரு சிறு வகுப்பில் படிக்கும் மாணவனைப் பார்த்தாலும் காலையில் புத்தகங்களின் சுமை ஒன்றை தோளில் தாங்கிக்கொண்டு ஸ்கூலுக்குச் சென்றுகொண்டிருப்பதைக் காணலாம். வீணான புத்தகங்களைக் கொடுத்து அவர்களைச் சிரமப்படுத்தப்படுகிறது. ஸ்கூலைவிட்டு வீட்டிற்கு வந்தாலும் அவர்களுக்குச் சுகமிருப்பதில்லை. இரவில் வெகுநேரம்வரை விளக்கை வைத்து அவைகளைப் படித்துக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு உழைத்து, மூளையைக் கரைத்ததன் பிறகு ஏற்படும் பயனென்னவெனில் நூற்றில் இருபது பேர்கள் வரை மூளைச்சக்தியை இழந்து காலேஜிலேயே மூக்குக்கண்ணாடி போடவேண்டிய அவசியத்திற்கு வந்துவிடுகிறார்கள். பொதுவாக ஸ்தூல பலத்திற்கும்கூட இதேகதிதான் ஏற்படுகிறது.

இனி, அவர்கள் காலேஜில் படித்துத் தேர்ந்து வெளியேறினாலும் கிளார்க்குகளாகித்தான் வெளியேறுகின்றனர். ஜீவனத்திற்கு வேண்டிய உபாயங்கள் அவர்கள் கண் முன்னிருப்பது மிகவும் சிலவேயாகும். அவைகளும் இருள் சூழ்ந்தனவாகவே இருக்கும். சர்க்கார் உத்தியோகத்தைத் தேடும் வேலை ஆரம்பமாகிறது. ஆனால், அங்கு அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஸ்தானம் காலியாக இருக்கவா போகிறது? இறுதியாக வீணான முயற்சி செய்ததன் பயனாகக் களைப்புற்று சோர்வடைந்து பேசாமல் அமர்ந்து விடுகின்றனர்.

கைத்தொழில், வியாபாரம், விவசாயம் ஆகியவைகளின்பால் அவர்களுக்கு நினைப்பே உண்டாகுவதில்லை. இவைகளைப்பற்றி அவர்களுக்குக் கற்பிக்கப்படவுமில்லை. இப்பொழுது அவர்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது? கிளார்க்கு பதவி கிடைப்பதில்லை. வேறு எந்த வேலையும் தெரியாது. ஆகவே, எனது மூளையில் இந்த அபிப்பிராயம் தோன்றியவுடன் என்னுடன் வழிப்பிராயாணம் செய்கிற அம்மூன்று வாலிபர்கள்மீது இரக்கமுண்டாயிற்று. உண்மையில் இவ்விதமான வாலிபர்களது நிலைமை எங்கும் பரிதபிக்கத்தக்கதாகவே இருக்கிறது. ஆகவே, நான் அவர்களிடம் பின்வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினேன்.

நான்:—நீங்கள் ஹைதராபாதுக்குச் செல்லும் நோக்கமென்ன?

அஷ்ரப்:—சென்றமாதம் மாமு அவர்கள் எங்களைப் பார்ப்பதற்காக கான்பூருக்கு வந்திருந்தார். அவர் ஹைதராபாதில் ஜட்ஜ் வேலை பார்க்கிறார். அங்கு உத்தியோகம் கிடைக்கக்கூடுமென்று அவர் கூறினார். ஆதலின், நாங்கள் அங்கு செல்கின்றோம்.

நான்:—நீங்கள் அங்கு என்ன உத்தியோகம் பார்க்க விரும்புகிறீர்கள்?

அஷ்ரப்:—கச்சேரியில் ஏதேனும் கிளார்க்கு பதவி அல்லது வேறு இலாக்காவில் ஏதேனும் ஒரு ஏற்பாடு நடைபெறவேண்டும்.

நான் :—அவ்வாறாயின், உங்களுக்கு அதிகமாகச் சம்பளம் கிடைத்தால் நாற்பது ஐம்பது ரூபாய் கிடைக்கக்கூடிய பதவிதான் கிடைக்கும். அதுவும் தற்செயலாகக் காலியாக இருந்தாற்றான். தாங்கள் பி. ஏ. பாஸ் செய்திருக்கிறீர்கள். இந்தச் சம்பளம் தங்களுக்குப் போதாது.

அஷ்ரப் :—தற்சமயம் இருபது ரூபாய் சம்பளம் கிடைக்கக்கூடிய இடம் கிடைத்தாலும் கூட ரொம்ப சிலாக்கியம். வேலையில்லாமலிருந்து களைத்துப் போனேம். எனது நண்பர்களும் இதே கருத்துடன்தான் அங்கு வருகின்றனர்.

நான் :—தங்களது தந்தை ஜீவித்திருக்கிறாரா? அவரது தொழில் என்ன?

அஷ்ரப் :—ஆம். எனது தந்தை ஜீவித்துக்கொண்டிருக்கிறார். சொற்ப பயிர் நிலம் இருக்கிறது. அதனைத்தான் பார்த்துக்கொள்கிறார். வேறு வேலை அவருக்கு இல்லை.

நான் :—தங்களது விவசாய பூமி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது? அதில் நீர்ப்பாய்ச்சுவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

அஷ்ரப் :—ரயில்வே ஸ்டேஷனிலிருந்து எங்கள் கிராமம் மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. போக்குவரத்துக்கு நேர்த்தியான ரஸ்தா இருக்கிறது. அங்குள்ள நிலங்களிற் பெரும்பாலானவைகளுக்குக் கிணறுகளிருக்கின்றன. அவைகளின் மூலமாகத்தான் நீர் பாய்ச்சப்படுகிறது. கிராமத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய குளம் இருக்கிறது.

நான் :—சொற்ப மூலதனம் வைத்துச் சொற்பப் பிரயாசை எடுத்துக்கொண்டால் உங்களது வீட்டிலேயே, உங்களது கிராமத்திலேயே இருந்துகொண்டு மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்கவும், பத்து இருபது பேருக்கு வேலை கொடுக்கவும் உங்களால் முடியும். அப்படி இருக்க, முப்பது நாற்பது ரூபாய் சம்பாத்தியத்தைத் தேடி ஹைதராபாத் போன்ற தூர தேசத்திற்குப் பிரயாணம் செல்கிறீர்கள்.

இதனைக் கேட்டவுடன் அம் மூவரும் திகைத்து, எனது முகத்தையே பார்க்கவாரம்பித்துவிட்டார்கள். நான் அவர்களை நோக்கி, திகைப்படைவதற்குக் காரணம் ஒன்றுமில்லை. முஸ்லிம் வாலிபர்கள் தங்களது மூளையைக் கொஞ்சம் திருத்திக்கொள்வது அவசியமாகும். அவர்கள் பெரும் பெரும் ஆலோசனைகளைத் தங்கள் மூளைகளில் கொண்டு வந்து எவ்வளவு சிறிய தொழிலாயினும் அதனைக் கேவலமாக மதிக்கக்கூடாது. முஸ்லிம்கள் உத்தியோகம் பார்ப்பதைக் கேவலமாக மதிக்கிறதில்லை. அந்த உத்தியோகம் எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் சரியே அதனையே பெருமையாக மதிக்கின்றனர். இது முஸ்லிம்களிலுள்ள பெருங் குறையாகும். சுயேச்சையான அநேகம் தொழில்கள் அவர்களுக்கு அற்பமாகவே தோன்றுகின்றன. அமெரிக்கர் ஐரோப்பியர் செய்வதுபோல் எவ்வளவு அற்பமான தொழிலாக இருந்தாலும் அதனை முறையுடனும் சீருடனும் செய்தால் அதுவே கௌரவமான தொழிலாகிவிடும்.

தற்போது நான் தங்களுக்கு மதிக்கத்தக்க ஒரு ஆலோசனை கூறுகிறேன். தாங்கள் இஷ்டப்பட்டால் அதில் பெரும் ஊதியம் அடைய முடியும்.

கேளுங்கள், நன்றாய்க் கேளுங்கள். தாங்கள் ஹைதராபாத்துக்குச் சென்ற பிறகு நேராக உங்கள் சொந்த ஊருக்குச் செல்லவேண்டும். மூலதனத்திற்காக முன்னூறு நானூறு ரூபாய் உங்கள் மாமுவிடத்திலாவது தந்தையிடத்திலாவது கேட்டு வாங்கிக்கொள்ளவேண்டும். உங்கள் ஊரில் குளத்திற்குப் பக்கத்தில் மரநிழலும் கிணறுமுள்ள ஒரு இடத்தில் ஒரு கோழிக்கூடு வர்த்தக முறைப்படி கட்டவேண்டும். அதனை அமைக்கும் விதம் உங்களுக்குத் தெரியாது. ஆதலின், அதனை ஆரம்பிப்பதற்கு முதலில் மூன்று மாத காலம்வரை லக்ஷ்மணபுரியிலுள்ள கோழிக் கூட்டிற்குச் சென்று கோழிகளை வளர்க்கும் முறையைக் கிரியாம்சையில் கற்றுக்கொள்ளவேண்டும். அப்புறம் வேலையை ஆரம்பிக்கவேண்டும். ஆனால், இந்த ஸூட்டுகளையும், பூட்டுகளையும், கோட்டுகளையும், ஹேட்டுகளையும் கொஞ்ச காலத்திற்குப் பெட்டிக்குள் மடித்து வைத்துவிடவேண்டும். கூலிக்காரனுடைய உடையை அணிந்துகொண்டு நேரடியாக உழைக்கவேண்டும். மற்றவர்களிடமும் வேலை வாங்கவேண்டும். இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரமும் கோழிக்கூட்டிலேயே இருக்கவேண்டும். சிறந்த மேனாட்டு கோழிகளை அதிகமாக இருப்பில் வைக்கவேண்டும். சீமைக்கோழிகளில் சில ஜோடிகளை விலைக்கு வாங்கி நல்ல முட்டைகளிலிருந்து குஞ்சுகளை இரக்கவேண்டும். இவ்விதமாக இவ்வேலை பெருகிவிட்டால் மெஷின்

கள் மூலமாகக் குஞ்சு இரக்கவும், அவைகளை வளர்க்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். எனவே முறைப்படி நீங்கள் நன்றாய் உழைத்தால் ஒரு வருஷத்தில் உங்களிடம் ஆயிரக்கணக்கான மூலதனம் ஸ்டாக்கில் இருக்கும்; மாதந்தோறும் நூற்றுக்கணக்கான ரூபாய்கள் வரும்படியாக இருக்கும்.

வியாபார நோக்கத்தை கவனிப்பின் இன்னும் அநேகம் பிரயோஜனகரமான வசதிகள் உங்களுக்கு இருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷன் தங்களுருக்குப் பக்கத்திலிருக்கிறது. முதலை செலவு செய்வதற்கு லக்ஷ்மணபுரி, கான்பூர் ஆகிய இரண்டு பெரிய மார்க்கட்டுகள் உங்களுக்குப் பக்கத்திலிருக்கின்றன. அங்கு மிகச் சுலபமாக செலாவணி செய்யமுடியும். கோழிக்கூட்டிற்குப் பக்கத்திலிருக்கிற குளத்தின் கரையில் கொட்டகை அமைத்து நேர்த்தியான சிறியதும் பெரியதுமான வாத்துக்களை வளர்க்கலாம். உங்களுக்குச் சொந்தமாகவுள்ள பூமியில் கொஞ்ச பாகத்தில் அவைகளுக்குத் தீவனம் கொடுப்பதற்குத் தகுந்த விவசாயம் செய்யலாம். கனி விருக்ஷங்களையும் வைக்கலாம். நேரம் அதிகமாக இல்லை. இல்லையேல் உங்களுக்குச் சகல விபரத்தையும் விரிவாகக் கூறுவேன். கோழிகள் இருக்கும்வீடு, அவைகளின் உணவு, அவைகளை வளர்க்கும்முறை, மெஷின்கள் மூலமாகக் குஞ்சு இரக்குதல், அவைகளை வளர்த்தல் ஆகியவைகளை விஸ்தாரமாகக் கூறுவேன்.

நீங்கள் இந்த ஏற்பாட்டைச் செய்தால் சில வருஷங்களில் ஆயிரக்கணக்கில் வரும்படி வரும். டஜன் கணக்காணவர்கள் உங்களிடம் வேலைக்கிருப்பார்கள். சரியான ஆபிசும் உண்டாகிவிடும். கிளர்க்குகளிருப்பர். டெலிபோனும் ஏற்பட்டுவிடும்.

அமெரிக்கா முதலிய நாடுகளில் இவ்வேலையை ஜனங்கள் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். அங்கு வியாபார முறையில் பெரும் பெரும் பௌல்ட்ரி பாரங்கள் இருக்கின்றன. அவர்கள் கோழி, முட்டை முதலியவைகளை அந்நியநாடுகளுக்கும் அனுப்புகின்றனர். ஆனால், இந்தியர் இவ்வேலையையும், வியாபாரத்தையும் அசட்டை செய்கின்றனர். இதில் எவரும் சிரத்தை எடுத்துக்கொள்ளாமலிருப்பதுடன் இதனைக் கேவலமாகவும் மதிக்கின்றனர். ஆனால், இதரதேசங்களைப் பார்க்கினும் நமது தேசத்தில் இந்த வியாபாரத்திற்கு வேண்டிய வசதிகளிருக்கின்றன."

என்னுடைய இந்தப்பிரசங்கங்கள் அவ்வாலிபர்களைக்கவர்ந்தது. நாங்கள் ஹைதராபாத் சென்றோம். அஷ்ரப் தனது மாமுவிடம், என்னைச் சந்தித்ததையும் எனது அபிப்பிராயத்தையும் கூறினார். அவர் எனது அலோசனையை வெகுவாகப்புகழ்ந்து ஆதரித்தார். என்னையும் அவர் சந்தித்தார். இறுதியாக அஷ்ரப் இந்தத் தொழிலைச் செய்யவேண்டும் என்று முடிவு செய்தார். ஆகவே, மாமு அவருக்குச் சொற்ப ரூபாய் கொடுத்து ஊருக்குத்திரும்ப அனுப்பிவிட்டார். அங்கிருந்து அஷ்ரப் லக்ஷ்மணபுரிக்குச் சென்றார். அங்குள்ள பௌல்ட்ரி பாரத்தில் பயிற்சி பெற்று, தமது கிராமத்திற்கு வந்து உறுதியுடனும் உற்சாகத்துடனும் வேலையை ஆரம்பித்தார். இவர் படிப்பாளியாகவும், கஷ்டப்பட்டு உழைப்பவராகவும் இருந்ததால் ஒருவருஷத்திற்குப் பிறகு ஒரு நீண்ட நன்றியறிதல் கடிதம் அவரிடமிருந்து எனக்கு வந்தது. அதில் "பௌல்ட்ரி பாரம் இறைவன் கிருபையால் அபிவிருத்தியடைந்து வருகிறது; தற்போது சகல செலவும் நீங்கலாக மாதந்தோறும் நூறு ரூபாய்க்கு அதிகமாக மிச்சமிருக்கிறது; இப்போதிருப்பது போலவே அபிவிருத்தியடைந்து வருமாயின் இன்ஷா அல்லாஹ் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் எஞ்சும் நாள் தூரத்திலில்லை" என்று எழுதப்பட்டிருந்தது.

பெரிய நகரங்கள் அல்லது ரயில்வேஸ்டேஷன்களுக்குப் பக்கத்தில் பூஸ்திதியுள்ள முஸ்லிம்கள் இவ்விதமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வேலையில்லாமையை அகற்றுவதுடன் மற்றவர்களுக்கும் உதவிபுரியவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறேன்.

எனவே, நண்பர்கள் படித்துவிட்டு உத்தியோகத்தைத்தேடி வருஷக் கணக்கில் காலங் கழித்துக் கொண்டிருப்பது வீணே யாகும். ஆகவே இவ்வாறான தொழில் முறையிலிறங்கி பிரயாசை செய்ய முற்பட்டால் அதிக லாபமடையலாம். ஆனால், தற்போதுள்ள நமது கல்விச்சாலைகளில் தொழிற்முறை, விவசாயம் செய்தல் முதலிய பயன்தரத்தக்க கல்வியை புகட்டாதிருப்பதே இவ்வாறான குறைகள் ஏற்படுவதற்குக் காரணங்களாக இருக்கின்றன. ஆகவே, முதலாவதாக கல்வி முறைகளைத் திருத்துவதற்கு முயற்சித்து அதன்பின் கைத்தொழில், விவசாயம் முதலியவைகள் முன்னேற்றமடைய முயற்சிப்போமாக.

அம்புமாரியில் இறை வணக்கம்

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் காபிர்களுக்குமிடையில் நிகழ்ந்த "கஸ்வயே தாதுர்ரிக்காஃ" சண்டையைப்பற்றி அல்லாமா இப்னுல் அதீர் (றஹ்.) அவர்கள் எழுதுகையில், அங்கு நடந்த ஒரு ஆச்சரியகரமான சமாச்சாரத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அதன் விபரம் வருமாறு:—

பனுநுளேர் என்ற யூதகோத்திரத்தை தேசப்பிரஷ்டம் செய்த இரண்டு மாதங்களுக்குப்பிறகு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நஜத் தேசத்தின் மீது படையெடுத்துச் சென்று "நக்லா" என்ற இடத்தில் தங்கினார்கள். இங்கு 'பனூ முஹாரிப்' கோத்திரத்தைச்சேர்ந்த ஒருவர் நாயகம் (ஸல்.) அவர்களது சமூகத்தில் வந்து நாயகம் (ஸல்.) அவர்களது வாளாயுதத்தைப் பார்ப்பதாகக்கூறினார். நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது வாளாயுதத்தைக் கொடுத்தார்கள். அதனை அவர் கையில் வாங்கியவுடன் அதனை ஓங்கிக்கொண்டு "முஹம்மதே! எனக்கு நீர் பயப்படமாட்டீரோ?" என்றார். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "இல்லை" என்று கூறினார்கள். அவர் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கும் நாயகம் (ஸல்.) அவர்கள் மிகச் சாவதானமாக 'அல்லாஹு தஆலா என்னை உன்னை விட்டுக் காப்பான்' என்று கூறினார்கள். இச்சம்பவம் அந்த 'பதவி'யின் இருதயத்தில் அதிக மாறுதலையுண்டாக்கிவிட்டது. அவர் ஓங்கி இருந்த வாளைக் கீழே வைத்து நாயகம் (ஸல்.) அவர்களிடம் திரும்ப ஒப்புவித்தார்.

இச்சமயத்தில் முஸ்லிம்கள் பனூமஹாரிப் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயைக் கைதி செய்தனர். அவளுடைய கணவன் அதுபோழ்து வீட்டிலிருக்கவில்லை. அவன் வீட்டிற்கு வந்தபிறகு தனது இல்லாள் கைது செய்யப்பட்ட விபரம் தெரிந்தது. உடனே அவன் "தனது மனைவியின் நிமித்தமாக முஸ்லிம்களில் ஒருவரையேனும் நான் கொல்லாமலிரேன்" என்று பிரதிக்ஞை செய்துகொண்டான். இப்பிரதிக்ஞைக்குப் பிறகு அவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை வேலை தீர்த்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். முஸ்லிம் சேனைகள் ஓரிடத்தில் வந்து பாளையமிறங்கியபோது நாயகம் (ஸல்.) அவர்கள் "இன்று நமக்குக் காவல் புரிபவர்கள் யாவர்?" என்பதாகக் கூறினார்கள். முஹாஜிர்கள், அன்ஸார்கள் ஆகியவர்களில் வகைக்கு ஒரு வாலிபர் காவல்காக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் அவ்விருவருக்கும் அன்றிரவில் காவல் புரிய உத்திரவு கொடுத்தார்கள். இவ்விரு வாலிபர்களும் அவ்விரவை இருபகுதியாகப் பிரித்து ஒரு பகுதியில் ஒருவர் விழித்திருக்கவேண்டும், மற்றொருவர் தூங்கவேண்டும் என்று முடிவு செய்துகொண்டனர். இதன்படி முஹாஜிர்களைச் சேர்ந்த வாலிபர் நித்திரை செய்தார். அன்ஸார்களைச் சேர்ந்த வாலிபர் காவல் புரிந்தார். என்றாலும், வீணாக விழித்துக்கொண்டு நேரத்தைப்போக்குவதைப் பார்க்கினும் தொழுவது நல்லதென்பதாகக் கருதி அன்ஸார்களின் வாலிபர் தொழுகையை ஆரம்பித்துவிட்டார். இதற்குள்ளாக அந்த ஸ்திரீயின் கணவனும் வந்தான். தொழுதுகொண்டிருந்த காவற்கார அன்ஸாரி வாலிபரை அம்பால் எய்தான். அவ்வம்பு அவ்வாலிபர் மீது தைத்தது. உடனே அவ்வாலிபர் அவ்வம்பைப் பிடுங்கி எறிந்துவிட்டு தொழுகையிலேயே இருந்தார். இரண்டாவதுமுறையும் அம்பெய்தான். அதுவும் அவர் மீது தைத்தது. அதனையும் பிடுங்கி எறிந்துவிட்டுத்தொழுகையை விடாமல் தொழுதுகொண்டிருந்தார். மூன்றாவது முறையும் அம்பெய்தான் அது முன்னால் தைத்த காயத்தின்மீது தைத்தது. அதனையும் பிடுங்கி எறிந்துவிட்டார். பிறகு ருக்கூஉக்குப் போகும் சமயம் வந்தது. அதுபொழ்து தூங்கிக்கொண்டிருந்த முஹாஜிர் வாலிபரைத் தட்டி எழுப்பிவிட்டுத் தொழுகையைத் தொடர்ந்து முடித்தார். ஒருவருக்கு

இருவர் விழித்திருப்பதைப் பார்த்த அந்த ஸ்திரீயின் கணவன் அவ்விடம் விட்டகன்றனன்.

தம்முடைய அன்ஸாரி வாலிபர் அம்பால் எய்யப்பட்டுக் காயமடைந்திருந்ததைப் முஹாஜிர் வாலிபர் பார்த்து "நீங்கள் ஏன் என்னை முன்னதாக எழுப்பக்கூடாது? முதலாவது முறையிலேயே என்னை எழுப்பிவிட்டிருந்தால் இத்தனை காயங்களேற்படாதல்லவா? என்று கூறினர். அதற்கவ்வன்ஸாரி வாலிபர் "நான் தொழுகையில் ஒரு ஸூரத்தை ஓதிக்கொண்டிருந்தேன். அதனை முடிக்காமல் அதனை விட்டுவிடுவது முடியாத காரியமாக இருந்தது. ஆனல், என்மீது தொடர்ச்சியாக அம்பு விழுந்ததால் நான் தங்களை எழுப்ப நேர்ந்தது. ஏனெனில், காவல் காக்கும் பொறுப்பை என்னிடம் நாயகம் (ஸல்.) அவர்கள் ஒப்புவித்திருப்பதால் நான் மறுத்துவிட்டால் அந்தப் பொறுப்புத் தவறிப்போகுமே என்று நினைத்துத்தான் தங்களை எழுப்பினேன்; நான் இறந்து போவேன் என்றபயம் எனக்கு எள்ளளவுமில்லை என்று கூறினர். இச்சம்பவம் ஹிஜ்ரீ 5-வது வருஷத்தில் நிகழ்ந்தது.

சோதரீர்! முற்காலத்திலுள்ள அன்ஸார்கள் முஹாஜிர்களது எண்ணம் எவ்வாறிருந்தது என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ளலாம். தங்கள்மீதுள்ள பொறுப்பை அவர்கள் எவ்வளவு திறமையாக நிறைவேற்றினர். தொழுகையில் எவ்வளவு பூணிப்பும் பிரீதியும் அவர்களுக்கிருந்தது. அல்லாஹுதஆலாவின் மீது அவர்களுக்கிருந்த உறுதி எவ்விதம்? மரணத்திற்கு அவர்கள் அஞ்சினர்களா? என்ற விபரம் இதிலிருந்து நன்கு வெளியாகும். முற்காலத்திலிருந்தவர்கள் வெற்றிக்குமேல் வெற்றியடைந்ததற்கும், இக்காலத்தில் கோடிக்கணக்காக முஸ்லிம்களிருந்தும் அவர்கள் தோல்வியடைந்து கொண்டிருப்பதற்கும் காரணம் நம்மில் தெய்வ பக்தியும், கடமையை ஆற்றும் தன்மையும் மிகக்குறைவாக இருப்பதுதான் என்பது விளங்கும். இறைவன் யாவருக்கும் தெய்வ பக்தியையும் கடமையையாற்றும் தன்மையையும் அளிப்பானக. ஆமீன்.

முஸ்லிம்களின் வாழ்க்கை

இந்தியாவில் வதியும் முஸ்லிம்கள் இதர சமூகத்தினரைவிட பொருளாதார விஷயத்தில் மிக மிக பிற்போக்கான ஸ்தியிலேயே இருந்துவருகின்றனர். இதற்கு, முஸ்லிம்கள் சம்பாத்தியஞ் செய்வதில் இதரர்களைவிட பின்னணியிலிருக்கின்றூர்களென்பதைக் காரணமாகக் கூறமுடியாதென்பது திண்ணம். முஸ்லிம்கள் சம்பாத்தியஞ்செய்வதில் இதர சமூகத்தினரைவிட எவ்வகையிலும் பிற்போக் கடைந்தவர்களாயில்லை. முஸ்லிம்கள் நல்லவிதமாய் ரூபாய் சம்பாதிக்க கற்றிருக்கிறூர்கள். ஆனல் அதை பத்திரப்படுத்தி வைக்கும் வகை தெரியாதவர்களாயிருக்கிறூர்கள். முஸ்லிம்கள் இதரர்களைப்போல் அடக்கத்துடன் செலவுசெய்து ரூபாய்களை மீதப்படுத்திவைப்பதி லீடுபடுவார்களாயின் அன்னேர் இந்தியாவிலுள்ள ஐசுவரியவான்களில் கணக்கிடப்படுவார்களென்பது திண்ணம். துர்அதிர்ஷ்டவசமாய் அன்னேர் வரவு செலவுகளை சீர்தூக்கிப்பார்ப்பதில்லை; தங்களுக்கேற்படும் ஓர் அற்பவிருப்பத்திற்காகவும் மனம் நாடியபோது தட்டுத் தடங்கலின்றி அநேக ரூபாய்களைச் செலவு செய்து விடுகின்றனர். சற்று நிதானத்தைச் செலுத்திப் பார்ப்பார்களாயின் அக்காரியத்தில் ஈடுபடாமலேயிருப்பதற்குள்ள சந்தர்ப்பம் அன்னேருக்கேற்பட்டுவிடும். அன்னேரின் மனதில் ஐசுவரியங்களின் மதிப்பில்லாது போயிருப்பதால் ஐசுவரியங்களும் இன்னேரை மதிக்காது இவர்களை விட்டு இதரர்களிடம் சென்று விடுகிறது. முஸ்லிம்கள் மிதமிஞ்சிய இன்ப சுக வாழ்க்கையிலீடுபடுவதற்கும் அவர்களது ஐசுவரியங்களே காரணமாக இருக்கின்றது. இதைவிட முக தாக்ஷணியம், பெயருக்காக ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவதான் முஸ்லிம்களை நாசத்தின்

பக்கல் இழுத்துச் செல்வதாக இருக்கிறது. காலம் மாறுபாடடைந்திருப்பதால் இச்சூழ வில் காசுபணமில்லாது ஒரு மூச்சுவிடுவது கூட முடியாத காரியமாக இருக்கிறது.

இக்கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக முஸ்லிம்கள் தங்கள் நடை முறையை மாற்றிக் கொள்வது அத்தியாவசியமாயிருக்கிறது. இது பொழுதாகிலும் முஸ்லிம்கள் சிக்கனத்தைக் கைகொள்ளாதுபோனால் அவர்களது கையில் ஒன்றுமில்லாதுபோய்விட்டபின் தானே அவர்கள் நிர்ப்பந்தத்தால் சிக்கனம் அனுஷ்டிக்கும் படியான சந்தர்ப்பமேற்பட்டுவிடும். இதற்காக புத்திசாலியாயுள்ளோர் இந்தியாவில் வதியும் அயல்பாகக்காரர்களாகிய இதர சமூகத்தாரிடமிருந்து பாடங்கற்றுக்கொண்டு எவ்வகையிலும் ஐசுவரியத்தை மீதப்படுத்தி வைப்பதிலீடுபடவேண்டியது அவசியத்திலும் அவசியமானதாகும். ஆனால் முஸ்லிம்களுக்கு இச் செயல் மிகமிக கஷ்ட சங்கடமானதாகவே தோன்றும். ஏனெனில், ஓர் முஸ்லிம் 500 ரூபாய் சம்பாத்தியஞ் செய்துவிடுவானுகில் உடனே இரண்டாயிரம் ரூபாய் செலவிடுவதற்கான யோசனை அவனைப்பிடுத்தாட்ட முற்பட்டு விடுகிறது. இதற்கனுசரணையாக இவனது நண்பர்களும் உற்றார் உறவினரும் ஆலோசனை கூற முன்வந்து விடுகின்றனர். அவர்கள் ஆழ்ந்து கூறும் ஆலோசனை இவனை ஆழ்ந்த பாதாளத்தில் தள்ளுவதற்கான கருவியாக அமைந்து விடுகின்றது. ஆகவே, முஸ்லிம் நேயர்கள் உலக முன்னேற்றையும் சந்தோஷ வாழ்க்கையையும் முதன்மையாகக் கருதி சிக்கனத்தைக் கடைபிடித்து தங்கள் ஐசுவரியங்களை சிக்கன முறையில் செலவு செய்ய முற்பட்டு பணம் காசுகளை மீதப்படுத்திவைப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்து தக்கமுறையில் காலங்கழித்து வருவார்களாக.

ஜப்பானின் பலம்

இதுகாலை ஜப்பான் தேயம் உலகிலுள்ள ஐந்து வல்லரசுகளில் பிரதானமாய் விளங்குகிறதென்பதும், கீழ்தேயத்தின் எந்த சக்தியும் அதனை எதிர்த்து நிற்பதற்கு முடியாத ஸ்திதியிலிருக்கிறதென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஜப்பானுக்கு இந்த நிலைமை எவ்வாறு எற்பட்டதென்பதில் நீங்கள் ஆச்சரியமடையக்கூடும்.

ஜப்பான் வல்லமை பொருந்தியதாக சிறந்து விளங்குவதற்கு அத்தேசத்திலேற்பட்டுள்ள கைத்தொழில் முக்கிய காரணமாக இருக்கிறது. அங்கு வதிபவர்களில் 6 கோடிமக்கள் கைத்தொழிலைக்கொண்டே ஆனந்த உல்லாசமாய் காலங்கழிக்கின்றனர். ஜப்பான் தனது கைத்தொழிலைக்கொண்டே எவ்வாறு முன்னேற்றமடைந்ததென்னும் விஷயத்தில் நீங்கள் ஆச்சரியமடையக்கூடும். ஆரம்பத்தில் அவர்களிலுள்ள ஒரு தைரியசாலி மனோ உறுதியோடு முன்னேற்றத்தின்பக்கல் முன்னேக்கிப் பிறகு தனது இனத்தார்களை அப்பக்கல் முன்னேக்கும்படி செய்தான். முடிவில் அவன் ஜப்பானியர் யாவருடைய கைகளையும் பிடித்து முன்னேற்றத்தினது சிம்மாஸனத்தில் உயர்த்தி விட்டான்.

அவன் பெயர் 'மட்ஸுஸ்' என்பதாகும். இவன் 1673-ம் ஆண்டில் டோக்கியோ நகரில் துண்டு துணி வியாபாரஞ் செய்ப ஆரம்பித்தான். அவன் விபாபாரம் ஆரம்பித்த அன்றையதினமே ஒரே விலை சொல்வதையும், ரொக்கத்திற்கு விற்பனை செய்வதையுமே தனது வியாபாரத்தின் பிரதான நோக்கமாகக் கொண்டு உறுதியையும் ஊக்கத்தையும் அதில் காட்ட முற்பட்டான். இந்த வியாபாரம் இரண்டு வருடங்கள்வரை அழகிய முறையில் நடைபெற்றுக்கொண்டு வந்தது. பிறகு அவன் விளம்பரம் செய்வதில் தக்க முறையில் தேர்ச்சி பெற்று தன் வியாபாரக்குறி பொறிக்கப்பட்டுள்ள குடைகளை மக்களுக்கு இனமாய் வினியோகிக்க முற்பட்டான். அதன்பின் பலவாறுன ஸாமான்களில் தனது வியாபாரக்குறியின் அடையாளங்களை வைத்து அவைகளை இனமாய் மக்களிடையே விநியோகிக்க ஆரம்பித்

தான். இந்தக் கம்பெனி 1860-ம் வருடத்தில் இதர தேசங்களுடன் வியாபார சம்பந்தம் வைத்துக்கொண்டது. பிறகு ஒரு பிரதான பாங்கு ஏற்படுத்திக் கொண்டது. ஓர் பஞ்சாலையையும், காகிதத் தொழிற்சாலையையும் அமைத்து பெரிய பட்டு உற்பத்திசாலையையும் நிர்ணயித்தது. பிறகு கவர்ன்மெண்டாரிட மிருந்து கரிச்சுரங்கமொன்றை விலைக்கு வாங்கியது. இதுபொழுது ஜப்பானிலுள்ள அறைவாசி கரிச்சுரங்கங்கள் அந்த கம்பெனியைச் சேர்ந்ததாக இருக்கிறது. அந்தக் கம்பெனி, சுரங்கங்களிலிருந்து கரிகளை எடுப்பதற்கு பலவாறான நூதன இயந்திர மிஷன்களை ஏற்படுத்தியது. பல கோடிக்கணக்கான ரூபாய்களை வியாபார ஆராய்ச்சி விஷயத்தில் செலவிட்டிருக்கிறது. மட்ஸூஸ் தொழிற்சாலையில் வேலை செய்யும் கூலியாட்களுக்காக பெரும் பெரும் விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கு அத்தொழிலாளர்களது குழந்தைகள், பெண்டிர்கள் யாவரும் தேகாப்பியாசத்திலீடுபடுகின்றனர். அங்கு அமைக்கப்பட்டுள்ள ஹால்களில் பிரசங்கம் புரியப்படுகின்றது; பிலிம் காண்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு கூலிக்கும் தனி விடுதி கொடுக்கப்பட்டிருப்பதுடன் இலவச வைத்திய சிகிச்சையும், இலவச மருந்தும் கொடுக்கப்படுகிறது. ஜப்பான் முழுதிலும் இக்கம்பெனி பிரலாபித்துக் கொண்டிருக்கிறது. லண்டன், நியூயார்க், பாரிஸ், ஜாவா, சுமட்ரா வரை இக்கம்பெனியின் கிளைஸ்தாபனம் இருந்துகொண்டிருக்கிறது. இதுபொழுது தென் அமெரிக்கா, ஆப்பிரிக்காவிலும் இக்கம்பெனி வியாபாரத்தை ஆரம்பித்திருக்கிறது. இக்கம்பெனி சென்ற ஆண்டு வெளியிட்டுள்ள ரிபோர்ட்டிலிருந்து இக்கம்பெனியின் ஒரு வருடத்திய லாபம் ஜப்பான் கவர்ன்மெண்டின் வரும்படியைவிட அதிகமாக இருக்கிறதெனத் தெரிகிறது. பாருங்கள்! வேலை செய்பவர்கள் இவ்வாறு வேலை செய்கிறார்கள்.

இதுபொழுது ஜப்பான் முன்னேற்றத்தின் பக்கல் சென்றுகொண்டு வருவதின் இரகசியத்தைத் தெரிந்துகொண்டோம். ஆகவே, நாமும் ஆரம்பத்தில் சிறிய தொழிலாக எவ்வாறு செய்வதென்னும் பீதிகொள்ளாது தொழிலிலீடுபட்டு ஊக்கம், உற்சாகம் இவைகளைக்கொண்டு படிபடியாய் முன்னேறி வருவோமாக.

சுகாதாரம்—ஜலதோஷம்

இது மானிடருக்கு உண்டாகக்கூடிய சாதாரண வியாதிகளில் ஒன்று. இதைத் தடுக்கவும், சொஸ்தப்படுத்தவும் செய்த எத்தனங்கள் யாவும் விருதாவாய்ப் போய்விட்டன. இந்த வியாதிக்கு வயது, ஆண், பெண் என்ற வித்தியாஸம், அந்தஸ்து, நபர் என்ற மரியாதை ஒன்றுமில்லை. இது சில நபர்களுக்கு எப்போதும் கூடவேயுள்ள துணைவன்போலிருக்கும். மற்றவர்களுக்கு எப்போதாகிலும் ஒழிந்த வேளையில் வந்து பார்த்துவிட்டுப்போகிற நண்பன். ஒரு வருஷத்தில் எப்போதாகிலும் ஒருதரம் ஜலதோஷம் பிடிக்கவில்லை என்று யாராவது சொன்னால், அவன் தைரியசாலியென்றே சொல்லவேண்டும். அது வருவது இடிவிழுவதுபோல் தெரியாமல் வந்துவிடும். சாதாரணமாய் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து, இரவில் வயிறார உண்டு ஒருவன் உல்லாஸத்தோடு படுக்கச் செல்லலாம். அந்த ஒரே இரவில் எல்லாம் மாறிப்போய் காலையில் எழுந்திருக்கும்போது தும்பல் தும்பிக்கொண்டும், மூக்கில் சளி கொட்டிக்கொண்டும், தேகமாத்தியந்தமும் ஒய்ச்சலுடனும் எழுந்திருப்பான். தாயின் மடியில் படுத்துக்கொண்டிருக்கும் சிசுவையும், தடியூன்றிக் கூனி நடக்கும் கிழவனையும் ஜலதோஷம் பிடிக்கும். எந்தக் காலத்திலும், எந்தத் தேசத்திலும், ஜலதோஷத்தால் ஜனங்கள் வருந்துவார்கள். போலி வைத்தியரோ, தேர்ச்சி பெற்ற வைத்தியரோ, நாட்டுப்புரத்திலுள்ள ஹகீமோ, வைத்தியரோ, இதைத் தடுக்கவோ, சொஸ்தம் செய்யவோ முடியாமல் தவிக்கிறார்கள்.

ஜலதோஷத்தின் காரணமும், அதன் மார்க்கமும்.

மூக்கிலிருந்து வரும் சளியை முறைப்படி தயாரித்து, பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்தால் ஜலதோஷப் பூச்சிகள் தென்படும். சாஸ்திரோக்தமாய்க் கற்றுத்தேர்ந்த டாக்டர்கள் ஜலதோஷத்திற்கு இப்பூச்சிகளே காரணம் என்று சொல்லுகிறார்கள். மூக்குத்துவாரங்களிலும், தொண்டையிலும், மேல் சுவாஸ சம்பந்தமான மார்க்கங்களிலும் இவை கணக்கில்லாமல் இருக்கின்றன. ஒரு ஜாலவித்தைபோல திடீரென்று இவை வேலை ஆரம்பித்து, ஆரம்பத்தில் நாசித்துவாரங்களை அடைத்துவிட்டு பின்னர் சளியாகக்கொட்டி ஜலதோஷம்பிடித்த நபரின் கைக்குட்டையை தொப்பமாய் நனைத்துவிடும். ஆரம்பத்தில் சளி, மெல்லியதாயிருக்கும். வரவர கட்டிப்போய் நாற்றமெடுத்து நோய் சாதாரணமானதாயிருந்தால், இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் அந்த நோயாளி யதாஸ்திதிக்கு வந்து, வெள்ளம்போய் மூக்கு உலர்ந்து அந்த இடத்தில் பொறுக்குத் தட்டிப்போகும். சில கேசுகளில் இந்நோயின் மார்க்கம் சாதாரணமாகவிருக்கிறதில்லை. எந்த நபர் வியாதிக்கு அனுகூலமாகவிருக்கிறானோ, அந்த நபரிடம் வியாதி பரவி, நாட்பட தங்கி, அவனுக்குக் கஷ்டத்தை விளைவிக்கிறது. கட்டிப்போன, கெட்டியாயுள்ள மஞ்சள் நிறம்போன்ற அச்சளியானது எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது. அதனால் அசௌகரியமும் ஓய்ச்சலும் ஏற்படுகிறது. இன்னும் சில கேசுகளில், ஆரம்பத்தில் பிடித்த ஜலதோஷமானது சில நாட்களில் சொஸ்தமாய்விடுகிறது. ஆனால், மறுபடியும் அடிக்கடி வந்துகொண்டே இருக்கிறது. இந்தக்கேசுகளிலும் விஷக்கிருமிகள் அடியோடே ஒழிகிறதில்லை. சுவாஸ மார்க்கங்களில் அவை பதிங்கிக்கொண்டேயிருந்து, சுவல்ப காரணத்தைக்கொண்டு, மறுபடியும் தம் தொழிலை ஆரம்பித்து விடுகின்றன. இதற்கு சதாயிருந்துகொண்டிருக்கும் ஜலதோஷம் என்று பெயர். இது அந்நபரின் ஆரோக்கியத்தைக் கெடுத்து, தக்க சிகிச்சை செய்யாத பக்ஷத்தில் சிக்கலான வியாதிகளில் கொண்டு போய் விட்டுவிடும்.

அனுகுணமான காரணங்கள்.

இந்த ஜலதோஷக்கிருமிகள் ஜலதோஷத்தை உற்பத்தி செய்யும் காரணங்களாகும். ஆனால் இவ்வியாதிக்கு சில அனுகுணமான காரணங்கள் உண்டு. இக்கிருமிகள் நோயாளியைத் தாக்குவதற்கு உதவியாகவிருக்கின்றன. தேகத்தில் பலக்குறைவும், வியாதியை எதிர்க்கும் சக்திக்குறைவும் இக்காரணங்களுள் முதன்மையானவை. நாட்பட்டவியாதி, களைப்பு, மனக்கவலை இருந்து, அதனால் ஒருவனுக்கு ஆரோக்கியம் குன்றிப்போயிருந்தால், அவன் இவ்வியாதிக்குச் சுலுவில் இரையாவான். மேலும், ஆரோக்கியமற்றதும், சுகாதாரமற்றதுமான சுற்றுப்புறங்கள், நெருக்கடியான வீடுகள், தொத்துவியாதியுள்ள மனிதன் வெளிவிட்ட காற்றை தான் சுவாஸித்தல், பள்ளிக்கூடங்கள், பொதுவிடங்கள், வீடுகள் இவைகளில் கண்டவிடத்தில் எச்சில் உமிழ்வதும், மூக்கு சிந்துவதும் இவ்வியாதியைப் பரவச் செய்வதற்கு அனுகுணமானவை. அசங்கியையான பழக்க வழக்கங்கள், ஜன்னல்களை மூடிவைத்து வீட்டிற்குள்ளேயே காலங்கழித்தல், வியாயாமக் குறைவு, உத்தீபனத்தையும் போதையையும் கொடுக்கக்கூடிய ஆகாரங்களையும், பானங்களையும் அதிகமாக எடுத்துக்கொள்ளுதல், அதிக உஷ்ணத்திலோ அதிக குளிரிலோ தன்னைக் காட்டிக்கொள்ளுதல் ஆகிய இவை யாவும் ஜலதோஷம் பிடிப்பதற்கு அனுகூலமாக விருந்து இக்கிருமிகள் எதிர்க்கும்போது, சளி ஜவ்வுகளுக்கு மிக்க உணர்ச்சியைக் கொடுக்கின்றன. இவையெல்லாம் ஒருபக்கமிருக்க ஒருவனுக்கு நாசித்துவாரத்தில் குறைகளிருந்தால் இந்த விஷக்கிருமிகள் பதுங்கிக் கொண்டிருப்பதற்கு அவை இடங்கொடுத்து, அந்த நபருக்கு ஜலதோஷத்தை உண்டுபண்ணுகின்றன.

சிகிச்சை

இதற்குச் சிகிச்சை, இதற்குக் காரணமாயுள்ள கிருமிகளையும், அனுகூலமான காரணங்களையும் ஒழிக்க முயல்வதே. ஆனால், இதைச் சுலபமாய்ச் சொல்லிவிடலாம்; செய்வதுதான் கஷ்டம். தேகக்குறைகள் ஏதாகிலுமிருந்தாலும் அவற்றை ஒழிக்கவேண்டும். ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய உபாயங்களைத் தேடவேண்டும். முகத்தையும் தலையையும் மப்ளர்போட்டு மூடிக்கொள்ளக்கூடாது. சர்மத்தையும், சளி ஜவ்வுகளையும் வலுப்படுத்தி, தேகத்தைத் திறந்துவைத்தபோதிலும், விஷக்கிருமிகள் அவைகளைத் தாக்காம

லிருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். ஆகாரம் சுவல்பமானதும், போஷணையுள்ளதாயுமிருக்கவேண்டும். ஆகாரத்தையும் பானத்தையும் மிதமாய் எடுத்துக்கொள்ளவேண்டும். வலுவையும், நோயை எதிர்க்கும் சக்தியையும் குறைக்கும் காரணங்களைத் தள்ளிவிடவேண்டும். நெருக்கடியான இடங்களைத் தவிர்க்கவேண்டும். வெளிக்காற்றில் களைப்பு வரவொட்டாதபடி, தினம் வியாயாமம் செய்யவேண்டும். குழந்தைகள், பெரியவர்கள் ஆகிய எல்லாருடைய தேகங்களையும், சூரியக்கிரணம் படும்படி காலையிலும், அஸ்தமிப்பதற்கு முன்னும் திறந்துவைக்கவேண்டும். அதனால் சர்மத்தின்கீழ் ஜீவஸத்துப் பொருள் உற்பத்தியாகி, அது தொத்து வியாதி பிடிக்கவொட்டாமல் தடுக்கும். இதற்குக் குறிப்பான சிகிச்சைகள் வேண்டுமானால், எத்தனைபேர்கள் ஜலதோஷத்தால் வருந்துகிறார்களோ, அத்தனை சிகிச்சைகள் உண்டென்று சொல்லலாம். ஜலதோஷத்தை நீக்கவோ, சொஸ்தம் செய்யவோ ஒவ்வொருவரும் ஒரு சிகிச்சை சொல்லுவார்கள். சிலர், பனிக்கட்டி ஜலத்தைக் குடித்தும், சிலர், உஷ்ண ஜலத்தில் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்துக் கரைத்து அதைக் குடித்தும் ஜலதோஷத்தை ஒழிப்பார்கள். சிலர், ஒரு டோஸ் பிராந்தியும், உஷ்ண ஜலமும் குடிப்பார்கள். சிலர், ஸ்பிரிட் கற்பூரத்தைக் கொஞ்சம் சர்க்கரையில்விட்டு, ஜலதோஷம் ஆரம்பமாகிற சமயத்தில் அதை உபயோகிப்பார்கள். அபினிப்பற்று, புளிப்பற்று, கற்பூரம் மூக்கிலும் நெற்றியிலும் முகருதல், தடவுதல் ஆகிய இவைகள் சிலருக்குப் பிரியம். இச்சிகிச்சைகள் யாவும் சாதாரண கேசுகளில் பிரயோஜனப்படும். இதுவுமன்றி, வாயையும் தொண்டையையும் மிகவும் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். படுக்கும்போது சாதாரணமாய் (உஷ்ணமான) உப்பு கலந்த ஜலத்தைக் கொப்பளித்தும், மூக்கை செவ்வையாய் உள்ளங்கையில் ஜலத்தை விட்டுக்கொண்டு அலம்புவதும் மிகவும் உபயோகமானவை.

அடிக்கடி ஜலதோஷம் பிடிப்போர், இந்த முறைகளை அனுசரிப்பதுபோக தக்க உணவினால் தேகத்தில் வியாதியை எதிர்க்கும் சக்தியை பலப்படுத்திக்கொண்டு, டாக்டர்களைக்கொண்டு தக்க மருந்துகளைச் சாப்பிடவேண்டியது.

நீடித்த ஜலதோஷத்தினால் வரும் வியாதிகளும், அவற்றின் சிக்கல்களும், அவற்றிற்குத் செய்யவேண்டிய சிகிச்சைகளும் இந்த வியாஸத்தில் சம்பந்தப்பட்டவையல்ல.

வணக்கமும் இமாம்களின் விரித்துரைகளும்

நமது தேயத்தில் இமாமுனல் அஃலம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களைப் பின்பற்றிய 'ஹனபி'களும், இமாமுனா ஷாபியீ (ரஹ்.) அவர்களைப் பின்பற்றிய 'ஷாபி'களும் ஏராளமாக வசித்து வருகின்றனர். ஹனபிகள், ஷாபி மத்ஹபின் சட்ட திட்டங்களைத்தெரிந்துகொள்ளாததினால் அநேக சமயங்களில் மஹா கஷ்டமடைய நேரிடுகிறது. இதேபோல் ஷாபிகளுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. ஒருஹனபி, ஷாபிகள் இருக்கும் நகருக்குச் சென்றால், தொழுகையிலும், மற்றும் இதர வணக்கங்களிலும் அவர்களுடன் எவ்வாறு சேர்ந்துகொள்வது? ஹனபி இமாம் ஷாபிகளுக்குத் தொழவைத்தால், ஷாபி மத்ஹபின், பர்லு, வாஜிபு, ஸுன்னத்து முதலியவைகளை எங்ஙனம்பேணி நடந்துகொள்வது? என்பனபோன்ற விஷயங்களில் மஹா கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆதலால் முக்கியமான, பர்லு, வாஜிபு, ஸுன்னத்து முதலியவைகளில் நான்கு மத்ஹபுகளின் கட்டளைகள் என்னவென்ற விபரங்களைத் தொடராக வரையநாடி, முதன் முதலாக 'ஒலு' வென்ற அர்த்த ஸ்நானத்தைப்பற்றி வரைகின்றேன். இவ்விஷயங்களுக்கு மார்க்க அறிஞர்களான பல மேதாவிகளின் கிரந்தங்

களை ஆதாரமாகக் கொண்டுள்ளேன். ஆதலின், அன்பர்கள் அன்புடன் வாசித்து பயன் பெறுவார்களென்று நம்புகிறேன்.

ஒலு (= அர்த்த ஸ்நானம்)

இந்த ஒலுவைப்பற்றி இறைவன் தனது திருமறையில் பின்வருமாறு கட்டளையிட்டுள்ளான். அதாவது :— "ஏ விஸ்வாஸிகாள்! நீங்கள் தொழுகைக்காக நின்றால் நுங்களின் முகங்களையும், முழங்கைவரையில் நுங்களின் கைகளையும் கழுவிக்கொள்ளுங்கள்; இன்னும் நுங்களின் தலைகளை (தண்ணீரால்) தடவிக் கொள்ளுங்கள்; மேலும், நுங்களின் கால்களை இருகரண்டை வரையிலும் (கழுவிக்கொள்ளுங்கள்). (குர்ஆன். 5, 6.)

சகோதரர்களே!

அல்லாஹுத்தஆலா வொலுவுடைய பர்லு (= கடமை) கள் நான்கு என்பதாக இவ்வாயத்தில் தெளிவாகக் கூறியுள்ளான். மேலும், ஒலுவுடைய பர்லுகள் நான்கிற்கு குறைவாக இல்லையென்பதின்மீது நமது வழிகாட்டிகளாகிய இமாம்கள் அனைவரும் ஒற்றுமையான அபிப்பிராயமுடையவர்களாயிருக்கின்றனர்.

ஒலுவில் முதலாவது பர்லு (= கடமை) முகத்தைக் கழுகிறது. அதாவது, நீளத்தில் தலை ரோமம் முளைக்குமிடத்திலிருந்து நாடிக் குழிவரையிலும், அகலத்தில் ஒரு காதிலிருந்து மற்றொரு காதுவரையிலும் ஒரு ரோமத்தின் அளவாவது விட்டுவிடாதபடி கழுவுகிறது கடமையாகும். இரண்டாவது, இரண்டு கைகளையும் முட்டுக்கை உள்பட கழுகிறது கடமையாகும். மூன்றாவது, தலையை மஸஹு (= தடவுகிறது) கடமையாகும். இந்த மூன்றாவது கடமையில் தலையை எந்த அளவு தடவுகிறது என்ற விஷயத்தில் பாரவான்களாகிய இமாம்களுக்குள் அபிப்பிராயப் பேதம் இருக்கிறது. அதாவது, இமாமுனல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் அபிப்பிராயப்படி தலையின் கால் பாகத்தை மஸஹு செய்கிறது கடமையாகும். ஆனால், தலைமுழுவதையும் மஸஹு செய்கிறது ஸுன்னத்தாகும். இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி தலைமுழுவதையும் மஸஹு செய்கிறது கடமையாகும். இதில் ஒரு ரோம அளவாவது விட்டுப்போனாலும் ஒலு பூர்த்தியாகாது. இமாம் அஹ்மது (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி தலைமுழுவதை தடவுவது கடமையென்றாலும் பெண்கள் சிரசில் சிலதை மஸஹு செய்தாலும் ஒலு பூர்த்தியாகிவிடும். இமாம் ஷாபிஈ (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி தலையைச்சார்ந்த ஒரு ரோமத்தை மஸஹு செய்தபோதிலும் கடமை நிறைவேறிவிடும். ஆயினும், தலைமுழுவதையும் மஸஹு செய்வது ஸுன்னத்தாகும். நான்காவது, இருகால்களைக் கணுக் கால் உடன் கழுகிறது கடமையாகும்.

மேலும், இந்நான்கு பர்லு (= கடமை) களைத் தவிர வேறு சில பர்லுகளுமிருப்பதாக, இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களைத் தவிர மற்றவர்கள் கூறியுள்ளார்கள். அதைப்பற்றிய விபரங்களைக் கீழே தருகின்றேன் :—

(1) நிய்யத்து (மனதில் கூறிக்கொள்வது) மூன்று இமாம்களின் அபிப்பிராயப்படி மனதில் 'நான் தொழுகைக்காக இறைவனின் கட்டளைப்படி ஒலு (= அர்த்த ஸ்நானம்) செய்கிறேன்' என்று நினைத்துக் கொள்வது பர்லாகும். இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி நியத்துச் செய்வது ஸுன்னத்தாகும். மேலும், மற்ற இரண்டு இமாம்களின் அபிப்பிராயப்படி மனதில் நினைத்து நாவினால் மொழிகிறது முஸ்தஹப்பாஹும் (= போற்றத்தக்கதாகும்). இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி நிய்யத்தை (—மனதில் நினைப்பதை) நாவால் மொழியாமல் இருத்தல் அப்ஜல் —(மேன்மை) ஆகும்.

(2) தர்த்தீபு (—ஒழுங்கு) இது இமாம் ஷாபிஈ (ரஹ்.), இமாம் அஹ்மது (ரஹ்.) இவர்களின் அபிப்பிராயப்படி பர்லாகும். அதாவது; கடமைகளின் பிரகாரம் முதன்முதலாக முகத்தையும், இரண்டாவதாக கைகளையும் மூன்றாவதாக தலையையும் நான்காவதாக கால்களையும் தொடராக ஒன்றன்பின் ஒன்றாகக் கழுகுவது பர்லாகும். இமாம் அபூஹனீபா (ரஹ்.) இமாம்மாலிக் (ரஹ்.) இவர்களின் அபிப்பிராயப்படி இவ்வாறு கழுகுவது ஸுன்னத்தாகும்.

(3) முவாலாத் (—ஒரு உறுப்பைக் கழுவிய பின், அவ்வுறுப்பு காய்ந்து போகுமுன் அடுத்த உறுப்பைக் கழுகுவது) அங்கங்களை தொடர்பிடியாக கழுகிறது இமாம் மாலிக் (ரஹ்.), இமாம் அஹ்மது (ரஹ்.) இவர்களின் அபிப்பிராயப்படி பர்லாகும். இமாம் அபூஹனீபா (ரஹ்), இமாம் ஷாபிஈ (ரஹ்.) இவர்களின் அபிப்பிராயப்படி ஸுன்னத்தாகும்.

(4) தல்கு (=தேய்த்துக் கழுகுதல்) அதாவது ஒவ்வொரு உறுப்புகளையும் கையினால் தேய்த்துக் கழுகுதல் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களிடத்தில் பர்லாகும். இதர மூன்று இமாம்களிடத்தில் முஸ்தஹப்பாகும் (—போற்றத்தக்கதாகும்).

(5) மள்மளா, இஸ்தின்ஷாக். வாய் அலம்புகிறது, நாசிக்குத் தண்ணீர் செலுத்துகிறது இமாம் அஹ்மது (ரஹ்.) அவர்களிடத்தில் பர்லாகும். இதர இமாம்களிடத்தில் ஸுன்னத்தாகும்.

நான்கு இமாம்களின் ஏகோபித்த அபிப்பிராயப்படி நோன்பு நோற்காதவர்கள் வாய் அலம்பும்போழ்து தொண்டைக்குழிவரை தண்ணீரை எத்திவைக்கிறதும், நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போழ்து நாசித்துவாரங்களின் கடைசிவரைக்கும் தண்ணீரை எத்திவைக்கிறதும் முஸ்தஹப்பாகும். இன்னும் இமாம் அபூஹனீபா (ரஹ்.) இமாம் மாலிக் (ரஹ்.) இவர்களின் அபிப்பிராயப்படி மூன்று தடவை சுத்தமான தண்ணீரை நாசிக்குச் செலுத்துகிறதும், வாய் அலம்புகிறதும் இன்னும் இரண்டிற்கும் முறையே மும்மூன்று தடவை வெவ்வேறு தண்ணீரை உபயோகித்தலும் மேலாகும். இமாம்ஷாபிஈ (ரஹ்.) அவர்கள் அபிப்பிராயப்படி ஒரு சிறங்கை தண்ணீரைக்கொண்டே நாசிக்கு தண்ணீர் செலுத்துவதுடன் வாய் அலம்பலும் மேலாம். இன்னும், மூன்று தடவையும் சுத்தமான தண்ணீரெடுக்கல் வேண்டும். இன்னும், இமாம் அஹ்மத் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி ஒரு சிறங்கைத் தண்ணீரைக்கொண்டே மூன்று தடவை நாசிக்கி தண்ணீர் செலுத்தலும், மூன்று தடவை வாயை அலம்பலும், அல்லது மூன்று தடவையைக்கொண்டு அல்லது ஆறு தடவை புதிதான தண்ணீரை உபயோகிப்பதும் அவன் இஷ்டப்படி செய்யலாம். இன்னும் இமாம் அஹமத் (ரஹ்) அவர்களின் கோட்பாட்டின்படி உலூஉ ஆரம்பிக்கும்பொழுது, 'பிஸ்மில்லாஹ்' சொல்வது பர்லு ஆகும். இதர இமாம்களின் அபிப்பிராயப்படி ஸுன்னத்தாகும். ஆகவே இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி ஒலுஉவின் பர்லுகள் ஆறாகும். இன்னும் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி உலுஉவின் பர்லு ஏழாகும். இன்னும் இமாம் அஹ்மத் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி உலுஉவின் பர்லு பத்தாகும்.

நான்கு இமாம்களின் (ரஹ்.) அபிப்பிராயப்படி எப்பொழுதும் பல் தீட்டுதல் ஸுன்னத்தாகும். ஆனால் ஷாபிஈ இமாம் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி நோன்பாளிகள் (ஸவாலுக்குப் பின்) சூரியன் சாய்ந்த பின்னால், அதாவது 12 மணிக்குப்பிறகு பல் தீட்டுகிறது மக்ரூஹாகும். இன்னுமொரு சொல்படி இமாம் அஹ்மது (ரஹ்.) அவர்கள் கோட்பாட்டின்படியும் மக்ரூஹாகும். ஆனால் இமாம் அஹ்மது, இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக் (ரஹ்.) இவர்களின் கோட்பாட்டின்படி மக்ரூஹில்லை, பல்குச்சி இல்லாவிட்டால் 'ஷஹாதத்' விரலினால் பற்களைத் தீட்டுவான்.

இன்னும் நான்குஇமாம்களின்கோட்பாட்டின்படி கெண்டைகை உள்பட கழுகுதலும், ஒவ்வொருஉருப்புவையும் மும்மூன்று தடவை கழுகிறதும்ஸுன்னத்தாகும். இமாம்ஷாபிஈ (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி சிரசின் மீதும் மூன்று தடவை 'மஸஹு' செய்தல் ஸுன்னத்தாகும். மற்ற மூன்று இமாம்களின் அபிப்பிராயப்படி மூன்றுதடவை தலையை 'மஸஹு' செய்வது ஸுன்னத்தில்லை. இன்னும் இமாம் ஷாபிஈ (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி காதுகளையும் மூன்று தடவை மஸஹு செய்வது ஸுன்னத்தாகும். மற்ற மூன்று இமாம்களின் அபிப்பிராயப்படி ஒரு தடவை மஸஹு செய்வது போதுமானது. இன்னும் இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி தலைக்கு மஸஹு செய்ய எடுத்த தண்ணீரின் ஈரத்தினால் காதுகளை மஸஹு செய்ய வேண்டும். இன்னும் மற்ற மூன்று இமாம்களின் அபிப்பிராயப்படி புதிதாக தண்ணீர் எடுத்து மஸஹு செய்வது ஸுன்னத்தாகும்.

இன்னும் நான்கு இமாம்களிடமும் அடர்ந்த தாடியையும், கால் விரல்களையும் கோதிக் கழகுதல் ஸுன்னத்தாகும். இன்னும் இமாம் மாலிக் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி, கைவிரலினால் கால்விரல்களை கோதிக் கழுகுதல் வாஜிபாகும். இதர மூன்று இமாம்களின் அபிப்பிராயப்படி ஸுன்னத்தாகும். இன்னும், நான்கு இமாம்களின் அபிப்பிராயப்படி ஒவ்வொரு உருப்பையும் கழுகும்பொழுது வலது உருப்பைக்கொண்டு ஆரம்பிக்கிறது ஸுன்னத்தாகும். உதாரணமாக வலது கையை முந்திக் கழுகுவான். பிறகு இடது கையைக் கழுகுவான். இதேபோல் வலது காலை முந்தியும் இடது காலைப் பிந்தியும் கழுகுவான்.

(தொடரும்.)

ஆங்கில அரிய நூல்கள்

மீரட், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ முஹம்மது அப்துல் ஆலீம் சாகிப் ஸித்தீக்கி அவர்கள் அறபியிற் றேர்ந்த பண்டிதராக இருப்பதுமல்லாமல் ஆங்கிலக்கல்வியிலும் உயர்தரப் பட்டப் பரீக்ஷையிற்றேர்ந்த மேதாவி என்பதும், ஜப்பான், ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா, மலாயா முதலிய தூர தேசங்கள் சென்று மார்க்கோபன்யாசம் புரிந்து வருவதும், இவர்களது அரிய உபன்யாசங்களைக் கேட்ட நூற்றுக்கணக்கான மேதாவிகள் இஸ்லாத்திற் சேர்ந்து வருவதும் உலகப் பிரசித்தம். மௌலானா அவர்கள் இஸ்லாத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இந்நூற்கள், ஆங்கிலங் கற்றவர்களுக்கு தக்க பிரயோஜனம் அளிப்பதாக இருப்பதால், அன்பர்கள் இவைகளை வாங்கிப் படித்துப் பிரயோஜனம் அடைவார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

புத்தகங்களின் விபரம்.	Rs.	A.
1. First Teachings of Islam	1	4
2. The Elementary Teachings of Islam	0	8
3. A New Muslim World in Making	0	8
4. A Shavian meets a Theologian	0	3
5. Deeni Omoomi (Urdu)	0	2

கிடைக்குமிடம் :— மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா பணத்தை வருட ஆரம்ப[த்தில்] கொடுத்து, அரும்மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது உங்க[ளெல்]லோருக்கும் தெரியாத விஷயமன்று. இந்நிலைமையில் அநேக சந்தா[தார]கள், சென்ற வருடத்திய சந்தா ரூபாயை இதுவரை அனுப்பிக் கொ[டுக்]காமலே அசட்டையாக இருந்து வருகின்றார்கள். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பாக்கிகளை தாமதமின்றி நேரில் நமக்காவது, அல்லது அவ்விடத்திய நமது ஏஜண்டு மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர், (220, 2-ம் குறுக்கு தெரு) அவர்கள் மூலமாவது அனுப்பிக் கொடுத்து உதவி புரிவார்களென எதிர்பார்க்கிறோம். வி.பி. செய்வதுகொண்டு வீண்செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ... சென்னை-600 008

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள் :—

மெஸ்ஸர்ஸ் A. M. K. ஹாஜி ஸ்டோர்,
220, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப் அவர்கள்,
144, கைஸர் ஸ்டீட், கொழும்பு

ஜனாப் M. O. முகம்மது யூசுப் அவர்கள்,
45, குயின் ஸ்டீட், பினங்[கு]

ஜனாப் S. முகம்மது அப்துல்காதிர் அவர்கள்,
No. 30, பஜார், முன்னா[ர்]

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T. Madras.